REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 மே 3 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
90 ANNIVERSARY 1932 - 2022
வரு. 90 இல. 102 | Tuesday 03, May, 2022 | 16 பக்கங்கள் | 40/-




## மதங்கள் போதிக்கும் சமூகக் கோட்பாடுகளை பின்பற்றுவோம்

### ரமழான் செய்தியில் ஜனாதிபதி



மதங்கள் போதிக்கும் சமூகக் கோட்பாடுகளை சமூக நலனுக்கான செய்திகளாகப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளதென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ரமழான் வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஒரு மாதகால நோன்பை முடித்துக் கொண்டு இஸ்லாமிய

06

## சவால்மிக்க காலத்தில் தியாக உணர்வுடன் செயற்படுவோம்

### பிரதமர் மஹிந்த ரமழான் வாழ்த்துச் செய்தி



முழு நாடும் சவால்மிக்கதோர் காலகட்டத்தில் உள்ள இத்தருணத்தில் தியாக மனப்பாங்குடன் செயற்படுவோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள ரமழான் வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உலகம் முழுவதும் பரந்து வாழும் இஸ்லாமியர்களுடன் இணைந்து ஈத்உல்ஃபித்ர் பெருநாளைக் கொண்டாடும்

06




# இடைக்கால அரசை அமைக்க SLPP, சுயாதீன குழுவும் இணக்கம்

### ஜனாதிபதியுடனான சந்திப்பில் இருதரப்பும் ஒரே நிலைப்பாட்டில்

**அரசுக்கு முன்வைத்த பதினொரு யோசனைகளை நடைமுறைப் படுத்துவது குறித்தும் இணக்கம் காணப்பட்டது**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் வகையில் இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பான மற்றுமொரு முக்கிய பேச்சுவார்த்தை நேற்றைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றது.

06

## மானிட சுபீட்ச வாழ்வுக்கு வழிவகுக்கும் நாளாகட்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ரமழான் செய்தி



மானிட சுபீட்ச வாழ்வுக்கு வழிவகுக்கும் நாளாகவும் தாய்நாட்டைக் கட்டியெழுப்பும் உறுதியும் கொண்ட நாளாகவும் இந்த ரமழான் பெருநாள் அமையட்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது ரமழான் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவரது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பது,

உலகெங்கிலும் உள்ள இஸ்லாமியர்கள் ஒரு மாதகாலம் நோன்பை நோற்று பிறை கண்டதும்

06

## 13ஆவது திருத்த சட்டமூலம்:

## விரைவில் நடைமுறைப்படுத்த சாத்தியமான நடவடிக்கைகள்



### யாழ்ப்பாணத்தில் தமிழக பாஜக தலைவர்

**லோரன்ஸ் செல்வநாயகம்,**

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழக பாஜக கட்சியின் தலைவர் அண்ணாமலை யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.


இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அவர் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து நல்லூர்

06

**சவால்களை எதிர்கொள்ள அத்தியாவசியம் தவிர்ந்த**

## அனைத்து அரச செலவினங்களும் கடுமையான கட்டுப்பாட்டுக்குள்!

### அமைச்சரவைக்கு அமைச்சர் அலி சப்ரி பிரேரணை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு முகங்கொடுத்துள்ள சவால்களை எதிர் கொள்ளும் வகையில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து அரச செலவினங்களையும் கடுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டியுள்ளதாக

06

## மத்திய அரசின் ஊடாக உதவிப் பொருட்களை வழங்க அனுமதி

### தமிழக முதல்வருக்கு ஜெய்சங்கர் விரிவான கடிதம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொருளாதார நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ள இலங்கைக்கு தமிழ் நாடு அரசு நிவாரண உதவியைப் பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ள நிலையில்

06

## உயர்ந்த மனித குணங்களால் ஒளிரும் நாளாக மாற வேண்டும்

### அமைச்சர் அலி சப்ரி வாழ்த்துச் செய்தி



ரமழான் பண்டிகை உலக வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் ஆன்மீக சுகத்தை அளிக்கும், மேலும் உலகம் முழுவதும் உயர்ந்த மனித குணங்களால் ஒளிரும் நாளாக மாற வாழ்த்துவதாக நிதி மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். ரமழான் பண்டிகை வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இஸ்லாமிய நாட்காட்டியின் ஒன்பதாவது மாதம்

06

## நல்லமல்களில் நம்பிக்கை வைத்து நாட்டுக்காக நாம் பிரார்த்திப்போம்

### பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் நஸீர் அஹமட்



அருள்பொழிந்த புனித மாதத்தில், நாம் செய்த நல்லமல்கள் இன்னும் இதர நற்செயல்களை எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா பொருந்திக் கொள்ள பிரார்த்திப்பதாக சுற்றாடல் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

நோன்பு பெருநாள்வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளதாவது,

06

**தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில்**

## புதிய பிரதமராக யார் வந்தாலும் நாட்டில் எந்த மாற்றமும் ஏற்படாது



### பிரதமருக்கு எதிராக கோஷமெழுப்புவதில் பிரயோசனமில்லை

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை மற்றும் அரசியல் ஸ்திரமற்ற நிலையில் யார் புதிய பிரதமராக வந்தாலும் நாட்டில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படப்போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (திங்கட்கிழமை) அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது, யார் பிரதமராக வந்தால் நாட்டில் மாற்றம் ஏற்படலாம் என நீங்கள் கருதுகிறீர்கள் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

06

தேர்தல்களில் வெற்றி பெற்று

## அதிகாரத்தை தக்கவைக்க உண்மைகள் மறைப்பு

ஈஸ்டர் தாக்குதல் குறித்து பேராயர் காட்டம்



03



## நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை பாராளுமன்றத்தில்

எதிர்க்கட்சி MPக்கள் சஜித் தலைமையில் கூடி தீர்மானம்

03




## எரிபொருள் பௌசர் உரிமையாளர்களின் வேலை நிறுத்த போராட்டம் நேற்று கைவிடப்பட்டது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தனியார் எரிபொருள் பௌசர் உரிமையாளர் சங்கத்தினால் கடந்த இரு தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று கைவிடப்பட்டது.

சங்கத்தின் செயலாளர் டி.வி. சாந்த சில்வா நேற்று அது தொடர்பில் தெரிவிக்கையில்:

பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் நேற்று மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் காணப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமையவே

06

## "ஆவா" குழுவை சேர்ந்த 16 பேர் ஓமந்தையில் கைது



**பொலிஸார் அதிரடி; விசாரணை தொடர்கிறது**

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, ஓமந்தை பகுதியில் ஆவா குழுவின் பதாகைகள் மீட்கப்பட்டதுடன், 16 பேரை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தை, கோதாண்டர் நொச்சிக்குளம் பகுதியில் ஆவா குழு என பெயரிடப்பட்ட பதாதைகளுடன் 40 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் நேற்று முன்தினம் (01) மாலை கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இது தொடர்பில் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து படையினர் அப்பகுதிக்கு சென்ற போது சிலர் தப்பியோடியதுடன் 16 பேர் கைது

06

## தடுப்பூசி அட்டை குறித்து புதிய 'கசெட்'



### சுகாதார அமைச்சரால் வெளியீடு

கொவிட் தடுப்பூசியை முழுமையாகக் பெற்றுக் கொண்டமைக்கான அட்டையின்றி பொது இடங்களுக்குச் செல்ல முடியாது எனத் தெரிவித்து வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

'ஏப்ரல் 30 ஆம் திகதியிலிருந்து பொது இடங்களுக்குச்

06



# சர்வதேச செய்திகள்

## தாயின் காரை ஓட்டிய நான்கு வயது சிறுவன்



நெதர்லாந்தில் நான்கு வயது சிறுவன் ஒருவன் தனது தாயின் காரை ஓட்டிச் சென்று அதனை நிறுத்தி இருந்த கார்கள் மீது மோதவிட்டுள்ளான்.

அந்த சிறுவன் கடந்த சனிக்கிழமை இரவு வாகனத் தரிப்பிடத்தில் இருந்த இரு கார்கள் மீது மோதவிட்டபின், இரவு ஆடையுடன் வெறுங் காலோடு அங்கிருந்து வெளியேறி சென்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளிருக்கு மத்தியில் வீதியில் தனியாகச் செல்லும் அந்த சிறுவனை கண்ட பாதசாரிகள் பொலிஸாரை அழைத்துள்ளனர். இந்த சம்பவத்தில் சிறுவன் உட்பட எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

அங்கு விரைந்த பொலிஸார் சிறுவனின் தாயாரை தொலைபேசியில் அழைத்து, சிறுவனை பேசவைத்த போது அவன், கார் செயல்படும் சத்தங்களை எழுப்பியதாகவும் காரின் திருப்பு வளையத்தைத் திருப்புவதுபோல் சைகை காட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்மூலம் அந்தக் காரை சிறுவனே செலுத்தி இருப்பதை பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

## ரஷ்ய முற்றுகையில் இருந்து மேலும் மக்கள் வெளியேற்றம்



உக்ரைனின் மரியுபோல் நகரின் முற்றுகையில் உள்ள உருக்கு ஆலையில் இருந்து சுமார் 100 பொதுமக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். உக்ரைன் போரில் பெரும் அழிவை சந்தித்திருக்கும் இந்த நகரில் உக்ரைனிய படையினர் கட்டுப்பாட்டில் இருக்கும் கடைசி பகுதியான இந்த உருக்கு ஆலையில் இருந்து பொது மக்களை வெளியேற்றுவது குறித்து ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தால் உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது.

வெளியேற்றப்பட்ட மக்கள் உக்ரைன் கட்டுப்பாட்டு நகரான சபொரிசியாவை வந்தடைவார்கள் என்று அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்த உருக்கு ஆலையில் உள்ள எஞ்சிய பொதுமக்களையும் வெளியேற்றுவதற்கு ஐ.நாவுடன் இணைந்து உக்ரைன் பணியாற்றுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த உருக்கு ஆலையில் இருந்து 80 பொதுமக்களே வெளியேற்றப்பட்டதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தள்ளது. 'உக்ரைன் அரசு கட்டுப்பாட்டுக்கு செல்ல விரும்புபவர்கள் ஐ.நா மற்றும் செஞ்சிலுவை சங்க பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டனர்.

மரியுபோலில் இருந்து எத்தனை பேர் வெளியேற்றப்பட்டார்கள் என்பது பற்றி ஐ.நா எந்த தகவலையும் கூறவில்லை என்பதோடு இரு தரப்பும் மாறுபட்ட எண்ணிக்கையை வெளியிட்டிருப்பது பற்றி விளக்கம் அளிக்கப்படவில்லை.

இரு மாதங்களாக தான் சூரிய வெளிச்சத்தைப் பார்க்கவில்லை எனவும், தான் உயிர்பிழைக்க மாட்டேன் என எண்ணியதாகவும், அங்கிருந்து வெளியேறிய பெண் ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆலையில் 1,000க்கும் அதிகமான பொதுமக்களும் சில நூறு காயமுற்ற படை வீரர்களும் இருப்பதாக நம்பப்படுகிறது.

இந்த உருக்கு ஆலையில் இருந்து ஏற்கனே 20 பொதுமக்கள் வெளியேற்றப்பட்டனர். மரியுபோலை கைப்பற்றிய ரஷ்யா, உக்ரைன் படையினர் சிக்கி இருக்கும் இந்த உருக்கு ஆலை பகுதியை முற்றுகையிட்டுள்ளது.

## பாகிஸ்தானில் இருந்து சீனர்கள் வெளியேற்றம்



சீன நாட்டவர்கள் மூவர் கொல்லப்பட்ட கராச்சி பல்கலைக்கழக தாக்குதலை அடுத்து கராச்சி நகரில் இருந்து பெரும் எண்ணிக்கையா ன சீனர்கள் வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

கராச்சி விமான நிலையத்தில் இருந்து பாதுகாப்பு அங்கி அணிந்த பெரும் எண்ணிக்கையான சீனர்கள் வெளியேறுவதைக் காட்டும் வீடியோ ஒன்று சமூக ஊடகத்தில் பிரபலமடைந்துள்ளது.

கராச்சி பல்கலைக்கழகத்தின் கன்பூசியஸ் நிறுவகத்திற்கு வெளியே கடந்த வாரம் இடம்பெற்ற தற்கொலை தாக்குதலில் மூன்று சீன நாட்டவர்கள் உட்பட நால்வர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு சீனா கடும் கண்டனத்தை வெளியிட்டது.

## செம்மஞ்சள் நிறமாக மாறிய ஈராக் வானம்



ஈராக்கின் பெரும்பகுதியை பாரிய புழுதிப் புயல் தாக்கிய நிலையில் செம்மஞ்சள் தூசி காரணமாக வானம் செம்மஞ்சள் நிறமாக மாறியுள்ளது.

இதனால் தலைநகர் பக்தாத் மற்றும் நஜாபில் விமானப் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலை இன்று செவ்வாய்க்கிழமை வரை நீடிக்கும் என்று காலநிலை அறிவிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.


காலநிலை மாற்றம் மற்றும் நிலம் மற்றும் நீர் தொடர்பிலான தவறான முகாமைத்துவம் காரணமாக மத்திய கிழக்கில் புழுதிப் புயல் அதிகரித்து வருவதாக நிபுணர்கள் குறைகூறுகின்றனர்.

கடந்த சனிக்கிழமை ஈராக்கில் சில பகுதிகளில் 500 மீற்றருக்கு குறைவான தூரத்தையே பார்க்க முடியுமாக இருந்துள்ளது.

ஈராக்கில் கடந்த மாதமும் மோசமான புழுதிப் புயல் தாக்கியதோடு சுவாசப் பிரச்சினையால் பலரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டி ஏற்பட்டது.

வரட்சி, பாலைவனமாதல் மற்றும் மழை வீழ்ச்சி குறைவு காரணமாக ஈராக்கில் அதிக அதிகமாக புழுதிப் புயல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக ஈராக்கிய வானிலை ஆய்வு மையம் முன்னதாக குறிப்பிட்டிருந்தது.

## பிலிப்பைன்ஸ் தீயில் சிறுவர் உட்பட எண்மர் உயிரிழப்பு



பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவுக்கு அருகில் பல வீடுகளில் பரவிய தீயில் ஆறு சிறுவர்கள் உட்பட எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக் காலை ஏற்பட்ட இந்தத் தீயில் 80 வீடுகள் அழிந்துள்ளன. கியுசோன் நகரில் உள்ள பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தின் பரந்த வளாகத்திற்குள் இருக்கும் சனநெரிசல் கொண்ட குடியிருப்பு ஒன்றின் இரண்டாவது மாடியிலேயே இந்தத் தீ ஆரம்பித்துள்ளது.

தீக்கான காரணம் உறுதி செய்யப்படவில்லை.

தீயை அணைப்பதற்கு சுமார் இரண்டு மணி நேரம் எடுத்துக் கொண்டதாக மூத்த தீயணைப்பு அதிகாரி கரேக் பிச்சயாடா ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

## 'சிந்தியில்' அமெரிக்க வனொலிக்கு அழுத்தம்




பாகிஸ்தானின் சிறுபான்மையினரான சிந்தி சமூகத்தினருக்காக சிந்தி மொழியில் அமெரிக்க வானொலி சேவையை நடத்தும்படி அமெரிக்க இராஜாங்கச் செயலாளருக்கு அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் பிராட் ஷர்மான் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நடவடிக்கைக்காக வொயிஸ் ஒப் அமெரிக்காவை இணங்கச் செய்ய தாம் முயன்றதாகவும், அது நிதி வழங்கல் உட்பட அனைத்து சலுகைகளையும் புறக்கணித்ததாகவும் ஷர்மான் குறிப்பிட்டார்.

'உருது போன்று சிந்தி மொழியிலும் பாகிஸ்தான் மக்களை அடைவதற்கு வொயிஸ் அமெரிக்கா வகை செய்ய வேண்டும்' என்று அவர் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.




## அமெரிக்காவில் கைதியுடன் சிறை காவலர் தப்பியோட்டம்



அமெரிக்காவில் கொலை குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள கைதி ஒருவருடன் சிறைக் காவல் அதிகாரி ஒருவரும் காணாமல்போயுள்ளார். அவர்களை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

கெசி வைட் என்ற கைதியும் விக்கி வைட் என்ற சிறைக் காவலரும் அலபாமாவில் உள்ள லோடர்டாலே கௌன்டி ஷெரிப் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலையிலேயே கடைசியாக காணப்பட்டுள்ளனர்.

உளவியல் மதிப்பீடு ஒன்றுக்கு அந்தக் கதியை அழைத்துச் செல்வதாக கூறியே காவல் அதிகாரி அவரைக் கூட்டிச் சென்றுள்ளார். ஆனால் அது திட்ட அட்டவணையில் இருக்கவில்லை என்பதை அதிகாரிகள் பின்னரே கண்டுபிடித்துள்ளனர். இந்நிலையில் வைட் கைதியை தப்பவைக்க உதவினாரா அல்லது அவர் பணயக் கைதியாக பிடிக்கப்பட்டுள்ளாரா என்பது பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கெசி வைட்டை பிடிப்பதற்கும் விக்கி வைட் இருக்கும் இடத்தை அடையாளம் காண்பதற்கும் தகவல் அளிப்பவர்களுக்கு 10,000 டொலர் சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3 பில். டொலர் உதவி: சவூதியுடன் பாக். பேச்சு



பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடிக்கு உதவும் சவூதி அரேபியாவின் 3 பில்லியன் டொலர் கடனுக்கான விதிகளை நீடிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக இரு நாடுகளும் அறிவித்துள்ளன.

சவூதி அரேபியா பாகிஸ்தானின் நெருங்கிய நட்பு நாடு என்பதோடு அந்நாட்டுக்கு தொடர்ச்சியாக நிதி உதவிகளை வழங்கி வருகிறது.

இந்நிலையில் பாக். புதிய பிரதமர் ஷெஹ்பாஸ் ஷரிப், சவூதி அரேபியாவுக்கு விஜயம் மேற்கொண்ட நிலையிலேயே புதிய ஆதரவு பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. பாகிஸ்தான் தேசிய கடன் நெருக்குதலுக்கு உள்ளாகி இருப்பதோடு பணவீக்கமும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் இரு நாடுகளும் வெளியிட்ட கூட்டு அறிவிப்பில், 'பாகிஸ்தான் பொருளாதாரத்திற்கு சவூதி தொடர்ந்து உதவும் என்பதோடு மத்திய வங்கியில் 3 பில்லியன் டொலர் வைப்புத் தொகையை நீடிப்பது அல்லது வேறு வழிகளில் அதிகரிப்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரஷ்ய உளவு விமானம் பற்றி சுவீடன், டென்மார்க் கவலை



ரஷ்ய உளவு விமானம் ஒன்று தமது வான் பரப்பில் அத்துமீறி நுழைந்ததை அடுத்து சுவீடன் மற்றும் டென்மார்க் தமது நாட்டுக்கான ரஷ்ய தூதுவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

டென்மார்க்கின் பால்டிக் தீவான பொர்ன்ஹோமுக்குள் கடந்த வெள்ளிக்கிழமை நுழைந்த ரஷ்ய விமானம் அதனைத் தொடர்ந்து சுவீடன் வான் பகுதிக்குள் நுழைந்ததாக இரு நாட்டு நிர்வாகங்களும் குறிப்பிட்டுள்ளன.

இது பற்றி தமது அதிருப்தியை வெளியிட ரஷ்ய தூதுவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக டென்மார்க் வெளியுறவு அமைச்சர் ஜெப் கோபோட் தெரிவித்தார்.

சுவீடன் வெளியுறவு அமைச்சும் இதேபோன்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்தது தொடக்கம் சுவீடன் மற்றும் பின்லாந்து போன்ற நோர்டிக் நாடுகள் தமது இராணுவ நடுநிலை தன்மையை மீளாய்வுக்கு உட்படுத்தி இருப்பதோடு நேட்டோவில் இணைவது குறித்தும் ஆலோசித்து வருகின்றன.

டென்மார்க் ஏற்கனவே இந்த மேற்கத்திய இராணுவ கூட்டணியில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மே 3 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
01 முதல் 03 வரை
சுபஹ் - 04.38
லுஹர் - 12.09
அஸர் - 03.26
மஃரிப் - 06.19
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 20
ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: அமிர்தசித்த யோகம்
திதி: திரிதியை



கொழும்பிலிருந்து 100 வீதமான விநியோகத்துக்கு ஏற்பாடு:

# கிராமிய பிரதேசங்களுக்கு ரயில்கள் மூலம் எரிபொருள்



## அமைச்சர் கஞ்சன விஜயசேகர அதிரடி நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பிலிருந்து கிராமிய பிரதேசங்களுக்கு ரயில் மூலம் போக்குவரத்து செய்யப்படும் 40 வீதமான எரிபொருளை 100 வீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடுகளை நிவர்த்திக்கும் வகையிலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இரண்டு தினங்களுக்குள் சேவைக்கு சமூகமளிக்காத பௌசர்களின் அனுமதிப் பத்திரங்கள் இரத்து செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து டிப்போக்களுக்கான எரிபொருளை ரயில்கள் மூலம் மட்டுமே போக்குவரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், புதிய எரிபொருள் பௌசர்களை பதிவு செய்யும் செயற்பாடுகள் 24 மணித்தியாலமும் நடைபெற்று வருவதுடன் ஒரு வார காலத்திற்குள் அதற்கான

06

தேர்தல்களில் வெற்றி பெற்று

# அதிகாரத்தை தக்கவைக்க உண்மைகள் மறைப்பு

ஈஸ்டர் தாக்குதல் குறித்து பேராயர் காட்டம்



தேர்தலில் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஈஸ்டர் தாக்குதல்கள் பற்றிய விவரங்களை பலர் வேண்டுமென்றே மறைக்கிறார்கள் என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களை தவிர பலர் அறிந்திருந்தார்கள் என்றும் அதனை முன்கூட்டியே தெரிவித்திருந்தால் அந்த மக்களைக் காப்பாற்றியிருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

மேலும் சிலர் அதிகாரத்தை கைப்பற்ற விரும்பிய காரணத்தினால் மக்கள் பலியாக்கப்பட்டனர் என்றும் தெரிவித்த பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஆகவே ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு தரப்பினர் உட்பட அனைத்து அதிகாரிகளும் தங்கள் கடமைகளில் இருந்து தவறிவிட்டனர் எனவும் குற்றம் சாட்டினார். மூன்று வருடங்களுக்கும் மேலாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றும் தற்போது நடைபெறும் மக்கள் போராட்டம் வெற்றி பெறும் என்றும் பேராயர் குறிப்பிட்டார்.

நாட்டின் ஸ்திரமின்மையின் எதிரொலி

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பெரும் வீழ்ச்சி

சுமார் 50 வீதம் குறைவடைந்துள்ளது

நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மை காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை சுமார் 50% குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த மாதத்தில் 60,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர் என்றும் எனினும் மார்ச் மாதம் கிட்டத்தட்ட 110,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிற்கு தினசரி சுற்றுலாப் பயணிகளின் வருகையும் 1000 –1500க்கு இடையில் குறைந்துள்ளதுடன், மார்ச் மாதத்தில் தினசரி சுற்றுலாப் பயணிகளின் வருகை 4000 தொடக்கம் 5000 வரை காணப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு, மருந்துகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு போன்றவை சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக சுற்றுலா சேவைகளை வழங்கும் பல ஹோட்டல்கள் நெருக்கடியில் உள்ளன. இதனால் சுற்றுலாத்துறையில் தொழில்புரிபவர்களும் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை பாராளுமன்றத்தில்



எதிர்க்கட்சி MPக்கள் சஜித் தலைமையில் கூடி தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாளை 4ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் கூடி முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.

06

# IMF உடன் இவ்வாரத்துக்குள் அதிகாரிகள் மட்ட பேச்சு

இரு மாதங்களுக்குள் முதற்கட்ட இணக்கப்பாடு





இந்த வாரத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்துடனான அதிகாரிகள் மட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு அதிகாரிகள் மட்ட பேச்சுவார்த்தையில் முதற்கட்ட இணக்கப்பாடு எட்டப்படும் என நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடல்களுக்காக சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இலங்கை வரவுள்ளது. சில கலந்துரையாடல்கள் இணையம் ஊடாகவும் இடம்பெறவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல் இரண்டு மாதங்களுக்குள் வெற்றியளிக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க அண்மையில் நம்பிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# விபத்தில் ஒருவர் பலி;



# வாகனத்துக்கு மக்கள் தீ வைத்து எரிப்பு

குளியாப்பிட்டிய – மாதம்பே வீதியின் கனதுல்ல பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் டிஃபெண்டர் ரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் பலியானார்.

விபத்தையடுத்து குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் அந்நபர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.சம்பவத்தில் குளியாப்பிட்டிய – குரதல்பொத்த பகுதியைச் சேர்ந்த 39 வயதான ஒருவரே உயிரிழந்தார்.

இந்த விபத்தை அடுத்து அப்பகுதியில் இருந்த மக்களால் டிஃபெண்டர் ரக வாகனம் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளது.

டிஃபெண்டர் ரக வாகனத்தை செலுத்திய நபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, 14 வயது சிறுவன் ஒருவனே இவ்வாறு வாகனத்தை செலுத்தியமையும் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. இச் சம்பவம் தொடர்பில் 14 வயது சிறுவன் உட்பட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 01

### குறள் தரும் சிந்தனை



மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு

சோம்பல் இல்லாதவர் அடையும் பயன், சோர்வில்லாத ஒரு மன்னன், அவன் சென்ற இடமனைத்தையும் தனது காலடி எல்லைக்குள் கொண்டுவந்ததைப் போன்றதாகும்.

## சவால்களை வெற்றி கொண்டு ஐக்கியம் மேலோங்க பெருநாள் வழிவகுக்கட்டும்!

இலங்கை உட்பட உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் தற்போது ஈகைத் திருநாளாம் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர். ரமழான் மாதம் விடைபெற்றுச் சென்றதைத் தொடர்ந்து வரும் ஷவ்வால் மாதத்தின் முதல் நாளன்று கொண்டாடும் பெருநாளாக ஈகைத்திருநாள் அமைந்திருக்கின்றது.

இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்றாக ரமழான் மாத நோன்பு உள்ளது. அல் குர்ஆன் இறக்கியருளப்பட்ட இம்மாதத்தில் இறைவனின் கட்டளைக்கும், முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் ஏற்ப நோன்புக் கடமையை நிறைவேற்றிய பின்னரே முஸ்லிம்கள் இப்பெருநாளைக் கொண்டாடுகின்றனர்.

ரமழான் மாதம் முழுவதும் உணவையும் பானங்களையும் தவிர்த்து, இச்சைகளையும் கட்டுப்படுத்திக் கொண்டு நோன்பு நோற்று, இறைவணக்கங்களில் ஈடுபடுவதன் ஊடாக ஆன்மிக, லௌஹீக ரீதியாகப் பலவித நன்மைகளை முஸ்லிம்கள் பெற்றுக் கொள்கின்றனர். பொறுமை, சகிப்புத்தன்மை, ஏழை, எளிய மக்களின் பசியை உணர்ந்து கொள்ளும் தன்மை என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். அத்தோடு ஏழைகளுக்கும் வருமானம் குறைந்தவர்களுக்கும் தம்மாலான உதவி ஒத்துழைப்புக்களை நல்கும் மனப்பான்மையையும் பெற்றுக் கொள்கின்றனர். பெருநாள் தினத்தன்று ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடுகள் இன்றி எல்லோரும் மகிழ்ச்சியாக பெருநாளைக் கொண்டாடவென இஸ்லாம் வகுத்தளித்துள்ள ஏற்பாடுகளுக்கு அமைய முஸ்லிம்கள் பெருநாளை அமைத்துக் கொள்கின்றனர்.

கடந்த காலங்களைப் போலல்லாது இம்முறை எமது நாடு பொருளாதார ரீதியிலான சவாலை எதிர்கொண்டுள்ளது. இதன் விளைவாக எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு, மின்வெட்டு, பொருட்களின் விலையேற்றம், மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு என்றபடி பலவிதமான நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான சூழலில் இந்நாட்டு முஸ்லிம்கள் ரமழான் நோன்பு காலத்தை அடைந்த போதிலும், பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் தமது கடமையை நிறைவேற்றினர். அதனைத் தொடர்ந்து இன்றைய நாளைக் கொண்டாடுகின்றனர்.

பல்லின மக்கள் வாழும் இந்நாடு முகம் கொடுத்த இப்பொருளாதார நெருக்கடி இன, மத, குல, பிரதேச வேறுபாடு பாராது எல்லா மக்களையும் பாதித்திருக்கின்றது. அதனால் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் எல்லோரும் ஒன்றுபட்டு தீர்வு தேட வேண்டிய விடய மாக இப்பொருளாதார நெருக்கடி உள்ளது. இதை விடுத்து கட்சி ரீதியாக ஆளுக்காள் பிரிந்து நின்று விரல் நீட்டுவதாலும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபடுவதாலும் இப்பிரச்சினைக்கு தீர்வு கிடைத்திடப் போவதில்லை.

அதேபோன்று பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதாலும் பணிப்பகிஷ்கரிப்பு உள்ளிட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதாலும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அது மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகவே அமையும். அதாவது இப்பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையவே வழிவகுக்கும். அதன் விளைவாக நாடும் மக்களும்தான் மென்மேலும் நெருக்கடிகளுக்கு உள்ளாவர். அதன் காரணத்தினால் இந்நெருக்கடியின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ளது.

இப்பொருளாதார நெருக்கடியை ஒன்றுபட்டு வெற்றி கொள்ளும் போதுதான் மக்களுக்கு ஆறுதலும் நிவாரணமும் கிடைக்கப் பெறும். இந்நெருக்கடியிலிருந்து விரைவாகவும் வேகமாகவும் மீட்சி பெற வேண்டும் என்பதுதான் மக்களின் ஒரே எதிர்பார்ப்பாக உள்ளது. அந்த எதிர்பார்ப்பை பிரிந்து நின்று முன்னெடுக்கப்படும் எந்தவொரு திட்டங்களாலும் நிறைவேற்ற முடியாது.

நாடு எதிர்கொண்டிருப்பது பொருளாதார நெருக்கடியே அன்றி அரசியலமைப்பு நெருக்கடி அல்ல. இருந்த போதிலும் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சில அரசியல் கட்சிகள் அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தை வலுப்படுத்தும் வகையில் 21 ஆவது திருத்தத்தை கொண்டு வருமாறு கோருகின்றன. இது மக்களின் கோரிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் அப்பாற்பட்ட விடயமாக உள்ளது.

அதேநேரம் நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக தீர்வு கண்டுவிட முடியுமா? என்பதுதான் மக்களின் முக்கிய கேள்வியாக உள்ளது. அதாவது இப்பிரச்சினைக்கு அரசாங்கத்துடன் ஒன்றுபட்டு தீர்வு தேடுவதை விடுத்து மக்கள் முகம் கொடுத்து வரும் நெருக்கடிகள் நீடிப்பதற்கே இக்கட்சிகள் வழிவகை செய்கின்றன என்பது தெளிவான உண்மையாக உள்ளது. ஆனால் மக்களின் வேதனை துன்பத்தில் அற்ப அரசியல் இலாபம் தேட முயற்சிப்பதானது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத விடயமாகும்.

ஆகவே நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணத் தேவையான வேலைத்திட்டங்களை ஒன்றுபட்டு முன்னெடுப்பதே ஆரோக்கியமானது. அதற்காக இந்நாளில் அனைத்து தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்பட திடசங்கற்பம் பூண வேண்டும். அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் விமோசனம் கிடைக்கப் பெற வழிவகுக்கும். ஈத் முபாரக்.

editor.tkn@lakehouse.lk

# ஈகையை கற்றுத் தந்த ரமழான் நோன்பும் ஈதுல் பித்ர் பெருநாளும்

எல்லாப்புகழும் வல்லவன் அல்லாஹ்வுக்கே.

'அல்ஹம்து லில்லாஹ்'
'அல்லாஹு அக்பர்....'
'அல்லாஹு அக்பர்....'
'அல்லாஹு அக்பர்....'

என்ற அல்லாஹ்வை பெருமைப்படுத்தும், அவனுக்கே தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும், 'அல்லாஹ் மாபெரியவன், அல்லாஹ் மாபெரியவன்' என்ற தக்பீர் கோஷம் முஸ்லிம் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரிலிருந்தும் மேலெழுந்து வானுயர, அதனை கண்டு வானவர்கள் மகிழ்வுறும், நாம் அனைவரும் களிப்புறும் ஈத் பெருநாள் இன்றாகும்.

ரமழான் முழுவதும் நாம் நோற்றிருந்த நோன்பின் மூலமாக இறையருளைப் பெற்றுக்கொண்டதோடல்லாமல், அல்லாஹ்வும், அவனது ரசூலும் நோன்பு நோற்போருக்காக பரிந்துரை செய்யும் பல்வேறு பாக்கியங்களையும் மறுமைக்கான நிரந்தர வெற்றியையும் அடைந்து கொண்ட நாளும் இதுவாகும். 'ஸவ்ம்' எனப்படும் நோன்பின் மூலம், எமது சமயம், சமூகம் சம்பந்தமாக மட்டுமன்றி, உலகத்தின் பசி, பட்டினி, வறுமை, நோய், ஏழ்மை என்பன தொடர்பிலும் விரிவான விளக்கத்தைப் பெற்றுக் கொண்டுள்ளோம்.

நாம் நோற்ற நோன்பின் மூலம் பசி, பட்டினி மற்றும் ஏழ்மையின் அகோரத்தன்மையை உணர்வுபூர்வமாக உணர்ந்து கொண்ட நாம், எமது பக்கத்து வீட்டில் மாத்திரமல்லாமல், எமது ஊரிலும் அயல் ஊர்களிலும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஏழைகள் தினமும் அனுபவிக்கும் வறுமையினதும் பசி, பட்டினியினதும் அகோரத்தன்மையை நோன்பு எமக்கு நன்றாகவே உணர வைக்கின்றது. அதனால் நாமும் நமது குடும்பமும் நோன்பு துறக்கும் நேரத்தில் எமது அயலவர்களையும், நண்பர்களையும், உறவினர்களையும் எமது வீட்டு அழைத்து அவர்களும் எம்மோடு சேர்ந்து நோன்பு துறக்க (இப்தார்) ஏற்பாடுகள் செய்தோம்.

ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள், 'எவர் ஒரு நோன்பாளிக்கு நோன்பு துறக்க (இப்தார்) ஏற்பாடு செய்கிறாரோ நோன்பாளிக்குக் கிடைக்கும் கூலி போன்று அவருக்கும் கிடைக்கப் பெறும். நோன்பாளியின் கூலியில் எதுவும் குறைந்து விடாது' என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதி)

மற்றொரு சந்தர்ப்பத்தில், 'எவரொருவர் ஒரு நோன்பாளிக்கு ஹலாலான உணவு, பானம் வழங்கி நோன்பு துறக்க வைக்கிறானோ ரமழான் மாதத்தின் எல்லா வேளைகளிலும் அவருக்கு மலக்குமார்கள் சுபசோபனம் கூறிக் கொண்டிருப்பார்கள். ஜிப்ரீர் (அலை) அவர்கள் 1000 மாதங்களை விடச் சிறந்த லைலதுல் கத்ர் இரவிலேயே அவருக்கு சுபசோபனம் கூறுவார்கள்' என்றும் நபி (ஸல்)அவர்கள் கூறியுள்ளார்கள்.

**ஸக்காத்துல் பித்ருவின் மாதம்:**

மேலும் ஸகாத், ஸகாத்துல் பித்ரா மூலமாக இஸ்லாம் கற்றுத் தந்த கடமைகளை நாம் நிறைவேற்றுவதனால் எம்மை நாடி எமதில்லம் வரும் ஏழை எளியவர்களின் துயர்போக்க எம்மாலான தானதர்மங்களைச் செய்து ஈந்துவக்கும் பண்புகளை எம்முள் அதிகமாக வளர்த்துக் கொள்ள ரமழான் மாதம் எமக்கு பெரிதும் உதவியுள்ளது. அம்மாதம் எம்மை விட்டு பிரிந்து சென்றுள்ள போதிலும், அம்மாதத்தின் பேறுகளை அடையப் பெற்றவர்களாக ஈதுல் பித்ர் பெருநாளை இன்று கொண்டாடுகின்றோம்.



நோன்புப் பெருநாள் அல்லது ஈகைத் திருநாள் என்று பொதுவாக தமிழில் அழைக்கப்படும் இப்பெருநாள் அறபு மொழியில் ஈதுல் பித்ர் என்று அழைக்கப்படுகின்றது. ஈத் என்ற அறபுச் சொல்லின் கருத்து பெருநாள் என்பதாகும். பித்ர் என்பது இம்மாதத்தில் முஸ்லிம்கள் ஏழைகளுக்கு வழங்கும் ஸக்காதுல் பித்ர் என்ற தானதருமம் எனப்படும் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.

ஆண்டு முழுவதும் வறுமையில் வாடிவதங்கி நாளாந்த உணவுக்கு வழியின்றித் திண்டாடும் உடன்பிறவா சகோதரர்கள் பெருநாளில் தம் வறுமையை மறந்து மகிழ்வாக இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் இஸ்லாம் இந்த தர்மத்தை கடமையாக்கியுள்ளது. இத்தர்மம் ஏழைகளுக்கு உணவாக அமைவதோடு, அத்தர்மத்தை நிறைவேற்றுபவர் நோன்பு நோற்றிருக்கும் போது அறிந்தோ அறியாமலோ செய்யும் தவறுகளுக்கு பரிகாரமாகவும் அமைகிறது. இரக்கப்பட்டு நாம் விரும்பியளவு கொடுக்கக் கூடிய தர்மமல்ல இது. தகுதியுள்ள ஒவ்வொருவரும் இதை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்பது நபிவழிமுறையாகும். ஏழைகளின் துயர்துடைக்கவும், சகோதர வாஞ்சையை நினைவூட்டவும் இது கடமையாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிமான ஆண், பெண், பெரியவர், சிறியவர், அடிமை, சுதந்திரமானவர் என அனைவர் மீதும் நோன்புப் பெருநாள் தர்மமாக 'ஒரு ஸாவு' (இரு கையளவு) கோதுமை அல்லது ஒரு ஸாவு பேரீச்சம்பழம் தர்மமாக வழங்கும்படி நபி (ஸல்) அவர்கள் கடமையாக்கினார்கள். மேலும் பெருநாள் தொழுகைக்காக மக்கள் வெளியேறுவதற்கு முன்னர் இத்தர்மத்தை கொடுத்து விட வேண்டும் என்றும் அன்னார் கட்டளையிட்டார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

நோன்பில் நேர்ந்த தவறுகளிலிருந்து தூய்மை பெற வேண்டும் என்பதற்காகவும் ஸகாத்துல் பித்ரை நபி (ஸல்) அவர்கள் கடமையாக்கினார்கள். (ஆதாரம்: அபுதாவூத்)

**பெருநாளும் அதன் ஒழுங்குமுறைகளும்:**

ஷவ்வால் மாதத்தின் தலைப் பிறை தென்படுவதன் மூலம் அல்லது ரமழான் மாதம் முப்பது நாட்களாக பூர்த்தி அடைவதன் மூலம் நோன்புப் பெருநாள் உறுதி செயயப்படுகிறது. இப்பெருநாள் தினத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சில ஒழுங்குமுறைகள் காணப்படுகின்றன. அவற்றில் சில:

1 பெருநாள் தொழுகைக்காக குளித்து சுத்தம் செய்து கொள்ளுதல், தன்னிடமிருக்கும் ஆடைகளில் சிறந்த ஆடையை அணிந்து கொள்ளுதல் என்பன நபிவழியாகும்.

2. வீட்டிலிருந்து வெளியேறி தொழுகையை நிறைவேற்ற வேண்டிய பள்ளிவாசல் அல்லது அதற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திடலுக்கு செல்லும் வரை சத்தத்தை உயர்த்தி தக்பீர் சொல்லிக் கொண்டு செல்லுதல். உங்களது பெருநாட்களை தக்பீரைக் கொண்டு அழகுப்படுத்துங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: தாரானி). தனித்தனியாக ஒவ்வொருவரும் தக்பீர் சொல்வதும் நபி வழியாகும்.

3. பெருநாள் தொழுகைக்கு செல்லும் போதும், திரும்பும் போதும் முடியுமான வரை இரு பாதைகளைப் பயன்படுத்திக் கொள்வதும் நபிவழியாகும்.

4. பெண்களும் பெருநாள் தொழுகையில் கலந்து கொள்வது முக்கியமானது. உம்மு அத்தீயா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள், 'நாங்கள் பெருநாள் தொழுகை நிறைவேற்றப்படும் திடலுக்கு செல்லுமாறு ஏவப்பட்டோம். அதற்கேற்ப 'ஹைழ் (மாதவிடாய்) ஏற்பட்டுள்ள பெண்களையும், உரிமையிடப்பட்டவர்கள், திருமணம் முடிக்காத இளம் பெண்கள் உள்ளிட்ட அனைத்து பெண்களையும் அழைத்துச் செல்வோம். முஸ்லிம்களின் ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் கூட்டத்திலும் அவர்களது பிரார்த்தனைகளிலும் ஹைழ் உள்ள பெண்கள் கலந்து கொள்வார்கள். ஆனால் தொழுகையில் கலந்து கொள்ளமாட்டார்கள். (ஆதாரம்: புஹாரி)

மேலும் பெருநாள் தினத்தில் ஒருவருக்கொருவர் ஸலாம் கூறுவதும் பிரார்த்தனை செய்வதும் தனது குடும்பத்திலுள்ள சிறியவர், பெரியவர் அனைவரையும் ஸலாம் கூறி ஆரத்தழுவி முஸாபஹா, முனாக்கஹா செய்வதும், ஒருவருக்கொருவர் துஆ செய்து கொள்வதும் இஸ்லாம் விரும்புகின்ற சிறந்த வழிமுறையாகும். அவ்வாறே அயலவர், நண்பர்கள், குடும்பத்தினர் உட்பட அனைவருடனும் நடந்து கொள்வது மிக விரும்பத்தக்க செயலாகும். இவ்வாறு எமது நோன்பு எமது வாழ்வில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய பல வழிமுறைகளை எமக்குக் கற்றுத்தந்துள்ளது. நாம் கடந்த 30 நாட்களும் நோற்ற நோன்பின் மூலம் அடைய வேண்டிய உச்சபயனை அடைந்து கொள்ள வல்ல அல்லாஹ் எமக்கு பேரருள் புரிய வேண்டும். (ஆமீன்) 'நோன்பானது மனித உடலின் குறிப்பாக உடல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு பெரும் பாதுகாப்பு அரணாகும்'. (ஆய்வாளர் டொக்டர் லூதர்) 'முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்த நோன்பை விட சிறப்பான வேறொரு அடிப்படையொன்றையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தேவையில்லை. அந்தளவுக்கு முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்நோன்பு மிகவும் மகத்துவமானது. முஸ்லிம்களைப் போல நானும் நோன்பை நோற்க ஆரம்பித்ததன் மூலம் நீண்ட காலமாக எனக்கிருந்த இரைப்பை வீக்கம் (Stomach inflammation) சில தினங்களில் குறைந்திருப்பதை உணர்ந்தேன்'. (கலாநிதி மூவர்) ஆகவே இறைவனே அனைத்தையும் அறிந்தவன்.



பேராசிரியர் மௌலவி
எம்.எஸ்.எம். ஜலால்தீன்
(முன்னாள் பீடாதிபதி)
தென்கிழக்கு பல்கலைக்கழகம்

# இந்திய தேசிய அரசியலில் முக்கிய பாத்திரமாக உருவெடுத்த ஸ்டாலின்

பத்து வருடம் கழித்து மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளதுடன், ஒரு வருடத்தையும் நிறைவு செய்ய உள்ளது தி.மு.க அரசு. இதையடுத்து முக்கிய விஷயம் ஒன்று அரசியல் வட்டாரத்தில் சுற்றி வருகிறது.

இந்த ஒரு வருடம் ஆட்சி நிறைவில் ஏகப்பட்ட பிரச்சினைகளை தி.மு.க சமாளித்துள்ளது. முக்கியமாக, தொடர்ந்து பிரதான இடத்தையும் பெற்று வருகிறது. தமிழகத்தின் மீதான நம்பிக்கையையும், மதிப்பையும் முன்னேற்றத்தை தேசிய அரசியலில் திரும்பி பார்க்க வைத்து வருகிறார் முதல்வர் மு.க. ஸ்டாலின்.

தி.மு.க ஆட்சி பொறுப்பேற்ற 100 நாட்களில், நாட்டிலேயே மிகவும் பிரபலமான முதல்வர்கள் பட்டியலில் தமிழக முதல்வர் ஸ்டாலின் முதலிடம் பெற்றிருந்தார். இதற்குக் காரணம், பொறுப்பேற்ற 100 நாட்களில் கொரோனாவை சிறப்பாக கையாண்ட விதம், மக்களுக்கான நலத்திட்ட உதவிகள், அதேநேரத்தில் நிதிச் சுமையை சீரமைக்க எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகள்... இவ்வாறு அனைத்துத் தரப்பினரிடமும் ஆதரவு முதல்வருக்கு பெருகியிருந்ததாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, வெளிப்படைத் தன்மையுடன் நிர்வாகமும் செம்மையாகவும், திறமையாகவும் கையாளப்பட்டதை இந்திய நாடே உற்றுக் கவனித்தது.



### தி.மு.க ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு வருட காலம் நிறைவு

அதேபோல, மாநில உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, முதல்வர் ஸ்டாலின் மேற்கொண்ட முயற்சிகளும் கவனத்தைப் பெற்றுள்ளன. சுருக்கமாகச் சொன்னால், சொந்த மாநிலத்தில் காட்டிவரும் அக்கறை ஒருபக்கம், மாநில உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என்ற முயற்சி மறுபக்கம் என இரண்டு வழிகளில் முதல்வர் தன் நாட்டத்தை விரிவுபடுத்தி வருகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, விரைவில் பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடக்க உள்ள நிலையில், பா.ஜ.கவுக்கு எதிரான சக்திகளை ஒன்றுதிரட்டுவதில் தீவிரத்தை கையில் எடுத்துள்ளார்.

அதனால்தான் ஒவ்வொரு முறையும் டெல்லி செல்லும் போதெல்லாம், எதிர்க்கட்சிகளின் கவனம் ஸ்டாலின் மீது குவிகிறது. அதுமட்டுமல்ல, ஏற்கனவே மம்தா, ராகுல் தரப்பில் பிரதமர் வேட்பாளர் விவகாரம் எழுந்து வரும் நிலையில், ஸ்டாலினும் பிரதமர் வேட்பாளர் பதவிக்கு தகுதியானவர் தான் என்பதை தி.மு.கவினரே வலிய சொல்லி வருகிறார்கள். பெட்ரோல் டீசல் விலை குறித்து, பிரதமர் மோடியிடம் தி.மு.க அரசு காட்டமாக கேள்வி எழுப்பியதாக இருக்கட்டும், அல்லது நீட் விவகாரத்தில் ஆளுநர் ரவி மீதான அதிருப்தியை வெளிப்படுத்தும் விதமாக இருக்கட்டும், பா.ஜ.க மேலிடம் சற்று அதிர்ந்துதான் போயுள்ளது.

### மாநில முதல்வர்களில் முதலாமவர்; பிரதமர் வேட்பாளருக்கு தகுதி வாய்ந்த தலைவர்



இதெல்லாம் கணக்கில் வைத்துத்தான், தேசிய அரசியலில் ஸ்டாலினின் பாத்திரம் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. இப்படிப்பட்ட சூழலில்தான், ஒரு முக்கியமான விஷயம் வட்டமடித்து கொண்டிருக்கிறது. தி.மு.க ஆட்சிப் பொறுப்பேற்று இம்மாதம் 7 ஆம் திகதியோடு ஒரு வருடம் நிறைவு பெறவிருக்கிறது. ஓராண்டு ஆட்சியை விமர்சையாக கொண்டாடவும், ஓராண்டில் ஒவ்வொரு துறையிலும் சாதித்த சாதனைகளை விளம்பரப்படுத்தவும் தி.மு.க அரசு திட்டமிட்டுள்ளது.

சாதனை விளம்பரங்கள் 'பஞ்ச் டய லொக்' வடிவத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக டய லொக்குக ளை ஆயத்தம் செய்து கொண்டிரு க்கிறார்கள் அதிகாரிகள். இதற்கிடையே, ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியின் புரட்சிகர திட்டங்கள், சாதனைகள் அனைத்தும் வெளிமாநிலங்களிலும் எதிரொலிக்க வேண்டும் என்பதால், அந்தந்த மாநில மொழிகளில் அந்தந்த மாநிலங்களில் பத்திரிகை மற்றும் ஊடகங்களில் விளம்பரப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது திமுக அரசு.

தேசிய அளவில் ஸ்டாலின் தவிர்க்க முடியாத ஒரு தலைவர் என்பதை நிலைநிறுத்தவும், உயர்த்திப் பிடிக்கவுமே இந்த விளம்பர ஏற்பாடுகள் என்கிறார்கள் முக்கியஸ்தர்கள்.




# தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை; அகற்றப்படும் மருத்துவ கழிவுகளால் சூழல் மாசு

கோப்பாய் குறூப் நிருபர்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மற்றும் புற்றுநோய் வைத்தியசாலையிலிருந்து அகற்றப்படும் ஆபத்தான மருத்துவக் கழிவுகள் நல்லிணக்க புறப்பகுதியில் அமைந்துள்ள கல் அகழ்வு பிரதேசங்களில் வீசப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கழிவகற்றலுக்குப் பொறுப்பாக உள்ள வலி. வடக்கு பிரதேச சபையின் பெறுப்பற்ற செயற்பாட்டால் ஆபத்தான மருத்துவக் கழிவுகள் உரிய முறையில் எரியூட்டலுக்கு அனுப்பப்படாமல் ஏனைய கழிவுகளுடன் மக்கள் வாழும் பகுதிகளுக்கு அருகாமையில் வீசப்படுகின்றன. புற்றுநோய் வைத்தியசாலையில் பயன்படுத்தப்படும் ஊசிகள், மருந்து வகைகள் என்பன உரிய வெப்பநிலையில் அழிக்கப்படாமல் திறந்த வெளிகளில் வீசப்படுவதால் விலங்குகளினால் நீர்நிலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட கூடிய அபாயம் காணப்படுகிறது.

அதுமட்டுமல்லாது மழைகாலங்களில் அப்பகுதியில் வீசப்பட்ட மருத்துவ கழிவுகளில் மழைநீர் உட்புகுவதனால் அதில் இருக்கும் இரசாயன பொருட்கள் நிலத்தின் கீழ் இறங்கி நிலத்தடி நீரையும் மாசடையச் செய்கிறது. ஆகவே பொறுப்பு வாய்ந்தவர்கள் தமது பொறுப்புக்களை தட்டிக் கழிப்பதால் எதிர்காலத்தில் ஒரு சமுதாயமே பாதிக்கப்படும் நிலை காணப்படுகிறது. ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை நேற்றைய தினம் திங்கட்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடத்திய வழிபாட்டை தொடர்ந்து, நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை சந்தித்து கலந்துரையாடினார். (படம் யாழ். விசேட நிருபர்)

# பசளை விற்பனை நிலையத்தில் திருட்டு

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

வடமராட்சி நெல்லியடியிலுள்ள பசளை விற்பனை நிலையமொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒன்றரை லட்சம் ரூபாய் ரொக்கப் பணம் திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை (30) இரவு வர்த்தக நிலையத்தை பூட்டிவிட்டு சென்ற வர்த்தகர் நேற்று திங்கட்கிழமை(02) காலை வர்த்தக நிலையத்தை திறந்த போதே பின்பக்க கதவு உடைக்கப்பட்டமை தெரியவந்தது. இதனைதொடர்ந்து அங்கு வைக்கப்பட்டிருந்த ஒன்றரை லட்சம் ரூபா ரொக்கப் பணம் திருடப்பட்டமை தெரியவந்தது. இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

# இடைக்காடு கிராமம் பற்றிய வரலாற்று நூல் வெளியீடு





இடைக்காடர் ஈஸ்வரன் எழுதிய இடைக்காடு எம் தாயகம் வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடைக்காடு மகா வித்தியாலய மண்டபத்தில் ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் நடைபெற்றது

இடைக்காடு இணையத்தினால் வெளியிடப்பட்ட இந்நூலுக்கான வெளியீட்டுரையை ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் செ.விஸ்வலிங்கமும் நயப்புரையை செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும் நிகழ்த்தினர்.

நூலை ஓய்வுநிலை கல்வியியல் பேராசிரியர் க. சின்னத்தம்பி வெளியிட்டு வைக்க இலங்கை வங்கியின் ஓய்வுநிலை முகாமையாளர் க. இலட்சுமண சர்மா பெற்றுக் கொண்டார். வண்ணப் புகைப்படங்கள் பலவற்றுடன் நூறு பக்கங்கள் கொண்ட இந்நூல் கலந்து கொண்ட அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டன.

முல்லைத்தீவுப் பிரதேசத்திலுள்ள வாவெட்டி மலை என்ற இடத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களே வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் குடியேறி இடைக்காடு என்ற ஊரை உருவாக்கியதாக இந்நூலில் குறிப்பிடப்படுகின்றது.

ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், புதூர் நாகதம்பிரான் ஆலயம் முதலியன இடைக்காட்டைச் சேர்ந்தவர்களால் உருவாக்கப்பட்ட ஆலயங்களாகும். வண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரி இடைக்காட்டைச் சேர்ந்த நாகமுத்து இடைக்காடரால் நிறுவப்பட்டது. இவரே இலங்கையில் நீலகண்டன் என்ற நாவலை எழுதிய முன்னோடியும் ஆவார். முன்னாள் அரச அதிபர் மாணிக்க இடைக்காடர் தனது கிராமத்துக்காகப் பல சேவைகளை செய்து அதை உயர்த்தி வைத்தவர் ஆவார். இவ்வாறாக இடைக்காடு மக்களின் பெருமைகளை ஆவணப்படுத்துவதாக இந்நூல் வெளிவந்துள்ளது.

இந்நிகழ்வில் இடைக்காட்டுடன் தொடர்புடைய உயர் உத்தியோகத்தர்கள் மற்றும் வன்னியில் வாழ்பவர்கள் என நூற்றுக்கணக்கானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தனர்.

# 20 இலட்சத்துக்கும் அதிகமான வெடிபொருட்கள் இதுவரை அகற்றப்பட்டுள்ளன

## ஸார்ப் நிறுவனம் தெரிவிப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

முல்லைத்தீவு அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் ஆகிய பகுதியிலும் கிளிநொச்சி முகமாலை மற்றும் ஆனையிறவு ஆகிய பகுதிகளிலும் கடந்த ஆறு வருடங்களில் இருபது இலட்சத்து ஐம்பத்தொராயிரத்து எண்பது சதுரமீற்றர் பரப்பளவிலிருந்து முப்பத்திமூவாயிரத்து ஐநூற்று ஐம்பத்திமூன்று அபாயகரமான வெடிபொருட்களை இதுவரை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

மனிதாபிமான கண்ணி வெடியகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் நிறுவனம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் ஜப்பான் மற்றும் அமெரிக்க நாட்டு நிதியுதவியுடன் ஸார்ப் நிறுவனம் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2022 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதி, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சுதந்திரபுரம், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் இருபது இலட்சத்து ஐம்பத்தொராயிரத்து எண்பது சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து முப்பத்திமூவாயிரத்து ஐநூற்று ஐம்பத்திமூன்று அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.



தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சுதந்திரபுரம் பகுதியிலும் அம்பகாமம் பகுதியிலும் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.கலாசார மத்திய நிலையத்திற்கு தமிழக மாநில தலைவர் அண்ணாமலை விஜயம்



யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் விஜயத்தை மேற்கொண்டுள்ள பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் கு. அண்ணாமலை நேற்று காலை 10 30 மணியளவில் இந்திய அரசின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட யாழ். கலாசார மத்திய நிலையத்தை பார்வையிட்டார்.

இதன்போது கலாசார மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட வசதிகள் தொடர்பாகவும் அதன் திறன்கள் தொடர்பாகவும் யாழ் இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் விளக்கம் அளித்தார்.

இதன்போது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான், யாழ் இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுக் குழுக் கூட்டம்

கரவெட்டி தினகரன் நிருபர்

இக்கூட்டம் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் அண்மைக்காலமாக ஏற்பட்டிருந்த குழப்பகரமான சூழலுக்கு பின்னர் நேற்று இக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை.

இக் கூட்டத்தில் சிரேஷ்ட தலைவராக சட்டத்தரணி ப. சிறிதரனும், செயலாளர் நாயகமாக மீண்டும் வீ. ஆனந்தசங்கரியும் ஏகமனதாக தெரிவானார்கள். நிர்வாகச் செயலாளராக க. பூலோகரட்ணமும், பொருளாளராக தி.சஞ்சயனும், இணைப் பொருளாளராக வேதாரணியனும் தெரிவாகினர். இளைஞர் பேரவை தலைவராக க.சபேசனும், மகளிர் பேரவை தலைவராக சூரியபிரதீபா வாசவனும், சட்டம் மற்றும் ஒழுங்கு தலைவராக ஐயம்பிளை யசோதரனும், தொழிற்சங்கத் தலைவராக சி.தயாபரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்தின் இறுதியில் வீ. ஆனந்தசங்கரி நடத்திய சந்திப்பில்,

நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் உதய சூரியன் உதிக்கவுள்ளது. சிறந்த கட்சி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இதன் ஊடாக எதிர்வரும் காலங்களில் தமிழர் விடுதலை கூட்டணி மீண்டும் பிரகாசிக்க உள்ளது என்றார். கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான சிறிதரன் கூறுகையில், தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் கடந்த நாட்களாக இருந்த குழப்பகரமான நிலை மாற்றப்பட்டுள்ளது. இன்று இடம்பெற்ற கூட்டத்தில் ஏகமனாதாக புதியவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

# இலங்கையிலிருந்து மேலும் 5 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்

(மன்னார் குறூப், வவுனியா விசேட,யாழ். விசேட நிருபர்கள்)



இலங்கையிலிருந்து மேலும் 5 பேர் நேற்று திங்கட்கிழமை (2) அதிகாலை தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இரண்டு மாதகைக்குழந்தையுடன் ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் அகதிகளாக ராமேஸ்வரம் சென்றுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக தாம் தமிழகத்தில் தஞ்மடைந்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லையிலுள்ள தீவிர கண்காணிப்பையும் மீறி பைப்பர் படகுகளில் தனுஷ்கோடிக்கு அகதிகளாக இவர்கள் சென்றுள்ளதாக தெரியவருகின்றது. நேற்று முன்தினம்(1) நள்ளிரவு யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்கரையிலிருந்து ஒரு படகில் புறப்பட்ட வவுனியா சிதம்பரபுரம் பகுதியை சேர்ந்த ராஜலெட்சுமி, தயாளன்,லதா மற்றும் அவரது ஆறு வயது மகள் தன்ஷிகா, 2 மாதகை குழந்தை தக்சரா என ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் திங்கட்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் ராமேஸ்வரத்தை அடுத்த சேராங்கோட்டை கடற்கரையை சென்றடைந்துள்ளனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற ராமேஸ்வரம் மரைன் பொலிஸார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மதங்கள் போதிக்கும் சமூகக்...

மக்கள், அவர்களின் நம்பிக்கையின்படி ஈதுல் பித்ர் எனும் நோன்புப் பெருநாள் தினத்தில் இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறார்கள். நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்து ஆன்மீக திருப்தியும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று நானும் பிரார்த்திக்கின்றேன்.

இஸ்லாமிய மக்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு சமய வழிபாடுகளில் நோன்புப் பெருநாள் சிறப்பானதொரு கொண்டாட்டமாகும் . ஒவ்வொரு நாளும் அல்லாஹ்வின் மார்க்கப் போதனைகளின்படி நற்செயல்களைப்புரிய இது ஒரு மனத் தூண்டுதலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இணக்கமான ஒன்றுகூடல்கள், கூட்டு சமரசம், தியாகம், தீமையிலிருந்து மீள்வது, நன்மையைக் கடைப்பிடிப்பது போன்ற அவரவர்களுக்கிடையில் நிலவுகின்ற கலாசார உறவுகளே சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். இந்த நல்ல எண்ணங்கள் அனைவருக்கும் மத்தியில் பரவ வேண்டும். அனைத்து இறையியலாளர்களின் தத்துவமும் விடுதலையின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. பெருநாள் கொண்டாட்டம் உட்பட இஸ்லாமிய தத்துவத்தில் அந்த மார்க்கத்தின் நம்பிக்கைகளை நாம் நீண்ட காலமாகக் கண்டு வருகிறோம். அது சொல்லும் செய்தியை, சமூக நல்வாழ்வுக்கு பிரயோகிப்பதன் மூலம் பரஸ்பர புரிதலின் வளர்ச்சிக்கு காரணமாக அமைகின்றது. இது மதங்களுக்கு இடையிலான சமூக, கலாசார புரிதலை உறுதிப்படுத்துகிறது. மதங்கள் போதிக்கும் சமூகக் கோட்பாடுகளை சமூக நலனுக்கான செய்திகளாகப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

இந்த நோன்புப் பெருநாள் பண்டிகைக்குப் பின்னர் வரும் காலம் இலங்கை முஸ்லிம்கள் உட்பட உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் மகிழ்ச்சியான மற்றும் வளமான காலமாக அமைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்.

## இடைக்கால அரசை அமைக்க...

இதன்போது தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கமொன்றை அமைப்பதற்கு பொது ஜன பெரமுன கட்சியும் அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீன குழுவாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் தலைமையில் நேற்றைய தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தையின் போதே இந்த கொள்கை ரீதியான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கிணங்க இடைக்கால தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதிக்கு தேவையான ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கும் இதன்போது இரு தரப்பினரும் இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளனர்.

நேற்றைய இந்தப் பேச்சுவார்த்தை சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் தொடர்ந்துள்ளது. சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இதற்குமுன் முன்வைத்துள்ள 11 யோசனைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் நேற்றைய இந்த பேச்சுவார்த்தையின்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், தேசிய அமைப்பாளர் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச, அமைச்சர் ரமேஷ் பத்திரன, பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம், பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன ஆகியோரும் இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவில் இடம்பெற்றுள்ள முன்னாள் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, அனுர பிரியதர்சன யாப்பா, விமல் வீரவன்ச,உதய கம்மன்பில முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர். இரண்டு தரப்பினருக்கும் இடையிலான இணக்கப்பாட்டுக்கு அமைய கூட்டு அறிக்கையொன்றை வெளியிடுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஸ)

## அனைத்து அரச செலவினங்களும்...

நிதியமைச்சர் அலி சப்ரி அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

அரச நிதியை பொறுப்புடனும் சிக்கனமாகவும் செலவு செய்வதுடன் மக்களுக்கு முறையான மற்றும் பயனுள்ள சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னர் எப்போதுமில்லாத வகையில் முக்கியத்துவம் வழங்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எதிர்கொள்ள நேர்ந்துள்ள நெருக்கடிகளுக்கு முகங் கொடுப்பதற்கு அரச வருமானத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், அதற்கு சிறிது காலம் எடுக்கும் என்றும் அரச செலவினங்களை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே மட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மற்றும் தொடர்பாடல் கொடுப்பனவை கட்டுப்படுத்தல், நீர் மற்றும் மின்சார செலவை கட்டுப்படுத்தல், கட்டிடங்கள் நிர்மாணம் மற்றும் வாடகைக்கு கொள்வனவு செய்வதை இடைநிறுத்தல், தேசிய நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு பயிற்சிகள் மற்றும் கல்வி சுற்றுலாக்களை நிறுத்துதல், அமைச்சரவை அனுமதியின்றி அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் பல்வேறு கொடுப்பனவுகளை நிறுத்துதல், புதிய நலன்புரி மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பிக்காமல் இருத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கான மட்டுப்படுத்தல்கள் தற்போது நடைமுறையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறு தாம் நிதியமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் அமைச்சரவையில் தெரிவித்துள்ளார். மறு அறிவித்தல் வரை மேற்படி மட்டுப்படுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியமைச்சர் அமைச்சரவையின் அனுமதியைக் கோரியுள்ளார்.(ஸ)

## வேலை நிறுத்தபோராட்டம்...

வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டு ள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமது கோரிக்கைக்கு இணங்க போக்குவரத்து கொடுப்பனவில் 90 வீதம் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள அவர்,அதற்கிணங்க நேற்று பிற்பகல் முதல் மீண்டும் எரிபொருள் போக்குவரத்து நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார். எரிபொருள் போக்குவரத்திற்கான கொடுப்பனவை 40 வீதத்தால் அதிகரிக்குமாறு கோரியே மேற்படி வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க நேற்றைய பேச்சுவார்த்தையின் போது 30 வீத அதிகரிப்பைப் பெற்றுக் கொடுப்பதாக பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள நிலையில் வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## விரைவில் நடைமுறைப்படுத்த...

கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டதுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களை சந்தித்து உரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலையை கருத்திக் கொண்டு இந்தியா இலங்கைக்கு பல்வேறு உதவி ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றது.

நிதி ரீதியாகவும் எரிபொருள் மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு உதவிகளையும் இந்தியா இலங்கைக்கு வழங்கி வருகின்றது.

அண்மையில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் ஜனாதிபதியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின்போது 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். அந்த வகையில் அது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் சாத்தியம் காணப்படுகிறது.

அதேவேளை இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்று நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அதே போன்று நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழ்நாட்டுக்கு வருவோருக்கு எதிராக கடுமையான சட்டங்களை பிரயோகிக்க வேண்டாம் என நாம் தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

இந்திய மீனவர்களால் வடபகுதி மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறிய முடிகிறது.அது தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை தான் ஆனால் சிறைத்தண்டனை அனுபவிப்பதற்காக எந்த ஒரு இந்திய மீனவரும் இலங்கைக்கு வருவதில்லை. தொழில் செய்வதற்காக அவர்கள் வருகின்றார்கள். அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டதுடன் அவருடன் யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணை தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோரும் வழிபாடுகளில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் தேசிய கூட்டமைப்புடனான சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா,பாராளுமன்ற உறுப்பினர்எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் சி.வி. கே சிவஞானம் டாக்டர் சத்தியலிங்கம், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர் .(ஸ)

## உயர்ந்த மனித குணங்களால்...

ரமழான் மாதம் என்று அழைக்கப்படுகிறது. ரமழான் மாதம் புனிதமான மாதமாகும், ஏனென்றால் நபிகள் நாயகத்திற்கு அல்குர்ஆன் இறக்கப்படுவது ரமழான் மாதத்தில் தான் ஆரம்பமானது. இவ்வாறு ரமழான் மாதத்தின் கடைசி நாளான குர்ஆனின் முதல் வசனங்கள் அருளப்பட்ட இரவுக்கு லைலத்துல் கத்ர் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது சக்திவாய்ந்த அல்லது புகழ் பெற்ற இரவு என்று பொருளை தருகிறது.

இந்த ரமழான் நோன்பு பல சடங்குகளின் கலவையாகும். இவற்றில் ரமழான் இரவில் நோன்பு நோற்பது, விசேட தொழுகைகள் (கியாமுல் லைல்), உதவிகள் வழங்குதல் (ஜகாத்துல் பித்ர்), பள்ளிவாசலில் தங்கியிருந்து சமயச் சடங்குகளைச் செய்தல் (இஃதிகாப்), குர்ஆன் ஓதுதல் போன்றவையும் அடங்கும்

ரமழான் நோன்பைக் கடைப்பிடித்த பிறகு பிறை பார்ப்பதன் மூலம் ரமழான் (ஈத்உல்பித்ர்) தொடங்குகிறது. அல்லாஹ்வின் அருளால் ஒருவர் சம்பாதிக்கும் செல்வம், தானியம், உணவு மற்றும் பிறவற்றைக் கொண்டு சகோதரத்துவத்தை அனுபவிப்பதும், நேர்மையாகவும், உணர்வுபூர்வமாகவும் இருப்பதன் மூலம் மனிதர்களின் முன்னேற்றத்திற்காக உயர்ந்த நற்பண்புகளைப் பின்பற்றுவதே இந்த ரமழான் பண்டிகையுடன் தொடர்புடைய நோக்கங்களாகும். அனைத்து. ரமழான் நோன்பு வாழ்நாள் முழுவதும் மன மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதை இஸ்லாம் நடைமுறையில் சுட்டிக்காட்டுகிறது, இது சகோதரத்துவம், சுய தியாகம், சமத்துவம் மற்றும் சிக்கனம் மற்றும் ஒற்றுமையை மேம்படுத்த உதவும்.

ஆரம்பகாலத்திலிருந்தே மனித கலாசார விழுமியங்களின் அமைப்பில் வேரூன்றிய ரமழான், உலக வாழ் முஸ்லிங்கள் அனைவருக்கும் ஆன்மீக சுகத்தை அளிக்கும், மேலும் உலகம் முழுவதும் உயர்ந்த மனித குணங்களால் ஒளிரும் நாளாக மாற வாழ்த்துகிறேன் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மத்திய அரசின் ஊடாக உதவிப்...

அதற்கான அனுமதியை இந்திய மத்திய அரசாங்கம் வழங்கியுள்ளது.

இலங்கைக்கு இந்திய மத்திய அரசாங்கம் வழங்கும் நிவாரண உதவி ஒத்துழைப்புக்களுக்கு மேலதிகமாக இந்த நிவாரண உதவி அமையும் என தெரிவித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், தமிழக அரசாங்கம் முன்வைத்துள்ள வேண்டுகோளுக்கு இந்திய மத்திய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பொருளாதார ரீதியில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கைக்கு உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளதுடன் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் அதற்கான அனுமதியை மத்திய அரசாங்கத்திடம் கோரியிருந்தார்.

அதற்கிணங்க நேற்றைய தினம் இந்திய மத்திய அரசு அதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்று உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளார். இந்திய மத்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கு மேலதிகமாக தமிழ்நாடு மாநில அரசாங்கம் இலங்கைக்கு ஒத்துழைப்புக்களை வழங்க முடியும் என்றும் அவர் மத்திய அரசாங்கத்தின் சார்பில் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் கடிதம் மூலம் தமிழக முதல்வருக்கு அறிவித்துள்ளார்.

தமிழக அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்துக்கு தமிழக எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பாரதிய ஜனதா கட்சி உள்ளிட்ட கட்சிகள் ஏகமனதான இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளன.

அதற்கிணங்க 40 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கு தமிழ் நாட்டு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

(ஸ)

## புதிய பிரதமராக யார் வந்தாலும் நாட்டில் எந்த...

இதன்போது மேலும் தெரிவிக்கையில், “நாட்டில் தற்பொழுது அரசியல் ஸ்திரமற்ற நிலை காணப்படுகின்றது. பிரதமரை மாற்ற வேண்டும் என்று ஒரு குழு விடாப்பிடியாக நிற்கின்றார்கள். எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டுவருவதற்கு தீர்மானித்துள்ளது

தற்போதைய பிரதமர் பதவி விலகினால் புதியவர் பிரதமராக வருவார். அவருடன் ஒரு புதிய அமைச்சரவை உருவாகும். அந்த அமைச்சரவையை உருவாக்குவதற்கு ஐவர் கொண்ட குழுவினை உருவாக்கியுள்ளார்கள். அந்த ஐவர் கொண்ட குழுவில் உள்ளோரில் எமக்கு திருப்தியில்லை. அவ்வாறான நிலையில் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருவதன் மூலம் நாட்டில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

ஜனாதிபதி நாட்டின் தலைவர். அவர் அவ்வாறே இருப்பார். அதேபோல பிரதமர் பதவி விலகினால் இன்னொரு பிரதமர் வருவார். அவருடன் இணைந்து புதிய அமைச்சரவை உருவாகும். அவ்வாறு உருவாகும் அமைச்சரவை தற்போதுள்ள அமைச்சரவையை விட மிகவும் கொடூரமான அமைச்சரவையாக இருக்குமாக இருந்தால் எவ்வாறு இருக்கும் என ஆழமாக பார்க்கவேண்டும். எனவே நாட்டில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்து நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி முறையினை ஒழிப்பதன் மூலமே நாட்டில் ஏதாவது மாற்றம் ஏற்படும்.

இந்த நாட்டில் எவர் பிரதமர் பதவிக்கு வந்தாலும் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை. அத்தோடு நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு கூட்டமைப்பு எதிராக வாக்களிக்க வேண்டிய நிலையில் உள்ளோம். எனினும் அந்த விடயம் தொடர்பில் நாங்கள் அனைத்து கட்சிகளுடனும் ஆராய்ந்து முதல்கட்டமாக ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருவதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளோம்”என அவர் மேலும் தெரிவித்தார்.

## நல்லமல்களில் நம்பிக்கை ...

நோன்பு என்பது ஒரு முஸ்லிமை இறைநம்பிக்கையில் புடம்போட்டு அவனது ஈமானை பட்டை தீட்டுகிறது. நோன்பின் மகத்துவம் பற்றி பெருமானாரின் அறிவிப்புக்கள் பல உள்ளன. இதன் இரகசியங்களை அல்லாஹ் மட்டுமே அறிந்தவனாக இருக்கிறான். இவ்வளவு பெறுமதி மிக்க புனித மாதம் எம்மைக் கடந்து விட்டது. இருந்தாலும், இம்மாதத்தில் நாம் பெற்ற ஈமானியப் பயிற்சிகளூடாக ஏனைய மாதங்களை கழிப்பதற்கு வல்ல நாயன் "அல்லாஹ்" அருள்பாலிப்பானாக.

இவ்வாறு, நாம் பிரார்த்திப்பதுடன் நின்றுவிடாது,நமது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் நீங்கவும் நாம் பிரார்த்திக்க வேண்டும். மக்கள் எல்லோரும் அனுபவிக்க நேர்ந்துள்ள இந்த நெருக்கடிக்கு,எவராலும் தனியாக நின்று தீர்வுகான இயலாது. தனிப்பட்ட ரீதியில், எவரது தலைமையிலும் இதைச்சுமத்துவதோ, அல்லது பொறுப்பேற்குமாறு கோருவதோ சமூகப்பொறுப்பை மீறுவதாக அமையும்.

எனவே கட்சி,அரசியல் என்ற பேதமின்றிப் பிரியாமல், கூட்டாகப் பணியாற்றி எமது மக்களின் துயர் போக்க சகலரும் முன்வர வேண்டும். இந்த மனநிலைகள் ஏற்படுவதற்காக நாம், இந்தப் பெருநாளில் பிரார்த்திப் பது அவசியம்.

கூட்டுப்பொறுப்பும் பொது நலமும்தான் இந்த நிலைமைகளை விரட்டியடிக்கும். இந்தப் பொறுப்பிலிருந்து விலகி நடப்பது, விசுவாசிச் சமூகமான எமக்கு பொருத்தமுடையதல்ல. எனவே, நமது நல்லமல்களில் நம்பிக்கை வைத்து நாட்டு நிலைமைகள் நீங்க பிரார்த்திப்போமாக. இன்று பெருநாளை கொண்டாடும் முஸ்லிம் சகோதரர்களுக்கு ஈத்முபாறக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

# முன்னாள் அமைச்சர்களுக்கு தொடர்ந்தும் MSD பாதுகாப்பு

## பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

முன்னாள் அமைச்சர்களுக்கு அமைச்சர்களுக்கான பாதுகாப்பை (MSD) தொடர்ந்தும் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு தரப்பினராலும் தற்போது அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னாள் அமைச்சர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்படுவதாகவும் அதனை கருத்திற் கொண்டு முன்னாள் அமைச்சர்களுக்கு தொடர்ந்தும் அமைச்சர்களுக்கான பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது முன்னாள் அமைச்சர்களின் வீடுகளை தாக்குவதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சித்தால் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக மோதல் தடுப்பு பொலிஸ் குழுக்களை தயார் நிலையில் வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் தேவைப்பட்டால் இராணுவத்தினரின் உதவிகளையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ)

## கிராமிய ...

(03 ஆம் பக்கத் தொடர்)

அனுமதிப் பத்திரத்தை வழங்க முடியும் என்றும் எரிபொருள் நிலையங்கள் வசம் உள்ள பௌசர்களுக்கு தனியான எரிபொருள் முனையத்தின் மூலம் எரிபொருளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் முன்னுரிமை வழங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் எரிபொருள் பௌசர் உரிமையாளர்கள் மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக நாடளாவிய ரீதியில் பெரும் எரிபொருள் தட்டுப்பாடு காணப்படுகிறது.

இதன் காரணமாக பெருமளவு எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டும் திறக்கப்பட்டுள்ள எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் மக்கள் நிற்பதையும் காண முடிகிறது. அவர்களின் வேலை நிறுத்த போராட்டத்திற்கு ஐஓசி நிறுவன பௌசர் உரிமையாளர்களும் ஒத்துழைப்பு வழங்குவதால் எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருவதையும் காண முடிகிறது.

எனினும் பிந்திக்கிடைத்த தகவல்களின்படி தனியார் எரிபொருள் பௌசர் உரிமையாளர்கள் சங்கம் மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ஸ)

## நம்பிக்கையில்லாப்...

(03 ஆம் பக்கத் தொடர்)

இதன்போது நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி சூழ்நிலை, அரசாங்கத்துக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை ஆகியன தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையின் இறுதியில் நாளை 4ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## சவால்மிக்க காலத்தில் தியாக...

இலங்கையிலுள்ள அனைத்து இஸ்லாமிய சமூகத்தினருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாம் நாட்காட்டியின் மிக முக்கியமான மாதத்தில், உங்கள் வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்காக உலக வாழ்க்கையிலிருந்து சற்று ஒதுங்கி ஆன்மீக சடங்குமுறைகளை நிறைவேற்றுவது ஒரு சிறந்த பணியாகும். அதற்காக இந்த ரமழான் நோன்பு காலத்தில் நீங்கள் அனைவரும் நற்செயல்களில் மாத்திரம் கவனம் செலுத்துவது பாராட்டுக்குரிய விடயம்.

பட்டினியால் வாடும் ஒருவரின் வலியைப் புரிந்துகொள்வதும், தியாக வாழ்வின் மதிப்பை உணர்வதும் இந்த நோன்பு காலத்தில் நீங்கள் பெறும் விலைமதிப்பற்ற வாழ்க்கை மதிப்புகளாகும்.

அல் குர்ஆனின் கூற்றுக்கு அமைய ரமழான் நோன்புடன் தொடர்புடைய உன்னத நற்பண்புகளைப் பின்பற்றி அந்த நோன்பு காலத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்த உங்களுக்கு அதன் ஆன்மீக சாரத்தை சமூகமயமாக்குவதற்கான சந்தர்ப்பம் தற்போது உதயமாகியுள்ளது என்பது எனது நம்பிக்கை.

முழு நாடும் சவால்மிக்கதோர் காலகட்டத்திலுள்ள இத்தருணத்தில் சமூகத்தில் உள்ள பிறர் குறித்த உணர்வுடன் தியாக மனப்பாங்குடன் செயற்படுமாறு நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் ஆசீர்வாதம் நிறைந்த இனிய ஈத்உல்ஃபிதர் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் , என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## மானிட சுபீட்ச வாழ்வுக்கு வழிவகுக்கும்...

கொண்டாடும் பெருநாள் ரமழான் பெருநாள் அல்லது ஈதுல் பித்ர் இன்று கொண்டாடப்படுகிறது.

ரமழான் நோன்பு காலத்தில் பசித்திருப்பவர்களின் பசியைப் புரிந்து கொள்ளவும், அது பற்றி உணர்வுப்பூர்வமாக அறிந்து கொண்டு வாழ்வதற்கும், மனதைக் கட்டுப்படுத்தும் திறனை வளர்த்துக் கொள்வதற்குமான ஒரு சிறந்த வாய்ப்பு இந்த ரமழான் நோன்பாகும்.

இந்த சிறந்த வாழ்க்கை முறைகளை ஒரு மாதம் மட்டும் அல்லாமல் அன்றாட வாழ்விலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது அவர்களின் நோக்கமாகும். அர்ப்பணிப்பு, சுய கட்டுப்பாடு மற்றும் சமத்துவத்திற்கு வழிவகுக்கும் சுய தியாகம் ஆகியவை தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சமயக் கல்வியறிவு பெற்ற முஸ்லிம்கள் இலங்கைச் சமூகத்தில் ஏனைய இனங்கள் மற்றும் மதங்களுடன் வரலாற்று ரீதியாக புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது

பரஸ்பர நட்பு, மனித நேயம், அன்பு ஆகியவற்றால் அவர்கள் நீண்டகாலமாகப் பேணி வரும் நல்வாழ்வின் செய்தி உன்னதமானது.

அனைத்து முஸ்லிம்களுக்கும்,

பரஸ்பர அன்பும், எல்லையில்லா சகோதரத்துவமும், நட்பு ரீதியான அடிப்படையில் உன்னதமான தாய் நாட்டைக் கட்டியெழுப்பும் உறுதியும் கொண்ட நாளாக இந்த ரமழான் பெருநாள் அமையட்டும்! என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## "ஆவா" குழுவை சேர்ந்த...

செய்யப்பட்டனர்.

அவர்கள் ‘ஆவா குழு வவுனியா’ என பெயரிட்ட பதாகைகளுடன் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன், கூரிய ஆயுதங்களையும் தம் வசம் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட 16 பேரும் ஓமந்தைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கூரிய ஆயுதங்கள், பதாகைகள், கைத்தொலைபேசிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் வவுனியா மருதங்குளம், அரசன்குளம், கோவில்குளம், கோழியாகுளம், சாஸ்திரிகூழாங்குளம், நெளுக்குளம், ஓமந்தை மற்றும் முல்லைத்தீவு, தலைமன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த 18 தொடக்கம் 26 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் எனவும், இருவர் 44 மற்றும் 45 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## தடுப்பூசி அட்டை குறித்து...

செல்லும் போது முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்தும் அட்டையை வைத்திருப்பது அவசியமாகும்' என்று குறிப்பிட்டு முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவினால் கடந்த பெப்ரவரி மாதம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

அந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்து தற்போதைய சுகாதாரத்துறை அமைச்சர் சன்ன ஜயசுமணவினால் ஏப்ரல் 29 ஆம் திகதி புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மே தின கூட்டங்கள்


වැඩකරන ජනතා මැයි රැළිය




1 MAY
වමේ මැයි දිනය










NKA SAMA SAMAJA PARTY


















People's Liberation Front



# அன்னை மரியாளின் பெருமை கூறும் மே மாதம்



மே அன்னை மரியாளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். மாதாவே துணை நீரே! உம்மை வாழ்த்தி போற்ற வரம் தாரும் என்று மாதாவின் மகிமையை போற்றுகிறது உலகம்.

அன்னைக்கு கரம் குவிப்போம் அவள் அன்பை பாடிடுவோம் என்று அன்னையின் அன்பை பாடல் மூலம் பாடிப் போற்றுகிறோம். எனவே, அம்மாவின் அன்புத் துணை இருக்கும் போது நாம அஞ்ச வேண்டியதில்லை. எனவேதான் அன்னையின் பெருமையினை அவர் தாழ்ச்சியினை நாம் நன்கு அறிந்து அதன்படி வாழ மே மாத பக்தி முயற்சி பெரும் துணை புரிகின்றது.

அம்மா என்றாலே தியாகம்! தியாகத்தின் தாய் என்பதால் நாம் வாழ்வபெற தன் ஒரே மகனை சிலுவைச் சாவை ஏற்று தந்தையின் சித்தத்தை நிறைவேற்றிட துணை புரிந்தவர் நம் அன்னை.

தாழ்ச்சி, பொறுமை, நம்பிக்கை, இடைவிடாது செபித்தல், குடும்ப பொறுப்பு, துன்பத்தை ஏற்றல் அன்னையின் முன்னுதாரணமாகும். கபிரியேல் தூதரின் வாழ்த்தினைக் கேட்ட அன்னை கலங்கி இது எப்படியாகும்? நான் கணவனை அறியேன் என்றார். உன் வழியாக உலகத்திற்கு மீட்பு உண்டு. நீ அஞ்சாதே, தூய ஆவி உன்னில் நிழலிட நீ கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெறுவாய் என்றதும், "இதோ, உமது அடிமை" என்று கீழ்ப்படிந்து இறைத் திட்டத்தை ஏற்றவர் நம் அன்னை.




"வயது முதிர்ந்த உன் உறவினர் எலிசபெத் கருவுற்று இது ஆறாம் மாதம்" என்று தேவதூதர் கூறிட மரியா அதை நம்பினார். அது மட்டுமல்லாமல், உடனே விரைந்து சென்று எலிசபெத்திற்கு உதவி செய்து ஆறு மாதம் அங்கு தங்கி பணி செய்தார்.

நம்பியதால், கீழ்ப்படிந்ததால் உதவி செய்ய விரைந்து சென்றார். இருவரின் சந்திப்பால் இரு உள்ளங்கள் பொங்கிட ஒருவர் ஒருவரை வாழ்த்தி இறை அன்பில் நம்பிக்கையை வளர்த்தனர். இறைவனின் தாயாகப் போகிறோம் என்ற பெருமை இன்றி சாதாரண பெண்மணி போல் மாதா எசலிபெத்திற்கு உதவியது அவரின் அடக்கம் தற்பெருமை யின்மையைக் காட்டுகிறது.



துன்பங்களின் மத்தியில் மாதா இறை சித்தத்தை ஏற்று நமக்கு மீட்பின் தாயானது உலகம் அறிந்த உண்மை. எனவே உலகம் அன்னையின் அன்பைப் போற்றிப்பாடுகிறது.

உலகம் போற்றும் வேளாங்கண்ணி ஆலயம் தம்மை நாடி வந்த யாவருக்கும் வரங்களை வாரிக் கொடுக்கிறது. எனவே, துன்பத்தில் துணை புரியும் அம்மா நம் தாய் மரியாள்.

பூண்டி புதுமை மாதா, வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா, பாத்திமா மாதா, லூர்து மாதா, சலேத் மாதா, கார்மேல் மாதா, செபமாலை மாதா, உத்தரிய மாதா, அமலோற்பவ மாதா என்று மாதா பெயர் சூட்டப்பட்ட பல புண்ணிய ஸ்தலங்கள் மாதாவிற்கு உள்ளன. இலங்கையில் மடுமாதா, மெட்சுகோரியே மாதா, நற்கருணை மாதா என்றும் மாதாவைப் போற்றி மக்கள் புகழ்ந்து பாடுகின்றனர்.

## இறை இரக்கத்தின் பெருவிழா வழிபாடுகள்






இறை இரக்கத்தின் பெருவிழாவையொட்டி கொழும்பு திம்பிரிகஸ்யாய புனித திரேசாள் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. திரு இருதய ஆண்டவரின் திரு உருவப்படம் பிரதிஷ்டை செய்யப்பட்டு விசுவாசிகள் அதனை வழிபட்டதுடன் திருப்பலி பூசையின் பின்னர் இறை இரக்க தியான வழிபாட்டுக் குழுவினர் சிற்றுண்டிகளை வழங்கி மகிழ்வித்தனர். (பட உதவி: மிலியன் ஜேம்ஸ்)

# துன்பம் சவால் நிறைந்த வாழ்க்கை இயேசுவோடு வாழ்வதற்கான பாதை

இயேசு ஒரு மாமனிதர். இன்றும் உலகத்தாரால் வியப்போடு பார்க்கப்படும் ஒருவர். ஆனால் அவர் இறைமகன். அவர் கடவுள். தம்மில் இறைவனுக்குரிய இயல்பையும் மனிதனுக்குரிய இயல்பையும் ஒருங்கிணைத்து கடவுளும் மனிதனுமாக எமது உடலைத் தாங்கி எம்மோடு வாழ வந்தவர்.

அவர் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து இன்று உயிர்ப்பு என்ற மகிமையோடு விளங்குகின்றார். உயிர்ப்பு என்பது இயற்கைக்கு மாறான ஒரு நிகழ்வு. மனிதர்கள் பிறந்து இறக்கின்றார்கள். ஆனால் உயிர்ப்பது இல்லை. உயிர்ப்பு என்று ஒன்று நிகழ்ந்தால் அதன்பின் அவர்கள் இறக்கக்கூடாது.


நற்செய்தியில் இயேசு பலரை உயிர் பெறச் செய்திருக்கிறார். ஆனால் அதன் பின் அவர்கள் இறந்து போனார்கள். இயேசுவின் உயிர்ப்பு இவை எல்லாவற்றிலும் இருந்து முற்றிலும் மாறுபட்டது.

அவர் இறந்தார் அடக்கம் செய்யப்பட்டார் உயிர்த்தார் இனிமேல் இறக்க மாட்டார், அவர் என்றும் வாழ்கின்றார்.

இயேசு தமது பாடுகள் மரணம் உயிர்ப்பு என்னும் பாஸ்கா நிகழ்வு வழியாக எமக்கு கூற வருவது என்ன? உலகத்தில் மனிதனாகப் பிறந்தது துன்பங்களை அனுபவிப்பதற்காக அல்ல. மாறாக வாழ்வில் வருகின்ற துன்பங்களையெல்லாம் இன்பம் ஆக்கி மகிழ்வாக வாழ்வதற்கே.

அப்படியானால் மகிழ்வோடு வாழ்வதுதான் எமக்கு இறைவன் வகுத்த வழி, விதி. இயேசு தம் வாழ்வில் நிகழ்ந்த அனைத்து துன்பங்களையும் எதிர்ப்புகளையும் வேதனைகளையும் பழிச் சொற்களையும் பொறுமையோடு ஏற்று, அவற்றிற்கெல்லாம் அப்பால் இவர்களையெல்லாம் கடந்த ஒரு நல்ல வாழ்வு உண்டு என்று நிரூபித்துக் காட்டினார்.

துன்பங்கள்,இழப்புகளை எல்லாம் கடவுள் அறியாதவர் அல்லர். இயேசு அனைத்தையும் ஏற்று எல்லாவற்றையும் தமது தந்தைக்கு ஒப்புவித்து தமது நியாயமான நிலையை கடவுளிடம் கூறி நீதிக்காக காத்திருந்தார்.



தமது இறப்பின் இறுதிவரை கடவுள் மீது கொண்டிருந்த அந்த நம்பிக்கையை அவர் விட்டு விடவேயில்லை. எம்மை படைத்தவர் எம்மை நன்கு அறிவார். எமக்கு நிகழ்பவை யாவற்றையும் நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறார். ஆகவே எமது வாழ்வில் கடவுள் நம்பிக்கை என்பது பிரதானமானது என்று இயேசுவின் உயிர்ப்பு எடுத்தியம்புகின்றது.

அத்துடன் இயேசு தமக்கு ஏற்பட்ட துன்பகரமான நிகழ்வுகளை எல்லாம் எவ்வாறெல்லாம் அதனூடாக சென்று வெற்றிகரமாக மாற்றினாரோ, அதேபோல நாமும் எமது வாழ்வில் வரும் துன்பங்களை எதிர்கொண்டு செல்ல வேண்டும். சவால்களையும் துன்பங்களையும் வேதனைகளையும் கண்டு நாம் ஒருபோதும் பயந்து பின்வாங்கக் கூடாது. எம்மிடம் உள்ள உண்மைத் தன்மையை நாம் வெளிப்படையாகச் சொல்ல ஒரு போதும் தயங்கக் கூடாது. உண்மை உரத்து இடித்துரைக்கப் பட வேண்டும். சவால்களைக் கண்டு அஞ்சுபவன் இயேசுவைப் பின்பற்றும் ஒருவனாக இருக்கவே முடியாது. ஏனென்றால் இயேசு சவால்களை எதிர்கொண்டார். உண்மையை உரக்க கூறினார். அதற்காக துன்பங்களை ஏற்க தயாராகவும் இருந்தார். உண்மையின் வழியிலே உயிரே போனாலும் அதை இழக்கவும் தயாராக இருந்தார்.

எனவே துன்பங்களை நாம் எதிர்கொண்டு ஏற்று வாழ்வில் இயேசுவைப் போல அவற்றை வெற்றியாக மாற்ற வேண்டும்.

அடுத்ததாக நாம் உயிர்க்க வேண்டும். எமக்கு உயிர்ப்பு வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள் முதலில் இறக்க வேண்டும். இறக்க வேண்டுமென்றால் அதன் வழியில் வேதனைகளை அனுபவிக்க தயாராக இருக்க வேண்டும். நாம் எதற்காக இறக்க வேண்டும்? நமக்காகவே தான் நாம் இறக்க வேண்டும். எம்மிடம் உள்ள தீய நோக்கங்களுக்காக, நாட்டங்களுக்காக நாம் இறக்க வேண்டும். எமது வாழ்வை இயேசுவின் பாடுகளின் நிமித்தம் மாற்றியே ஆக வேண்டும். அதுதான் இயேசுவோடு இறப்பது, அதுதான் இயேசுவோடு அடக்கம் செய்யப்படுவது, அதுதான் இயேசுவோடு உயிர்ப்பது. எனவேதான் நாம் உயிர்க்க வேண்டும். அப்போதுதான் இந்த உலகமும் உயிர்த்தெழும். (ஸ)

# மே தினத்தில் போற்றப்படும் புனித சூசையப்பர்



## தொழிலாளர்களின் பாதுகாவலராக திகழ்கிறார்

தொழிலாளர்களின் பாதுகாவலராக புனித சூசையப்பர் போற்றப்படுகிறார். தமது தகுதிக்கும் அறிவுத்திறனுக்கும் உடல் வலிமைக்கும் ஏற்ப உழைக்கும் கரங்களைப் போற்றும் நாள். இறைவனின் படைப்புத் தொழிலின் பங்காளிகளான தொழிலாளர்களை கரம் குவித்து வணங்கி வாழ்ந்திடும் நன்னாள். தனக்கு மட்டுமின்றி தன்னைச் சார்ந்தவருக்கும் மகிழ்ச்சியுடன் உழைக்கும் ஒருவனை போற்றும் நாள்.



**இந்த விழா எவ்வாறு தோன்றியது என பார்த்தால்;**

உழைப்பைப் பரிசுத்தப்படுத்தவும் உழைக்கிறவர்களுக்கு ஒரு மேல் வரிச்சட்டத்தை கொடுக்கவும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு பரலோக பாதுகாவலரை கொடுக்கும் வகையில் 12ஆம் பத்திநாதர் 1955ல் இந்த விழாவை ஏற்படுத்தினார்.


தொழிலாளர் தினத்தன்று தொழிலாளர்களின் பாதுகாவலர் சூசையப்பர் திருவிழாவையும் இணைத்துச் சிறப்பிக்குமாறு 1955ஆம் ஆண்டு பரிசுத்த பாப்பரசர் அறிவித்தார். அன்று முதல், "மே தினம் சூசை தினம்' என்று பிரகடனப்படுத்தப்பட்டது.தேம்பாவணி போன்ற காப்பியங்கள் அதனை எடுத்துரைக்கின்றன.

இயேசு கிறிஸ்துவின் தாயான மரியாளின் கணவர் சூசையப்பர். அவர் ஒரு நேர்மையாளர், நீதிமான், அயராது உழைப்பவர். (மத். 1:19)

கன்னிமரியாளின் கணவரும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையுமான புனித சூசையப்பரைப் பற்றி பரிசுத்தவேதாகமம் மிகச் சுருக்கமாகவே சொல்கிறது. 'நீதிமான்' என்ற வார்த்தை, அவர் கடவுளுக்கு மிகவும் பணிந்து நடப்பவர் எனக் காட்டுகிறது. தச்சுத் தொழில் செய்து தந்தைக்குரிய பொறுப்பேற்று கணவருக்குரிய கடமைகளை நிறைவேற்றி குடும்பத்தை நல்லமுறையில் அவர் நடத்தினார். கன்னிமரியின் பேறுகாலத்தில் சத்திரம் தேடி அலைந்தபோதும் குழந்தையைக் கொடுங்கோலன் ஏரோதுவின் பிடியிலிருந்து விடுவிக்க எகிப்துக்கு ஓடிச் சென்றபோதும் பல இன்னல்களை அவர் எதிர்கொண்டு அவற்றைத் தாங்கிக்கொண்டார். இதன் வழியாக இயேசுவின் மீட்புப் பணியில் தன்னையும் அவர் இணைத்துகொண்டார்.

புனித சூசையப்பர் பழைய ஏற்பாட்டில் காணப்படும் சூசையோடு ஒப்பிடப்படுகிறார். உழைப்பின் மேன்மையைப் பறைசாற்றும் திருக்குடும்பத்தின் தலைவர் "வளம் தரும் வளன்' சூசையின் வழியில் நம் பணிகளைப் பொறுப்புடன் நிறைவேற்றி இறைவனின் மகிமையில் மன நிறைவடைவோம்!

எம்.மரிய பெல்சின்...



# ஈதுல் பித்ர் சிறப்பு மலர்



# ஈகையையும் சமூக ஒற்றுமையையும் பறைசாட்டும் நோன்பு பெருநாள்

அல்லாஹு தஆலா முஃமின்களாகிய எமக்கு இரண்டு பெருநாட்களைத் தந்துள்ளான். அதில் ஒன்று ஈதுல் அழ்ஹா. மற்றையது ஈதுல் பித்ர். இவ்விரு பெருநாட்களையும் முக்கியமான இரண்டு வணக்கங்களைத் தொடர்ந்து தான் அல்லாஹ் எமக்குத் தந்திருக்கிறான்.

ரமழானுடைய நோன்பை நோற்று அதனை பூர்த்தி செய்துவிட்டு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி அவனைப் பெருமைப்படுத்தும் நோக்கிலும் ஈகைத் திருநாளை நாம் கொண்டாடுகிறோம். ரமழான் மாதம் முடிந்து ஷவ்வால் மாதத் தலைப் பிறையைக் கண்டதும் (பெருநாளுடைய பிறை) ஸகாத்துல் பித்ரைக் கொடுக்க வசதியுள்ளவர்கள் (தனக்கும் தனது பொறுப்பில் உள்ளவர்களின் பெருநாளுடைய தேவைக்கு மேலதிகமாக உள்ளவர்கள்) மீது கடமையாகின்றது.

நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்.'ஸகாத்துல் ஃபித்ர் நோன்பாளியிடமிருந்து நிகழ்ந்த வீணான செயல்கள் மற்றும் தீய வார்த்தைகளுக்கு குற்றப்பரிகாரமாகவும் ஏழைகளுக்கு உணவாகவும் அமைகின்றது. இந்த ஸகாத்துல் ஃபித்ரை பெருநாள் தொழுகைக்கு முன் கொடுப்பது சுன்னத்தாகும். ஆனால் பெருநாள் தொழுகையை விட பிற்படுத்துவது மக்ரூஹ். அதிலும் பெருநாள் தின சூரிய அஸ்தமனத்தை விட அதனைப் பிற்படுத்துவது ஹராமாகும். இதனை ரமழான் மாத பிறையைக் கண்டதிலிருந்து பேணுதலுக்காக மக்கள் நிறைவேற்றி வருகின்ற வழமையும் உள்ளது. இதுவும் அனுமதிக்கப்பட்டதாகும்.

பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்துப்படி, பிரதான உணவாக உட்கொள்ளக்கூடிய தானிய வகையில் இருந்தே இதனை வழங்கப்பட வேண்டும். இதனை நிறைவேற்றக் கடமையான ஒவ்வொருவரும் 'ஒரு ஸாஃ' அளவு வீதம், அதாவது 2.4 கிலோ கிராம் வீதம் ஸகாத் பெறத்தகுதியானவர்களை இணங்கண்டு கொடுத்தல் வேண்டும்.

பெருநாள் தினத்தில் பெருநாளுக்காக குளிப்பதும் நறுமணம் பூசிக் கொள்வதும் இருக்கின்ற ஆடைகளுள் அழகான ஆடைகளை அணிந்து கொள்வதும் பெருநாள் தினத்திலே நாம் கடைபிடிக்க வேண்டிய ஸுன்னாக்களாகும். ஆடை அணிகலன்கள் புத்தம் புதியதாக இருக்க வேண்டும் என்பதில்லை. சிறந்த ஆடையாக இருந்தால் போதுமானது.

நோன்பு பெருநாளைப் பொறுத்தவரை தொழுகைக்கு முன்பு உண்டு விட்டு நேரகாலத்தோடு பெருநாள் தொழுகையை நிறைவேற்ற செல்ல வேண்டும்.

பெருநாள் தொழுகை எந்த இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் எனும் விடயத்தில் ஷாஃபிஈ மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்களைப் பொறுத்தவரையில் ஓர் ஊரின் மஸ்ஜித் மக்களுக்குப் போதுமானதாக இருக்குமாயின் மற்றைய இடங்களில் தொழுவதைவிட மஸ்ஜிதில் தொழுவதே மிகச் சிறப்பானதாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் முற்றவெளியை நாடிச் சென்றது ஊர் மக்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒன்று சேர வேண்டுமென்ற நோக்கத்தினாலாகும். அந்நோக்கம் மஸ்ஜிதில் கைகூடிவிட்டால் அங்கு தொழுவதே சாலச் சிறந்தது என குறிப்பிடுகின்றனர். மேலும் நபி (ஸல்) அவர்கள் தனது மஸ்ஜிதில் இடவசதி போதாமை காரணமாகவே முற்றவெளிக்குச் சென்றார்கள் என்று ஸுனன் அல்பைஹகீ எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருநாள் தினத்தில் கடைப்பிடிக்க வேண்டிய



மற்றுமொரு முக்கியமான ஸுன்னா தான் ஒரு பாதையால் தொழுகைக்குச் சென்று மற்றொரு பாதையால் வீடு திரும்புவதாகும். **(ஆதாரம்: ஸஹீஹு முஸ்லிம்)**

பெருநாள் தொழுகை வலியுறுத்தப்பட்ட ஒரு ஸுன்னா (ஸுன்னா முஅக்கதா). பெருநாள் தொழுகையைப் போன்று பெருநாள் குத்பாவைக்

அஷ்ஷெய்க்
**எ.எச்.எம் முஹம்மது மின்ஹாஜ் ...**
முப்தி (காஷிபி)

கேட்பதும் ஸுன்னா முஅக்கதா என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பெருநாள் தினத்தில் சந்திக்க கூடியவர்கள் தங்களுக்கு மத்தியில் 'தகப்பலல்லாஹு மின்னா வ மின்கும்' என்று துஆ செய்து வாழ்த்துத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். இத்தினத்தில் அதிகமதிகம் அல்லாஹ்வைப் புகழ்ந்து தக்பீர் சொல்ல வேண்டும். ஷவ்வால் மாதத் தலைப்பிறை கண்டதிலிருந்து தொழுகையை நிறைவேற்றும் வரை தக்பீர் சொல்வது முக்கியமானது. அவ்வாறே அதிகமதிகம் துஆ செய்யவேண்டும். குறிப்பாக எமது வணக்க வழிபாடுகள் அங்கீகரிக்கப்படுவதற்கும் எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி நீங்கி நாடு அபிவிருத்தியின் பக்கம் மீள்வதற்கும் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் வழமைக்கு திரும்புவதற்கும் துஆ செய்ய வேண்டும்.

இலங்கை பல்லின சமூகத்தவர்கள் வாழுமொரு நாடாக இருப்பதால் பிற சமயத்தவர்களுடைய உணர்வுகளை மதிப்பது எமது கடமை. எனவே பொருளாதார நெருக்கடியான இச்சந்தர்ப்பத்தில நாம் பெருநாளை கொண்டாடும் போது அவர்களுடைய உணர்வுகள் புண்படுகின்ற அளவுக்கு நடந்து கொள்வதைத் தவிர்த்துக் கொண்டு அவசியமான செலவுகளுடன் போதுமாக்கிக் கொள்ள வேண்டும். ஏழைகள், சிரமத்திலுள்ளவர், பாதிக்கப்பட்டவர்கள் போன்றோருக்கு தர்மங்களை வழங்க வேண்டும். எமது சகோதர சகோதரிகள், இனபந்துக்கள், அன்பர்கள், உற்றார் உறவினரை அரவணைப்பது, ஆதரிப்பது, அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது அவர்களுடனான உறவைப் பலப்பலப்படுத்திக் கொள்வது, பகைமை இருந்தால் அதனை அல்லாஹ்வுக்காக மன்னித்து உறவைப் புதுப்பித்துக் கொள்வது... போன்ற உன்னத கூலிகளைப் பெற்றுத் தரக்கூடிய நல்லமல்களில் இத்தினத்தில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, எமது பெற்றோர், சகோதர, சகோதரிகள் உட்பட இரத்த உறவினர்களுடனான உறவுகளை பலப்படுத்திக்கொள்ள இத் திருநாள் உதவும். பெருநாள் தினத்தில் அண்டை அயலவர்களுக்கு நாம் அதிகம் உபகாரம் செய்ய வேண்டும். அவர்கள் முஸ்லிம்களாகவோ முஸ்லிமல்லாதவர்களாகவோ இருக்கலாம். அவர்களைச் சந்தித்தல், அவர்களுக்கு உணவுப் பண்டங்களை வழங்குதல் போன்றவற்றை மேற்கொள்ளலாம். இவற்றின் ஊடாக சாந்தியும் சமாதானமும் ஐக்கியமும் நிலவக்கூடிய சமூகத்தை கட்டியெழுப்ப வல்ல அல்லாஹ் துணைபுரியட்டும். அவனது தூதர் (ஸல்) அவர்களின் வழிகாட்டிய பிரகாரம் இத்திருநாளை அமைத்துக் கொள்வோம்.



## நன்மாதமே ரமழான்

மாதங்கள் பன்னிரண்டில் மகிமை பெறும் ரமழான்
ஆதி இறை அளித்த அருள் மிகுந்த நன்மாதம்
வேத மாய் வாழ்வின் ஒளிவிளக்காய் நின் றொளிரும்
போதம் மறை குர்ஆன் புவி பெற்ற நல் ரமழான்

புனித மறை போதிக்கும் புகழ் பூத்த வாழ்வியலை
இனிய நபி சுன்னாவை இயன்ற வரை பேணி நின்று
இதமாக நோன் பிருந்து தொழுது சக்காத் தளிக்கும்
திரு நிறைந்த நல் வாழ்வைச் செப்புகின்ற நல் ரமழான்

அல் குர்ஆன் அல்லாஹ்வின் அருங்கொடை யென்றே நினைந்து
அனுதினமும் ஓதி அதன் கருத்துணர்ந்து நேர் வழியில்
நல்ல வோர் அடியானாய் நாயனது நேசத்தை
எல்லை யில்லா இன்பத்தை ஈட்டித் தரும் ரமழான்

கோபம் குரோதம் கொடுஞ் சூது வாதொழித்து
பேதங் கள் நீக்கிப் பிற மாந்தர் தம்முடனே
பாச முடன் பழகிப் பண்புக் கிலக்கண மாய்
நேசமுடன் வாழ்வதற்கு நெறிப் படுத்தும் நல் ரமழான்

ஆருயிரும் அழ குடலும் அனுதினமும் நல்லு ணவும்
சீர்பெருகு பிள்ளை மனை செல்வமுடன் கல்வி தரும்
மாதலைவன் அல்லா வின் மகிமை உணர வைத்து
நேச முடன் அல்லாஹ்வை நெருங்க வைக்கும் நல்ரமழான்

உள்ள நிதி போதாதென் றுழைத் துழைத்துச் சேர்த்து வைக்கும்
கன்மனத்து மாந்தர் களும் கனிந்து பெருங் கருணையுடன்
இல்லாத ஏழை களை அநாதை களை ஆதரிக்கும்
நல்லமனம் கொள்ள வைக்கும் நல மார்ந்த நல்ரமழான்


றமழானில் செய்கின்ற நல் அமல்கள் அத்தனைக்கும்
நானே பரிச ளிப்பேன் என்ற இறை வாக்குதனை
மனதார வே உணர்ந்து மா தவத்தில் ஈடுபட
மாந்தர்க் கறி வுறுத்தும் மாண்புடைய நல்ரமழான்

தொழுகை தான் சொர்க்க மதன் திறவுகோல் என்றோதும்
பழுதிலா நல் லெண்ணம் பதிந்த மனத்துடனே
பர்ளோடு சுன்னத்தை தஹஜ்ஜுத் தறாவீஹை
நிறைவு செய்யும் நல் அமலை நினைவூட்டும் நல்ரமழான்

வட்டி தவிர்ப் பதற்கும் வட்டிக் கே வட்டி பெறும்
கெட்ட செயல் அகற்றிக் கீழ்த்தரமாய் வாழுவதை
விட்டொழித்து அல்லாவின் ஆணைகளைப் பேணி நின்று
இட்டமுடன் வாழ்வதற்கு ஏவுகின்ற நல்ரமழான்

நல்லறங்கள் செய்வ தையும் பொல்லாச் செயல் களையும்
நாயன் அறிகின்றான் என்றபே ருண்மை யினை
உள்ளம் உணர்ந் திடவும் ஒழுக்க நெறி பேணிடவும்
நல்ல தொரு வாய்ப் பளிக்கும் நன் மாதமே ரமழான்.

சுஐப் எம். காசிம்



## நோன்பப் பெருநாள்

பசித்திருந்து பலன்பெற்றோம் பெருநாளென்று.
பாக்கியமே பாக்கியமே பாக்கியந்தான்.
புசிக்காத தொன்றுமட்டும் இல்லை இன்னும்
பவமொன்றுஞ் செய்யாதே மனத்தைக் காத்தோம்
நிசியுறக்கந் தவிர்த்தெழுந்து நிலையில்நின்று
நித்தியனைத் தொழுதிறைஞ்சி பாவந் தீர்க்கக்
கசிந்துருகிப் பிராத்தித்தோம் தலைவா எம்மைக்
கொடுநரகந் தவிர்த்துச்சுவன் தருவா யென்றே!

இரப்பவர்க்கு இல்லையென்னா(து) அருளும் வல்லோன்
ஏந்துகரம் விடுவதில்லை வெறுமை யாக
சுரந்துகொண்டே இருக்குமவன் அருட்சுனையின்
செல்வத்தை அள்ளியள்ளிக் கொட்டிச் சேர்ப்பான்
பரிந்துரைகள் வேண்டாங்காண் பண்ணவன்பால்
பரிசுபெறப் படைத்தெம்மைக் காக்கும் வல்லோன்
சிரம்பணியும் அனைவருக்கும் ஒன்றேபோல
தனதருளைப் பொழிவானோர் ஐயம் இல்லை!

தக்பீரின் முழக்கமெல்லாப் பள்ளி தோறும்
செவியினிக்கப் பேரொலிக்கும் பெருநாட் காலம்
திக்கெல்லாம் காற்றள்ளிச் செல்லும் மக்கள்
செய்தபவம் அழிந்தமனத் திருப்தி கொள்வார்
சொர்க்கத்தின் வாடைநெஞ்சுள் மணக்கும் வல்லோன்
தருவனெனச் செப்பியதால் தீனோர் தீனின்
பக்கலினி நாமென்னும் ஓர்மைகொள்வார்
பற்றியநற் கருமங்கள் தொடருவாரே!

காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

மலர் தயாரிப்பு:
**மர்லின் மரிக்கார்**

# ஈதுல் பித்ரின் மகத்துவம்

அகில உலகமும் உவகையில் திளைத்து இன்ப வெள்ளத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் பொன்னாளான ஈதுல் பித்ர் எனப்படும் ஈகைத் திருநாள் இன்று எம்மை வந்தடைந்துள்ளது. உலக முஸ்லிம்கள் அனைவரும் ஒரு மாத காலமாக பகற் காலங்களில் பசித்திருந்தும் இரவு வேளைகளில் விழித்திருந்தும் இறைவணக்கத்தில் ஈடுபட்டு ரமழான் மாத முடிவில் புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பொன்னான வேளையிது.

அகத்தையும் புறத்தையும் பரிசுத்த ப்படுத்தி மாசற்ற பத்தரை மாற்றுப் பசும் பொன்னாய் எம்மை மாற்றியமைத்த ரமழான் நேற்றுடன் புறப்பட்டுவிட்டது. பொன்னான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமது ஐம்புலன்களையும் அடக்கி, இரவு பகல் பாராது வணக்கங்களில் ஈடுபட்டு பாவமன்னிப்புக் கோரி தான, தருமங்கள் செய்து இந்த ரமழானில் வலம் வந்தோம்.

ரமழானின் சிறப்பைப் பற்றி இறைவன் குறிப்பிடும் பொழுது, இம்மாதம் பூத்துக் குலுங்கும் புண்ணியங்கள் நிறைந்த வளமான மாதம், மக்களுக்கு நேர்வழிகாட்டக் கூடிய திருமறை இறக்கப்பட்ட புனித மாதம், மனித உள்ளத்தை தூய்மைப்படுத்தி ஏழை பணக்காரன், உயர்வு தாழ்வு போன்ற வித்தியாசமற்ற பொறுமையின் மாதம் என்றெல்லாம் கூறுகின்றான்.

'நோன்பு எனக்குரியது, நான் தான் அதற்கு கூலி கொடுப்பேன்' என்று அல்லாஹ் கூறுகிறான். புனித ரமழான் எமது உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆத்மாவுக்கும் சிறந்த பயிற்சிகளை வழங்கியது. அப்பாசறையிலே நாம் பெற்ற பயிற்சி எமது வாழ்நாள் முழுவதும் நீடித்து மணம் பரப்ப வேண்டும்.

ஒரு மாத கால நோன்பை நிறைவேற்றி, பண்பாட்டு பயிற்சி பெற்று பாவக்கறை போக்கி ஆன்மீக பரிசுத்தம் அடைந்த நெஞ்சங்கள் அனைத்தும் அந்த மகத்தான வாய்ப்பை வழங்கிய அல்லாஹ்வுக்கு நன்றி பாராட்டும் ஒரு வாய்ப்பினை இத்திருநாள் வழங்குகின்றது.

ஈதுல் பித்ர் என்றால் என்ன, அந்நாளிலே நாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் என்ன என்பன பற்றியெல்லாம் நபி (ஸல்) அவர்கள் தெளிவாக நமக்குக் காட்டித்தந்திருக்கிறார்கள்.

இப்பெருநாளின் சிறப்பம்சங்களைப் பார்க்கின்றபோது, ஏனைய வணக்க வழிபாடுகளைப் போல, இதுவும் ஒரு வணக்க வழிபாடு என்பதை மறந்து விடக்கூடாது. ஷவ்வால் மாதத்திற்கான பிறை தென்பட்டவுடன் ரமழான் மாதம் முடிவுக்கு வந்துவிடும். வான் வெளியில் ஷவ்வால் மாதத்தின் இளம்பிறை தோற்றமளித்த கணம் முதல் உலகில் எதிரொலிக்கும் அல்லாஹு அக்பர் என்ற தக்பீர் முழக்கம் முஸ்லிம்கள் அல்லாஹ்வுக்கு செலுத்தும் நன்றி உணர்வின் வெளிப்பாடாக அமைகின்றது.

ஈத் பெருநாள் அன்று அதிகமாக தக்பீர் சொல்லிக்



**நஸ்லின் றிப்கா அன்ஸார் ...**
பிரதி அதிபர், ஸாஹிரா கல்லூரி
கல்முனை

கொள்வது சிறப்பானது. 'உங்கள் பெருநாட்களை தக்பீரைக் கொண்டு அழகுபடுத்திக் கொள்ளுங்கள்' என நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். பெருநாள் தொழுகைக்கு பாங்கோ, இகாமத்தோ இல்லை. அவ்வாறே, பெருநாள் தொழுகைகளுக்கு முன்பும், பின்பும் சுன்னத்துத் தொழுகைகள் தொழுவதில்லை. வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையில், தொழுவதற்கு முன் குத்பாப் பிரசங்கம் நிகழ்த்தப்படும். ஆனால் பெருநாள் தொழுகையில், தொழுகையைத் தொடர்ந்துதான் குத்பாப் பிரசங்கம் இடம்பெறும். நோன்புப் பெருநாள் தினத்தில் நபி (ஸல்) அவர்கள் உண்ணாமல் புறப்பட மாட்டார்கள். ஹஜ் பெருநாள் தொழுது விட்டு, தமது குர்பானிப் பிராணியை (அறுத்து அதிலிருந்து) முதல் சாப்பிடுவார்கள். அதாவது, நோன்பப் பெருநாள் தொழுகைக்காக செல்லுகின்ற போது, ஏதாவது சாப்பட்டு விட்டுத்தான் பள்ளிக்குச் செல்ல வேண்டும். அதுவே நபிவழியாகும்.


அதேநேரம் பெருநாள் தொழுகைக்கு முன்பு நிறைவேற்ற வேண்டிய மற்றுமொரு சுன்னா 'ஸகாத்துல் பித்ர்' ஆகும். பித்ரா என்பது நமது நாட்டின் பிரதான உணவுத் தானியமாக விளங்கும் அரிசியில் வழங்கப்படுவது பொருத்தம். நாம் வாழும் ஊருக்குள்ளே பித்ராவைக் கொடுப்பதே சிறப்பானது. சமுதாயத்தில் வறுமைக்கோட்டில் இருப்பவர்களை இனங்கண்டு பெருநாள் தினம் பெருநாள் கொண்டாட வழிசெய்வதே பித்ராவின் நோக்கமாகும். ஒரு மனிதனின் நோன்பு சம்பூரணப்படுவதற்கு பித்ராவும் ஒரு காரணமாக அமைகின்றது. அவனது நோன்பில் ஏற்பட்ட சிறிய குற்றங்களுக்கு பித்ரா பங்கீடு ஒரு குற்றப்பரிகாரமாக அவனது மனதை தூய்மைப் படுத்துவதாக அமைந்து விடுகின்றது. பெருநாளைக் கொண்டாடுவதோடு நமது நற்கிரியைகள் முற்றுப் பெறுவதில்லை. புனித ஷவ்வால் மாதத்தில் நாம் நிறைவேற்றும் இன்னுமோர் அமலின் மூலம் காலமெல்லாம் நோன்பு நோற்ற கூலியை அல்லாஹ் நமக்குத்

தருவதாக நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதுதான் ஷவ்வாலில் பெருநாளைத் தொடர்ந்துவரும் 6 நாட்கள் நோன்பிருப்பதாகும். நபி (ஸல்) அவர்கள் 'எவர் ரமழானின் நோன்பை நோற்று அதைத் தொடர்ந்துவரும் ஷவ்வாலில் 6 நாட்கள் நோன்பிருந்தாரோ அவர் காலம் முழுவதும் நோன்பு நோற்றவரைப் போன்றாவார்' என்று கூறினார்கள். **(ஆதாரம்: முஸ்லிம்)**

எனவே ரமழான் காலத்தில் நாம் செய்த நல்லமல்களின் மூலம் பெற்ற நற்பயிற்சியைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்க இந்நன்னாளில் திடசங்கற்பம் பூணுவோம்.

**'ஈத் முபாரக்'.**






## பிறையொளியின் பிரவாகம்

பிறையின் கூர்முனையில் வழியும்
ஒளியின் பிரவாகம்
கல்பிலூறியூறிக் கண்களில் மிதக்கிறது
றையான் வாசலில் ஆன்மாவின் பிரகாசம்

கலிமாவின் குரலில் கேட்கிறது
தஸ்பீஹ் உதடுகளின் புன்னகை
விரிந்த முஸல்லாக்களின் மீது
சுஜூதின் தியானங்கள் பூத்த

சுவனத்து வனம்
இருளாய்ச்சூழ்ந்த பாவக்கறைகள்
இதயத் துஆக்கள் முன் கருகியுதிரும்
சாத்தானை விரட்டி நரகின் கதவிடுக்கில் நசுக்கும்

நப்ஸின் மகத்துவம்
ஈத்தம்பழக்கீற்றில் நாவினிக்கும்
குர்ஆனிய வாசத்தில் வான்முகட்டில் முட்டும்
ஆன்மாவின் ஒளிப்பேழை ஈமானின் ஈரவிதை

இறையருளின் கொடையென வெண்மலர்த்தூவல்
ஷவ்வாலின் மென்பிறையொளி பட்டுத் தெளிறும்
பித்ரா பெருமிதம்
பரிசுப் பெருநாளின் இன் முகம்

முல்லை முஸ்ரிபா...



## அன்புப் பெருநாள்

உள்ளத் தூய்மையோடு
ஒரு மாதம் தனித்திருந்து
அல்லாஹ்வின் பெயரையே
அனுதினமும் துதித்திருந்து
கொண்டாடும் ஈதுல் பித்ர் எனும் பெருநாளை
வாழ்த்துகிறேன் அதன் சிறப்பறிந்து

நோன்பும் பெருநாள் என்று சொல்வதை விட
அன்புப் பெருநாள் என்று அழைப்பதே சிறந்தது.
ஏழைகளின் வயிற்றுப்பசியை
அறிந்து பார்க்கவே இப் பெருநாள்
இதற்கு ஈடு எப்பெருநாள்

இல்லாதவர்கள் கைநீட்டும் போது
நம்பிக்கை கொடுக்கும் திரு நாள்
அது ஈதுல் பித்ர் எனும் பெருநாள்
அந்நாளை கொண்டாடும்
அனைவரையும் வாழ்த்துகிறேன்
அல்லாஹ்வை அடியேனும்
அல்ஹம்துலில்லாஹ்

ரஹீமா இஸ்மாஈல்...
கல்பொக்கை
வெலிகம.

# ஈதுல் பித்ர் பெருநாளின் தத்துவம்



பெருநாள் தினங்கள் தொடராக வந்து கொண்டிருக்கின்றன. அனைத்து சமூகங்களிடமும் பெருநாட்கள் காணப்படுகின்றன. அனைத்து மனிதர்களும் பெருநாட்களை விரும்புகின்றார்கள், அதனைக் கொண்டாடுகின்றார்கள்.

முஸ்லிம்களது பெருநாட்கள் தனித்துவமானது. சந்தோஷம், மகிழ்ச்சி, விளையாட்டுகள் போன்றவற்றுடன் தொழுகை, பிரார்த்தனை, இறைநினைவு, தர்மம் செய்தல், உறவுகளை தரிசித்தலுடன் தொடர்பானது. ஆயிஷா(ரழி) அவர்களின் இரு அடிமைப்பெண்கள் அவரது வீட்டில் அவர் முன்னிலையில் பெருநாள் தினத்தில் பாடல்களை பாடிக்கொண்டிருந்த போது 'நபியர்களுடைய வீட்டில் ஷைத்தானின் புல்லாங்குழலா'? என்று கூறி ஆட்சேபனை வெளியிட்ட அபூபக்கர்(ரழி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் 'அனைத்து சமூகங்களுக்கும் பெருநாட்கள் உள்ளன. இதுதான் எமது பெருநாளாகும்' என்றார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம், இப்னுமாஜா)

நபி(ஸல்) அவர்கள் மதீனாவை வந்தடைந்த போது அங்கிருந்தவர்கள் இரு தினங்களை விளையாடி களிப்பதை கண்ணுற்றார்கள். இது என்ன தினங்கள் என்று வினவிய போது 'நாம் ஜாஹிலிய்யா காலத்தில் இவ்விரு தினங்களிலும் விளையாடுவோம்' என்றார்கள். அதற்கு நபியவர்கள் 'நிச்சயமாக அல்லாஹ் அவ்விரு நாட்களுக்கும் பகரமாக அதனை விட சிறப்பான நாட்களை தந்துள்ளான்' என்றார்கள். **(ஆதாரம்: அபூதாவூத்)**

பெருநாள் என்பது அல்லாஹ்வுடன் தொடர்பான செயல்பாடுகளும் மனிதர்களுடன் தொடர்பான வெளிப்பாடுகளுமாகும். எனவே அதனை நாம் உயிர்ப்பிக்க வேண்டும், நோக்கமறிந்து செயல்பட வேண்டும், அதன் கருத்துக்களை உணர்ந்து கொள்ள வேண்டும். அதன் ஒழுங்குகளை பேணிக்கொள்ள வேண்டும்.

**பெருநாளும் தக்பீரும்**

பெருநாள் தினத்திலே அதிகமாக தக்பீர் முழங்க வேண்டும். தக்பீர் என்பது இஸ்லாத்தின் முக்கியமான செயற்பாடும் வெளிப்பாடுமாகும். 'இறைவன் எனக்கு பெரியவன்' என்று முழங்குவதே தக்பீர் ஆகும். தொழுகைக்கான அழைப்பொலி, தொழுகையின் ஆரம்பம், ருகூஃகள், ஸுஜூத்கள், ஸலாம், திக்ர்கள், பிள்ளை பிறந்தால்... இப்படியாக தக்பீருடன் பின்னிப்பிணைந்த ஒரு வாழ்வொழுங்காக முஸ்லிமின் வாழ்வு காணப்படுகிறது. ஏனைய அனைத்து விடயங்கள், பொருட்கள், காரியங்களை விட அல்லாஹ் எனக்கு பெரியவன் என்பதுதான் இதன் கருத்தாகும். பணம், பட்டங்கள், பதவிகள், அந்தஸ்துகள், உலகப் பொருட்கள், மனோ இச்சைகள் போன்ற விடயங்களை பெரிதாக கருதாது இறை திருப்தியையும் அவனது வெகுமதிகளையும் நாடி நிற்பதுதான் முஸ்லிமின் பிரதான இலட்சியமாகும். இதனையே தக்பீர் பறைசாட்டுகிறது.

மனிதனின் முழு வாழ்வும் பொழுதுபோக்குகள், விளையாட்டுகள், கலையம்சங்கள், அழகுணர்வும் இரசனையும் அற்ற சீரியஸ் ஆனதாக மாத்திரமே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது சாத்தியமற்றது. இது 'களைப்படைய வேண்டும். ஓய்வெடுக்க கூடாது' என்பது போன்ற ஒரு விடயமாகும்.

இதன் காரணமாகத்தான் மனிதர்கள் பெருநாளை வரலாற்று நிகழ்வுகளுடன் இணைத்து கொண்டாடுகின்றனர். இஸ்லாமிய பெருநாட்கள் இறைவனுடன் இணைந்தும் மானுட தேவைகளை நிறைவேற்றக் கூடியதாகவும் காணப்படுவது ஒரு தனித்துவமான அம்சமாகும்.

இஸ்லாத்துக்கு முற்பட்ட காலத்திலே மதீனத்து அரபிகளிடம் இரு பெருநாட்கள் காணப்பட்டன. அதிலே அவர்கள் விளையாடி மகிழ்ச்சியாக இருப்பார்கள். இஸ்லாம் அவர்களுக்கு 'ஈதுல் பித்ர்', 'ஈதுல் அழ்ஹா' என்று இரு பெருநாட்களை பதிலாக கொடுத்தது. 'ஈதுல் பித்ர்' என்பது நோன்பு என்ற வணக்கத்துடனும் ஸகாதுல் பித்ரா என்ற மானுட தேவையை நிவர்த்திக்கக்கூடிய பிரகாரமும் அமைந்துள்ளது. 'ஈதுல் அழ்ஹா' பெருநாளும் ஹஜ் என்ற வணக்கத்துடன் இணைந்ததாகவும் உழ்ஹிய்யா என்ற மானுடத் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

இஸ்லாமிய பெருநாட்கள் இறைவனை சார்ந்தவையாக அமைந்துள்ளது. அவை ஒருபோதும் மனோ இச்சைகளுக்கு அடிமைப்படும் விதமாக இல்லை. கிடைக்கப்பெற்ற அருள்களுக்காக நன்றி செலுத்துவதற்கான சந்தர்ப்பமாகவே பெருநாட்கள் நோக்கப்படுகின்றன.

இஸ்லாமிய பெருநாட்களில் இறைவனை சார்ந்திருத்தல் என்ற பண்பு காணப்படுவது போன்றே மனித தேவைகளை நிறைவேற்றல் என்ற விடயமும் இணைந்துள்ளது. இருப்பவர்களும் வசதியானவர்களும் சுவையான உணவுகளை வயிறுபுடைக்க உண்டு, பானங்களை அருந்தி, வாய் நிறைய சிரித்து மகிழ்ந்து புத்தாடைகளை அணிந்து பெருநாளை கொண்டாட ஏழைகளும் இல்லாதவர்களும் பெருநாள் தினத்தன்று உண்பதற்கு உணவோ உடுத்த ஆடையோ இன்றி கவலையுடன் இருக்கும் விதமாக கைவிடப்பட கூடாது என்பது இஸ்லாத்தின் வழிகாட்டலாகும்.

இதற்காகவே ஸகாதுல் பித்ர் என்ற ஈகை கடமையாக்கப்பட்டுள்ளது. 'இது நோன்பாளியை சுத்தமாக்கும், ஏழைகளுக்கு உணவாக அமையும்' என்றும் 'பெருநாள் தினத்தில் ஏழைகள் உங்களை சுற்றி வருவதை தேவையற்றதாக ஆக்குங்கள்' எனவும் இப்னு அப்பாஸ்(ரழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஏழைகள் எம்மை சுற்றி வந்து கைநீட்டி கேட்பதற்கு முன்னர் நாம் அவர்களை தேடிச்சென்று தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் இருப்பவர்களும் இல்லாதவர்களும், சக்தியுள்ளவர்களும் சக்தியற்றவர்களும், கஷ்டத்தில் இருப்பவர்களும் கொடை கொடுப்பவர்களும், செல்வந்தர்களும் ஏழைகளும் சமனாக பெருநாளை கொண்டாடுவார்கள்.

**பெருநாளும் சமூகஉறவுகளும்**

பெருநாள் தினத்தில் ஒருவரை ஒருவர் சந்திக்கின்றார்கள். வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்கிறார்கள். உறவுகளை புதுப்பித்துக் கொள்கிறார்கள். பெற்றோரை, சகோதரர்களை, உறவினர்களை, அயலவர்களை சந்திக்கிறார்கள். அறுபட்ட உறவுகளை இணைக்கவும் வெறுப்புணர்வுகளை களைந்தெறியவும் முனைகிறார்கள். தனது கோபத்திலிருந்தும் மனோ இச்சைகளுக்கு அடிமைப்படும் நிலையிலிருந்தும் விடுபட முனைகின்றார்கள். இப்படியாக பெருநாள் தினத்தில் உறவுகள் புதுப்பிக்கப்படுகின்றன, பலப்படுத்தப்படுகின்றன.

**பெருநாள் வாழ்த்துகள்**

பெருநாள் வாழ்த்துகளை பரிமாறிக்கொள்வது சிறந்ததொரு பண்பாடும் வெளிப்பாடுமாகும். 'தகப்பலல்லாஹு மின்னா வ மின்கும், ஈத் முபாரக்' போன்ற வாழ்த்துகளை பரிமாறிக் கொள்ள முடியும் என்று அறிஞர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள்.

நபி(ஸல்) அவர்களின் தோழர்கள் பெருநாள் தினங்களில் 'தகப்பலல்லாஹு மின்னா வ மின்கும் அல்லாஹ் என்னையும் உங்களையும் ஏற்றுக்கொள்வானாக'என்று கூறுவார்கள் என்று ஜுபைர் இப்னு நுபைர்(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் (இப்னு ஹஜர் அல் அஸ்கலானி,பத்ஹுல் பாரி, அல்பானி, தமாமுல் மின்னா)

பெருநாள் தினத்தில் நோன்பு நோற்பது தடுக்கப்பட்டுள்ளது. பெருநாள் தொழுகை வலியுறுத்தப்பட்ட (சுன்ன முஅக்கதா) ஒரு சுன்னத்தாகும்.

பெருநாளுக்கென்றே சில ஒழுங்குகளும் காணப்படுகின்றன. பெருநாள் தொழுகைக்கு முன்பாகக் குளித்துக்கொள்வது, நோன்புப் பெருநாளின் போது தொழுகைக்கு முன்பாக சாப்பிடுவது, பெருநாள் தினத்தில் அதிகம் தக்பீர் சொல்வது, வாழ்த்துகளை பரிமாறிக்கொள்வது, பெருநாள் தினங்களில் அலங்கரித்துக் கொள்வது, ஒரு பாதையால் தொழுகைக்காக சென்று இன்னொரு பாதையால் திரும்பி வருவது போன்ற ஒழுங்குகள் பெருநாள் தினத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியவையாகும்.

யூ.கே. ரமீஸ் ...
(எம்.ஏ) சமூகவியல்

# சிறப்புக்குரிய ஆறு நோன்பு



புனித ரமழான் மாதத்தை வழியனுப்பி ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை மிகச் சிறப்பாக கொண்டாடி மகிழும் இத்தருணத்தில் பெருநாளைத் தொடர்ந்து வரும் ஆறு நாட்களும் நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபடுவது நபி வழிமுறையாகும்.

இஸ்லாத்தில் பர்ளான ரமழான் நோன்பைத் தவிர சுன்னத்தான பல நோன்புகளும் உள்ளன. அந்நோன்புகள் தொடர்பில் நபி(ஸல்) அவர்கள் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார்கள். அந்த வகையில் ரமழான் மாதத்தைத் தொடர்ந்து வரும் ஷவ்வால் மாதத்தின் இரண்டாம் பிறை முதல் ஏழாம் பிறை வரை நோற்கப்படும் ஆறு நோன்புகள் மிக முக்கியமானவையும், சிறப்புக் குரியவையுமாகும். ரமழானில் பர்ளான நோன்பு கடமையை நிறைவேற்றிய பின்னர் ஈதுல் பித்ர் பெருநாளுக்கு அடுத்த நாள் முதல் 6 நாட்கள் நோன்பு நோற்றதன் மூலம் வருடம் முழுவதும் நோன்பு நோற்ற நன்மையை அடைந்து கொள்ளலாம்.

இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் 'யார் ரமழான் மாத நோன்பை நோற்று அதைத் தொடர்ந்து வரக்கூடிய ஷவ்வால் மாதப் பிறை இரண்டு முதல் பிறை ஏழு வரையில் ஆறு நோன்புகள் நோற்கிறாரோ அவர் காலமெல்லாம் நோன்பு நோற்றவர் போலாவார்' என்றுள்ளார்கள்.

**(ஆதாரம் : முஸ்லிம்)**

இந்நபிமொழி ஷவ்வால் ஆறு நோன்பின் சிறப்பை தெளிவாக எடுத்தியம்புகின்றது. அதனால் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கு அமைய ஷவ்வால் மாதத்தில் ஆறு நாட்களும் முஹர்ரம் உள்ளிட்ட ஏனைய மாதங்களிலும் குறிக்கப்பட்ட நாட்களில் நோன்பிருக்க முடியும். அந்நோன்புகளின் ஊடாக நபிகளாரின் ஸுன்னாவை உயிர்ப்பித்த அந்தஸ்தையும் அல்லாஹ்விடம் நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அதிலும் ரமழானை அடுத்து வரக்கூடிய ஷவ்வாலில் ஆறு நோன்புகளையும் தொடராக நோற்பது சிறப்புக்குரியதென நபிமொழிகள் குறிப்பிடுகின்றன. எனினும் அதற்கான வசதி வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் ஷவ்வால் மாதம் முடிவடைதற்குள் அந்நோன்புகளை நோற்க முடியுமென மார்க்க அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதனால் பர்ளான ரமழான் நோன்புக்கு மேலதிகமாக ஷவ்வால் ஆறு நோன்பு உள்ளிட்ட ஸுன்னத்தான நோன்புகளை நோற்பதிலும் நாம் அதிகம் ஆர்வம் காட்ட வேண்டும். நோன்பின் ஊடாக பொறுமை, சகிப்புத்தன்மை, மகிழ்ச்சி, தன்னடக்கம், பெருமையின்மை போன்ற நற்குணங்களை பெற்றுக்கொள்ளவும் தக்வாவுடன் செயற்படவும் வாய்ப்பு கிடைக்கப்பெறும்.

எனவே ஷவ்வால் மாத ஆறு நோன்புகளையும் நோற்று காலமெல்லாம் நோன்பு நோற்ற நன்மையை அடைந்து கொள்வோம்.

மௌலவி எம்.யூ.எம். வாலிஹு ...
(அல் அஸ்ஹரி) வெலிகம



## இன்பம் பெருகும் பெருநாள்

நோன்பை நோற்ற புனிதனோ
நெஞ்சு நிமிர்ந்து நிற்கிறான்.
இரவு முழுக்க தொழுதவனோ
கண்கள் கலங்கி அழுகிறான்
நோன்பு நாளின் மகிமைதனையும்
உணர்ந்து துடியாய் துடிக்கிறான்
மார்க்க முள்ள தீன்குலத்தோர்
அஞ்சி டாமலே வாழ்கின்றான்.

கோடை வெயிலின் வேட்கையினை
புனித நோன்பு தணிக்கிறது.
நாட்டை மிருட்டும் நெருக்கடிக்குத்
தீர்வாய் இதுவும் அமைகிறது.
ஏழை வரியின் மகத்துவத்தில்
மேன்மைச் சிறப்பும் தெரிகிறது.
வறுமை வந்து வாட்டுவதற்கோ
வாசற் கதவுகள் திறப்பதில்லை.

பாவக் கறைகள் போக்குவதற்கும்
மனம் குளிரும் மகத்துவமும்
அரு ளொளி பாய்ச்சி நிற்கும்
நோன்புப் பெருநாள் எழுந்து வரும்
இன்பம் பெருக சுவைத்தவனோ
மறுமை உலகைக் காண்கிறான்.
நோன்பு முற்றும் நோற்றவனோ
துள்ளித் குதித்து மகிழ்கின்றான்

இக்பால் அலி

# ஈகைத்திருநாள் வாழ்த்துகள்

## உலக அமைதி, நாட்டின் சுபிட்சம் தோன்ற மனஉறுதி கொள்வோம்!



ஈகைத் திருநாளாம் ஈதுல் பித்ரை கொண்டாடும் உலகெங்கும் வாழும் பல கோடி இஸ்லாமிய நெஞ்சங்களுக்கு எனது இனிய நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதுடன் அருள் பொழியும் இப்பெருநாள் தினத்தில் முழு உலக அமைதிக்கும் எமது தாய்நாட்டின் நிம்மதியான வாழ்விற்கும் எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலாவிடம் மனமுருகிப் பிரார்த்திப்போமாக என கிராமியப் பொருளாதாரப் பயிர்ச் செய்கை மற்றும் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, புனித நோன்பு எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றுள்ளது.

அது எமக்கு கருணை, விட்டுக்கொடுப்பு என பல பாடங்களை போதித்துச் சென்றுள்ளது. மேலும் எமது புனித மார்க்கமானது அமைதி, இரக்கம், ஒற்றுமை, பொறுமை, மனிதநேயம், ஜீவகாருண்யம் ஆகிய உயரிய குணவியல்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதையும் நாம் திடமாகவும் உறுதியாகவும் அறிந்து வைத்துள்ளோம்.

இன்று எமது நாடு எதிர்நோக்கியுள்ள அசாதாரண சூழ்நிலையில் நாம் கொண்டுள்ள உயரிய குணவியல்புகள் மூலம் எமது ஒற்றுமை மிக்க தாய்நாட்டை கட்டியெழுப்ப திடசங்கற்பம் பூணுமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதோடு கண்ணியமிக்க ரமழான் மாதத்தில் நாம் எடுத்துக்கொண்ட பயிற்சிகளையும் செய்துவந்த இபாதத்துகளையும் தொடர்ந்து செய்வதுடன் வசதியற்றிருக்கும் எமது சகோதரர்களை இனங்கண்டு தானதர்மங்களை செய்து இறைவனின் நல்லருளை பெற்ற நல்லடியார்களாக மாறுவோம் .

## ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் சவாலை வெற்றி கொள்வோம்!

**இக்பால் அலி**



நாட்டில் நிலவும் பொருளாதார சவாலுக்கு மத்தியில் புனித நோன்பு பெருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம்களுக்கும் ஈத் பெருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன் என்று முன்னாள் முஸ்லிம் சமய விவகார, தபால் துறை அமைச்சரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளதாவது, நோன்பு என்பது அடுத்தவர்களுடைய பசியை நன்கு அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கின்ற ஒன்றாகும்.

ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று இறைவணக்கங்களிலும் ஈடுபடுவதோடு, ஏழை எளிய மக்களுக்கும் தாராளமாகக் கொடுத்து உதவி செய்ய வாய்ப்பளித்த மாதமாகவும் விளங்குகிறது.

எமது நாடு வரலாற்றில் என்றுமில்லாத பெருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. இந்நிலையில் நோன்பின் மகத்துவத்தை உணர்ந்து ஏழை, எளிய மக்களுக்கு தம்மாலான உதவி ஒத்துழைப்புகளை நல்கி அல்லாஹ்விடம் அதிகப்படியான நன்மைகளை பெற்றுக்கொண்டவர்களாக இருந்து கொண்டிருக்கின்றோம்.

தற்போதைய சூழலில் எமது சமூகத்தைச் சார்ந்த மக்களுக்கு உதவி செய்வதைப் போன்று ஏனைய சமூகங்களைச் சார்ந்த மக்களுக்கும் இயன்ற உதவி, ஒத்தாசை புரிவதும் அவசியம். இச் சந்தர்ப்பத்தில் உதவி செய்வதன் மூலம் அல்லாஹ்விடத்தில் அதிகளவு நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே இந்நன்னாளைக் கொண்டாடும் முஸ்லிம்களாகிய நாமனைவரும் ஏனைய சமூகங்களோடு ஒன்றிணைந்து ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் இந்நெருக்கடியை வெற்றிகொள்ள உறுதி பூணுவோம்.

## ரமழானின் பயிற்சியை வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்போம்!



நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள சூழலிலும் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்டு ஈதுல் பிதர் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம்களுக்கும் எனது இதயபூர்வமான நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று புத்தளம் நகர சபைத் தலைவர் எம்.எஸ்.எம். ரபீக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி எல்லா மட்ட மக்களது வாழ்விலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு என்றபடி பல பிரச்சினைகளும் நாட்டில் தோற்றம் பெற்றுள்ளன.

இவ்வாறான சூழலில் ரமழான் மாதத்தை அடைந்ததும் அல்லாஹ்வின் கட்டளைக்கும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் ஏற்ப நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்டு தம் கடமையை நிறைவேற்றிய முஸ்லிம்கள் இன்று பெருநாள் கொண்டாடுகிறார்கள்.

அவர்கள் நோன்பின் ஊடாகப் பெற்றுக்கொண்ட உடல், உள ரீதியிலான பயிற்சியும் அவர்களது பொறுமை சகிப்புத்தன்மையும் என்றும் மெச்சிப் பாராட்டத்தக்கவையாகும்.

ஆகவே நெருக்கடியான காலசூழலிலும் இறைகடமையை நிறைவேற்றி பெருநாளைக் கொண்டாடும் புத்தளம் முஸ்லிம்கள் உள்ளிட்ட அனைத்து முஸ்லிம்களுக்கும் ஏனைய சகோதர இன, மத மக்களுக்கும் என் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு ரமழானில் பெற்ற பயிற்சியை வாழ்நாள் முழுவதும் எடுத்து நடந்திட இந்நன்னாளில் திடசங்கற்பமும் பூணுவோம்.



## நாட்டின் அசாதாரண சூழல் விரைவாக நீங்க இறைவனை வேண்டுவோம்



நாட்டில் தோன்றியுள்ள அசாதாரண சூழலிலும் பொறுமை, சகிப்புத்தன்மையோடு நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்டு நோன்பு பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம்களுக்கும் எனது ஈதுல் பித்ர் நல்வாழ்த்துக்களை தெரவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன் என்று புடவைக் கைத்தொழில் மற்றும் உள்ளூர் ஆடைகள் உற்பத்தி மேம்பாட்டுத் துறை இராஜாங்க அமைச்சர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான 'அஸ்ஸவ்ம்' எனப்படும் நோன்பு உலக வாழ் முஸ்லிம்களால் ரமழான் மாதம் முழுவதும் இறை வணக்கங்களுடன் நோற்கப்படுகிறது. உலக ஆசைகளை துறந்து, ஏழைகளின் பசியறிந்து, அவர்களுக்கான உதவிகளை அளிக்கும் அதேவேளை, உளத்தூய்மையும் புனித நோன்பின் மூலம் உருவாகிறது.

நாட்டில் தோன்றியுள்ள அசாதாரண சூழ்நிலையிலும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் புனித நோன்பு கடமைகளை நிறைவேற்றி இன்று புனித நோன்பு பெருநாளை கொண்டாடுகின்றனர். இப்பெருநாளை எமது கண்மணி நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப அமைத்துக் கொள்வதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது எதிர்கொண்டுள்ள அசாதாரண சூழலில் இருந்து நாடு விரைவாக மீண்டு சுபிட்சமும் வளமும் கிடைக்கப்பெற்றிடவும் முஸ்லிம்கள் உள்ளிட்ட எல்லா இன, மத மக்களும் சுதந்திரமாகவும், ஆனந்தமாகவும் இப்பூமியில் வாழ்ந்திடவும் வழிபிறக்க வேண்டுவென இந்நன்னாளில் இறைவனைப் பிரார்த்திப்போம்.

## ரமழான் தந்த பயிற்சியை வாழ்வில் தொடர்வோம்!



இறைவனின் கட்டளைகளை முடிந்தவரை அர்ப்பணிப்புடன் அசௌகரியம் பாராது செயற்படுத்தி பகலில் நோன்பு நோற்று இரவில் நின்று வணங்கி, வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டதன் ஊடாக மிகச் சிறந்த பயிற்சியை ரமழான் எமக்கு தந்துவிட்டுச் சென்றுள்ளது. ரமழானின் மூலமாக நாம் பெற்ற பயிற்சியை இனிவரும் காலங்களில் வாழ்வில் கடைப்பிடித்து நடப்பதற்கு இன்றைய ஈதுல் பித்ர் மகிழ்ச்சிகரமான நன்னாளில் நாம் அனைவரும் இருகரமேந்தி இறைவனிடம் பிரார்த்திப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, எமது வாழ்க்கைக்கான நீண்டதொரு பயிற்சியை ரமழான் வழங்கிவிட்டு எம்மிடமிருந்து விடைபெற்றுள்ளது. என்றாலும் இரக்கம் காட்டுதல், விட்டுக்கொடுப்பு, ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்தல், மன்னிக்கும் மனப்பான்மை மற்றும் ஏழை எளியவர்களின் வயிற்றுப்பசி, அவர்களின் உளக்குமுறலை உணர்ந்து கொள்வதற்கான உயரிய வாய்ப்பையும் அது தந்துவிட்டே சென்றுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியான சூழலிலும் நாம் ரமழானை மிகவும் பொறுமையாக எதிர்கொண்டு நோன்புகளை நோற்றோம். அந்த வகையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழல் விரைவாக நீங்கிடவும் எதிர்காலம் சுபீட்சமிக்கதாக அமைந்திடவும் இந்நன்னாளில் இருகரமேந்திப் பிரார்த்திப்போம்.

## ஈமானிய பலத்தை மேலும் உறுதிப்படுத்திடுவோம்!



புனித ரமழானை இறைவனின் கிருபையினால் அடையப்பெற்று நோன்பிருந்து, தொழுகை, குர்ஆன் ஓதுதல், தானதர்மங்களில் ஈடுபடல் உள்ளிட்ட நல்லமல்களில் ஈடுபட்டு ஒரு மாத காலம் பெற்றுக் கொண்ட பயிற்சியினூடாக எமது ஈமானிய பலத்தை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளோம். தொடர்ந்து வரும் காலங்களிலும் ஈமானிய உணர்வுடன் வாழ வல்ல இறைவன் அனைவருக்கும் அருள்புரிய வேண்டுமென பேருவளை நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் ஹஸன் பாஸி குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது, இறைவனின் கட்டளையை ஏற்று ஒரு மாத காலம் நோன்பு நோற்று நீண்டதொரு பயிற்சியை முடித்துக்கொண்டுள்ளோம். அதனைத் தொடர்ந்து ஈத் பெருநாளை மகிழ்ச்சிக்குரிய நாளாக வல்ல இறைவன் ஆக்கித் தந்திருக்கிறான்.

அந்த வகையில் இந்த நோன்புப் பெருநாளை கொண்டாடுகின்ற அனைவரும் எமது நாட்டிற்காகவும் எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் இந்நன்னாளில் இருகரமேந்தி பிரார்த்திப்போம்.

## நாட்டுக்காக சகலரும் பொறுப்புடன் செயற்பட இறைவனை பிரார்த்திப்போம்!

**(பாலமுனை விசேட நிருபர்)**



பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ள எமது நாட்டை மீட்டெடுப்பதற்கும், நாட்டில் அமைதி ஏற்பட்டு சகல இன மக்களும் நிம்மதியாகவும், ஐக்கியமாகவும், வாழ்வதற்குமான சூழலை ஏற்படுத்துவதற்கும் சகல தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட இந்நன்னாளிலும் இறைவனைப் பிரார்த்திப்போம் என்று கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபையிர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, புனித ரமழான் மாதத்தில் இறையச்சத்துடன் நோன்பு நோற்று, இறை வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு, ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடி மகிழும், அனைத்து இஸ்லாமியச் சகோதரர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். அத்தோடு

இன்று பல இன்னல்களுக்கு மத்தியில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழ்கின்ற முஸ்லிம் சமூகம் இப்பெருநாள் தினத்தை சிறப்பாகக் கொண்டாடி மகிழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பல்லின சமூகத்தில் வாழும் நாம் எமது பெருநாள் கொண்டாட்டத்தில் சகோதர இன மக்களையும் இணைத்து சகோதர வாஞ்சையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன் நாம் முன்மாதிரியான சமூகம் என்பதை நிரூபித்து, நமது அன்றாட செயற்பாடுகளை உளத்தூய்மையோடும் அல்லாஹ்வின் அருளுக்குரியதாகவும், ஆக்கிக் கொள்ள வேண்டும். அத்தோடு நபி (ஸல்) அவர்கள் காட்டிய அழகிய வழிமுறையில் இப்பொருநாள் தினத்தினை அமைத்துக்கொள்வோம்.

## அனைத்து இனங்களின் அவலங்கள் நீங்க இருகரம் ஏந்துவோம்!



நாட்டைப் பீடித்துள்ள முழு அவலங்களும் நீங்கி, சகல இன மக்களும் சந்தோஷமாக வாழ இப்புனித மிக்க நோன்புப் பெருநாள் தினத்தில் பிரார்த்திப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று, நல்லமல்கள் புரிந்த அனைவரையும் அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக! பொருளாதாரத்தின் உச்ச நெருக்கடியிலும் பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் நாம் நோன்பு நோற்றோம். இந்த ஈகைத் திருநாளில் இல்லாதோருக்கு கொடுத்துதவும் கடமையும் எம்மீது ஏவப்பட்டிருக்கிறது. பொருளாதாரத்தின் கொடிய பிடியில் முஸ்லிம்களும், ஏனைய சமூகத்தினரும் கஷ்டப்படும் இன்றைய சூழலில், அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் மனநிலைகளில் நாம் செயற்படுவோம். இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியிலும், நமது நம்பிக்கைகளை நாம் இழக்கவில்லை.

நாட்டில் இன்று பசி, பட்டினி, கஷ்டத்தினால் மக்கள் வீதியில் இறங்கி, ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எனவே, இந்நிலை மாறி, நாட்டுக்கு சுபிட்சமும் விமோசனமும் கிடைக்கப்பெற வேண்டுமென்று இப்பெருநாள் தினத்தில் நாம் பிரார்த்திக்க வேண்டும். அனைவருக்கும் எனது நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகள்.

## இந்நன்னாளில் கஷ்டப்படுவோருக்கு உதவி ஒத்துழைப்புகளை நல்குவோம்!



இஸ்லாத்தில் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான புனித நோன்பின் மூலமாக நாம் பெற்ற ஆன்மிக பயிற்சிகளை இனிவரும் காலங்களில் வாழ்வில் பின்பற்றி நடப்பதற்கு இன்றைய ஈத்பெருநாள் தினத்தில் திடசங்கற்பம் பூணுவோமென மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இப்திகார் ஜெமீல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, இஸ்லாம் இனங்களிடையே ஐக்கியத்தை வலியுறுத்த வந்த மார்க்கமாகும். அந்த வகையில் இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறு அது எம்மை பணித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரம் சிக்கலானதொரு நிலையை அடைந்திருக்கும் காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாம், கஷ்டப்படுகின்றோரின் வாழ்வை மேம்படுத்த உதவி ஒத்துழைப்புக்களை நல்குவோம். அத்தோடு நாடு எதிர்கொண்டுள்ள இந்நிலை விரைவாக சீரடைவதற்காக இந்நாளில் அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

## நிதானமாகவும் பொறுமையுடனும் பெருநாளைக் கொண்டாடுவோம்!

**(மாவத்தகம தினகரன் நிருபர்)**



எமது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியான சூழலில் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம்களுக்கும் எனது இனிய பெருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஸக்காத் எமது வாழ்க்கையையும், பொருட்களையும் தூய்மையாக்கக் கூடியதாகும்.

அது குடும்பங்களின் உறவை மேன்மையடையச் செய்கிறது. ஏழ்மையைத் துடைக்கின்றது. எத்தனையோ வகையான பிரச்சினைகளில் இருந்து சமூகத்திற்கான நலனைத்தரக் கூடியதாக உள்ளது. அது இறைக்க இறைக்க ஊற்றெடுக்கும் ஒன்றாகும். இன்று எமது நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியைத் துடைப்பதற்கும் வலுசேர்க்கக் கூடியதாகவும் இருக்கிறது.

அதனால் தற்போதைய சூழலில் வீணான செலவுகளைத் தவிர்த்து தம்மிடம் உள்ள பொருளாதாரத்தை பக்குவத்தோடு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தம்மைப் பாதுகாத்துக் கொள்வது எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியத்துவம் இப்பொருளாதார நெருக்கடியால் ஏனையவர்களும் துன்புற்று கஷ்டங்களை எதிர்நோக்காமல் இருக்க கொடுத்துதவி செய்வதிலும் காட்ட வேண்டும்.

எனவே இப்புனித பெருநாளைக் கொண்டாடும் நாம் ஆடம்பரமான முறையில் பெருநாளைக் கொண்டாடுவதைத் தவிர்த்து நிதானமாகவும் பொறுமையுடனும் செயற்பட வேண்டும். அடுத்தவர் மனம் நொந்து போகாமல் எமது பெருநாளை சிறப்புடன் அமைத்துக் கொள்வோம்.

## பொருளாதார நெருக்கடி நீங்கி நாடு சுபிட்சம் பெற வழிபிறக்கட்டும்!



நாட்டின் பொருளாதார நெருக்கடி நீங்கி சகல சமூகங்களும் சுபீட்சமாக வாழ இப்புனித பெருநாள் தினத்தில் பிராரத்திப்போம் என ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, 30 நாட்கள் நோன்பு நோற்று அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை பெற்றுக்கொண்ட நாம் அதே பாதையில் எமது எதிர்கால வாழ்க்கை முறையையும் நிலை நிறுத்திக்கொள்ள பிரார்த்திப்போம்.

கடந்த நோன்பும் பெருநாளும் எம்மை வீட்டோடு அமரச் செய்துவிட்டது. கொரோனா கொடூரம் அன்று போல் இன்றும் எம்மை வதைக்கின்ற இக்காலத்தில் அவற்றில் முழு உலக மக்களையும் பாதுகாக்கவும் அக்கொடிய நோயிலிருந்து உலகம் மீண்டெழவும் பிரார்த்திப்போம். இலங்கை இன்று பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. இந்நெருக்கடி நீங்கி சகல மக்களும் சுபீட்சம் பெறவும் இன்றைய பெருநாள் தொழுகையில் இறைவனிடம் இரு கரம் ஏந்துவோம்.புனித நோன்பு பெருநாளை கொண்டாடும் அனைத்து முஸ்லிம் சகோதரர்களுக்கும் எனது இனிய பெருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

# ஈகைத்திருநாள் வாழ்த்துகள்

## அனைத்து மக்களின் விமோசனத்துக்கு ஜம்இய்யதுல் உலமா பிரார்த்தனை!

அல்லாஹ்வுடனான உறவை மேம்படுத்துவதற்காகவும் தக்வா உள்ளவர்களாக நாம் ஆகுவதற்காகவும் எம்மீது கடமையாக்கப்பட்ட நோன்பை நோற்று, அதனைத் தொடர்ந்து பெருநாளைக் கொண்டாடுகின்ற அனைத்து முஸ்லிம்களுக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், ஏனைய உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் தமது ஈதுல் ஃபித்ர் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர்.

அத்துடன் இத்தருணத்தில் சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் நெருக்கடிகளையும் இன்னல்களையும் எதிர்கொள்ளும் அனைத்து மக்களினதும் விமோசனத்திற்காக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பிரார்த்திக்கின்றது.

தற்போது நமது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில், அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டவர்களாக இந்நிலையிலிருந்து மீள முடியுமான சகல முயற்சிகளையும் மேற்கொள்வதுடன், ஏழைகள் மற்றும் அயலவர்களுக்கு முடியுமான உதவிகளை செய்து, அவர்களது கஷ்டங்களைப் போக்க சகல முஸ்லிம்களும் இத்தினங்களில் முன்வர வேண்டும் என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக் கொள்கின்றது.

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா நாம் நோற்ற நோன்பை அங்கீகரித்து அவனது உயரிய நற்கூலியைத் தந்தருள்வானாக, நம் நாட்டு மக்கள் முகங்கொடுக்கும் அனைத்து நெருக்கடிகளையும், சோதனைகளையும் நீக்கியருள்வானாக! ஆமீன்.

## தேசிய நலனுக்காக பெருநாளில் இறைவனிடம் பிரார்த்திப்போம்!



பொருளாதார நெருக்கடியினால், நாட்டு மக்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் தேசிய நலனுக்காக இப்பெருநாள் தினத்தில் இறைவனைப் பிரார்த்திப்போமாக என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் மக்களின் அத்தியாவசிய தேவைகள் அனைத்துக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, வெளிநாட்டுச் செலாவணி இன்மையாலும், நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியாலும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சிரமங்களுக்கு மத்தியில் அப்பாவிப் பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் காத்து நிற்க நேர்ந்திருக்கிறது.

இதனால் எல்லா சமூகத்தினரையும் போன்று, முஸ்லிம்களும் புனித நோன்பு காலத்திலும் கூட மிகவும் இக்கட்டான நிலைமைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பிரச்சினைகளுக்கு மத்தியிலும் முஸ்லிம்கள் பொறுமையுடன் நோன்பை நோற்று, இறை வணக்கங்களில் அதிகமாக ஈடுபட்டதோடு, ஈகைப் பண்பையும் இயன்றவரை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

எனவே இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் நின்று, நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டு, சுமூக நிலை தோன்றுவதற்கு இப்பெருநாள் தினத்தில் இறைவனைப் பிரார்த்திப்போம். அத்துடன், பல்வேறு நாடுகளிலும் இன்னல்படும் உலக முஸ்லிம்களுக்காகவும் அல்லாஹ்விடம் கையேந்துவோம்.

## நாடு சுபிட்சத்துடன் முன்னேற்றமடைய இறைவனருள் வேண்டுவோம்!

(மாவத்தகம தினகரன் நிருபர்)



இன்று நாட்டில் நிலவும் இக்கெட்டான சூழ்நிலையில் புனித நோன்பை அனுஷ்டித்து விட்டு மனதில் இன்பங்கள் பெருக பெருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் எனது இனிய பெருநாள் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, புனித நோன்பு என்பது அல்லாஹ்விடத்தில் அதிகளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்ற புனித மாதம். மனதில் எப்பொழுதும் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும் மாதம். தம் பாவக்கறைகளைப் போக்குவதற்காக இறைவனைத் தொழுவதில் அலுப்போ சலிப்போ, வெறுப்போ விரக்தியோ ஏற்படாத மாதம். ஏழைகளின் வறுமையைப் போக்குகின்ற மாதம். உடலிலும் உள்ளத்திலும் தூய்மையைப் பேணி, அதேநேரத்தில் அந்த தூய்மைத்தன்மை தொடர்ந்து பேணிப் பாதுக்கின்ற ஒரு மகத்துவ மிக்க மாதம். இப்படி பல சிறப்புக்கள் மிகுந்த ரமழான் மாதத்தில் நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகளின் சவாலை எதிர் கொண்டவர்களாக நாங்கள் இப்பெருநாளைக் கொண்டாடுகின்றோம் என்பது யாவரும் அறிந்த உண்மையே.

எனவே எதிர்காலத்தில் இப்படியான நெருக்கடியான சிக்கலில் இருந்து விடுபட்டு நாடு சுபிட்சத்துடனும் பொருளாதார அபிவிருத்தியுடனும் முன்னோக்கி நகர்வதற்கான நம்பிக்கையையும் பலத்தையும் எமது நோன்புப் பெருநாள் வழங்க வேண்டும் என்று முஸ்லிம்களாகிய நாம் அனைவரும் அல்லாஹ் விடத்தில் பிரார்த்தனை புரிய வேண்டும். இது எமது நம்பிக்கையுமாகும். இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களாகிய நாம் பொறுமையோடும் நிதானத்தோடும் செயற்படுவோம்.

## இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு இறைவனருள் கிடைக்கட்டும்!



தற்போது பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடுகளதும் பொருளாதார அபிவிருத்திக்காக இப்புனித நாளில் இறைவனைப் பிரார்த்திப்போம் என்று தேசிய ஐக்கியத்திற்கான சர்வ மதங்கள் கூட்டமைப்பின் சம தலைவர் அஸ் ஸெய்யது கலாநிதி ஹஸன் மௌலானா அல் காதிரி தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது. கண்ணியம் மிக்க ரமழான் மாதத்தில் 30 நாட்களும் நோன்பு நோற்பதற்கான பாக்கியத்தை அல்லாஹ் இலங்கை மக்களான எமக்கும் இம்முறை தந்தான். அந்த வகையில் நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். 30 நாட்களும் நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்டு இன்று ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடுகின்றோம். இதன் நிமிததம் அனைத்து முஸ்லிம்களுக்கும் ஈதுல் பித்ர் நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நன்னாளில் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை நபி (ஸல்) அவர்கள் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார்கள். அதற்கேற்ப நாமும் இப்பெருநாளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

நோன்பு பெருநாளானது மனிதனை புனிதனாக்கும் நல்ல நாளாக விளங்குகிறது. அதனால் எமது அக்கம் பக்கத்து அயலவர்களை உபசரிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். அத்தோடு ஏழை எளியோரையும் உபசரித்து அவர்களது கஷ்டங்களை நீக்க உதவுவது மிக அவசியம். இந்நன்னாளில் எந்தவொரு ஏழையும் பசியோடு இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் நபி (ஸல்) அவர்கள் ஸதகத்துல் பித்ராவை கடமையாக்கினார்கள். அதாவது இத்தினத்தில் எவரும் பட்டினியில் இருக்கக்கூடாது என்பதே இதன் நோக்கமாகும். அந்த வகையில் இலங்கையரான நாம் சிங்களவர்கள், தமிழர்கள், கிறிஸ்தவர்கள் என மூவின சமூகங்களுடன் சேர்ந்து வாழுகின்றோம்.

## இன ஐக்கியமும் நல்லிணக்கமும் மேலோங்க இந்நாள் அடித்தளம் இட்டும்!

தம்பலகாமம் குறூப் நிருபர்



தங்களின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான நோன்பை நோற்று முழு இறை திருப்தியோடு பெருநாளை கொண்டாடும் அனைத்து உள்ளங்களுக்கும் இனிய நோன்பு பெருநாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக முன்னாள் பிரதியமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, நாட்டில் நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடி சூழ்நிலையிலும் முஸ்லிம்கள் நோன்பை நோற்று இன்று பெருநாளை கொண்டாடுகிறோம். நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தி சகல இனங்களும் பரஸ்பர புரிந்துணர்வுடன் வாழ்வதற்கு இந்நாள் அனைவருக்கும் துணை புரிந்து நிற்க இறைவனை பிரார்த்திக்கிறேன்.

இந்நன்னாளின் ஒற்றுமை என்றும் தொடர்ச்சியான நிலைபேற்றுடன் இருக்க வேண்டும்.

இலங்கையில் பல்லின சமூகமாக பல நூற்றாண்டுகள் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் ஏனைய இன, மதங்களைச் சேர்ந்த மக்களுடன் மிகவும் ஐக்கியமாகவும் அந்நியோன்யமாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

இத்தருணத்தில் நாட்டில் அமைதியான சூழ்நிலை நீடித்து நிலைப்பதற்கும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் நாட்டின் சிறந்த எதிர்காலதிற்கும் பங்களிக்கும் வகையில் உறுதி கொள்வோம்.

நாட்டில் இன ஐக்கியமும் ஒற்றுமையும் மேலோங்குவதற்கு இறைவன் எமக்கு துணைபுரிய வேண்டும். அத்தோடு நம்மை கடந்து சென்ற ரமழான் மாதத்தில் நாம் பெற்ற அனுபவங்களை எமது வாழ்க்கையில் கடைபிடித்து நல்ல சிந்தனைகளுக்கும், நல்ல வாழ்க்கை முறைக்கும் துணையாக இருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

## இனங்களுக்கிடையில் அமைதி சுபிட்சத்துக்கு இன்றைய நன்னாள் வழிவகுக்கட்டும்!



அல்குர்ஆன் இறக்கி அருளப்பெற்ற புனித மிகு ரமழான் இஸ்லாமிய சமூகத்திற்கு கிடைக்கப்பெற்ற இறை அருளாகும். இம்மாதத்தை அடைந்து தக்வா இறையச்சத்தை பெற்றுக்கொள்வதற்காக இரவு பகல் பாராது வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டோம். இப்படியாக நாம் பெற்ற பயிற்சிகளை எமது வாழ்நாளில் கடைபிடிப்பதற்கு இன்றைய ஈதுல் பித்ர் தினத்தில் அனைவரும் திடசங்கற்பம் பூண வேண்டுமென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, மனிதனின் இம்மை மறுமை வாழ்வின் விமோசனத்தையும் சுபிட்சத்தையும் இலக்காகக் கொண்டது தான் இஸ்லாம். அது எவருக்கும் அநீதியோ தீங்கோ ஏற்பட இடமளிக்காத மார்க்கம். இஸ்லாம் எந்தவொரு தனி நபருக்கோ அல்லது இன்னொரு சமூகத்திற்கோ அநீதி ஏற்படுவதை ஒருபோதும் விரும்புவதில்லை. பரஸ்பரம் புரிந்துணர்வுடனும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்புடனும் வாழ்வதையே அது எதிர்பார்க்கிறது.

அந்த வகையில் நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார நிலை சீரடைந்து இனங்களிடையே அமைதியும் சுபீட்சமும் ஏற்பட தாய் நாட்டை நேசிக்கின்ற ஒவ்வொருவரும் இன்றைய நன்னாளில் இரு கரமேந்தி பிரார்த்திப்போம். ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லம்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறப் பிரார்த்திப்போம்!



வரலாற்றில் என்றுமில்லாதவாறு எமது நாடு எதிர்நோக்கியிருக்கின்ற பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற இப்புனிதத் திருநாளில் பிரார்த்திப்போம் என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, முஸ்லிம்கள், தாம் எதிர்கொள்கின்ற துன்ப, துயரங்களின்போது பொறுமை, சகிப்புத் தன்மையுடன் அவற்றை இறைவனிடம் பாரம்சாட்டி, பிரார்த்திப்பதே இஸ்லாம் காட்டும் வழிமுறையாகும். மேலும், மனிதனைப் புனிதப்படுத்துகின்ற நோன்பு எமக்கு கற்றுத்தந்துள்ள அனைத்து நற்பண்புகளையும் முழு வாழ்க்கையிலும் கடைப்பிடிப்பதன் மூலமே நாம் நோற்ற நோன்புகள் அரத்தமுள்ளதாக அமையும். அவ்வாறே நோன்பு நோற்று, ஏழை, எளியவர்களின் பசியையும் கஷ்டங்களையும் உணர்ந்துள்ள நாம், அவ்வாறானவர்களுக்கு உதவ பின்னிற்கக் கூடாது என வேண்டுகிறேன்.

மேலும், பல்லின சமூகங்கள் வாழ்கின்ற இந்நாட்டில் முஸ்லிம்கள் பிற சமூகத்தினருக்கு முன்மாதிரியாகவும் ஐக்கியம், சகோதரத்துவத்துடனும் வாழ திடசங்கற்பம் பூணுவோம். அவ்வாறே உலகளாவிய முஸ்லிம் உம்மத் எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடிகளில் இருந்து மீண்டு, அமைதி, சமாதானம், நிம்மதி ஏற்பட பிரார்த்திப்போம். அனைவரது வாழ்விலும் சுபீட்சம் மலரட்டும். அனைத்து முஸ்லிம்களுக்கும் இனிய பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

## இலங்கை திருநாட்டில் சுபிட்சம் மிளிரட்டும்



முப்பது நாட்களாக நோன்பு நோற்று அதன் மூலம் பெற்ற பயிற்சியை தொடர்ந்தும் கடைபிடிப்போம்.இன்று மகிழ்வுடன்

கொண்டாடும் புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தினத்தில் இலங்கை திருநாட்டில் சாந்தி சமாதானம் சுபீட்சம் நிலவ பிராத்திப்போம் என சமூக சேவையாளரும் எழுத்தாளருமான எம்.பாஸி ஸுபைர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, சில வருடங்களுக்கு முன்னர் உலகையே ஆட்டிப்படைத்த பயங்கர கொரோனா நோயின் தாக்கம் காரணமாக பல நாடுகள் பொருளாதாரத் துறையில் வீழ்ச்சி கண்டது. இதனால் இலங்கையும் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக நாட்டின் விலைவாசியும் உயர்வடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் வாழ் சகல இன மக்களும் நிம்மதி பெருமூச்சுடன் வாழ்ந்திடவும் பொருட்களின் விலைவாசி குறைந்திடவும் கூடிய சூழல் ஏற்பட்டிட இந்நாளில் இறைவனைப் பிரார்த்திப்போம்.

## ரமழானின் பயிற்சியை வாழ்வில் முன்னெடுப்போம்!



அல்குர்ஆன் இறங்கப்பட்ட மாதமான புனித ரமழான் மாதத்தை நாம் அடையப்பெற்று அதில் நாம் பல்வேறு வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு இறைதிருப்தியை மாத்திரம் எதிர்பார்த்து மேற்கொண்ட வணக்க வழிபாடுகளை வல்ல நாயன் அங்கீகரிக்க வேண்டுமென இன்றைய நன்னாளில் இரு கரமேந்தி பிரார்த்திப்போம் என பேருவளை இன நல்லிணக்க சபையின் நிறைவேற்று குழு உறுப்பினர் மபாஸ் மஷ்ஹூர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, ரமழான் மாதம் எமக்கு நீண்டதொரு பயிற்சியை எமது வாழ்க்கைக்கு தந்துவிட்டு பிரியாவிடை பெற்றுச்சென்றுள்ளது. பகல் நேரத்தில் நோன்பு நோற்று இரவு நேரத்தில் நின்று வணங்கினோம். அதேபோல் ஏழை எளியவர்களுக்கு இரக்கம் காட்டி பரஸ்பரம் ஒற்றுமையை பரிமாறிக் கொண்டோம். அந்த வகையில் நோன்பின் மூலமாக நாம் பெற்ற பயிற்சியை வாழ்வில் பின்பற்றி நடக்க வல்ல நாயன் அனைவருக்கும் அருள்புரிய வேண்டுமென இன்றைய நாளில் பிரார்த்திப்போம்.

## பெருநாளின் சந்தோஷங்களை ஏனைய சமூகங்களுடனும் பகிர்ந்து கொள்வோம்!

எமது தாய்நாடு இன்று எதிர்கொண்டிருக்கும் நெருக்கடியான பொருளாதார, அரசியல் சூழல்நிலைகளுக்கு மத்தியிலும் சர்வதேச தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்ற காலகட்டத்தில் புனித நோன்பு பெருநாளை ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் முஸ்லிம்கள் கொண்டாடுமாறு பழீல் மௌலானா பவுண்டேஷனின் தவிசாளரான அஷ் ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா (நளீமி) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, ரமழான் முழுவதும் நோன்பு நோற்று நல்லமல்களில் ஈடுபட்டு ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம்களுக்கும் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

ரமழான் நோன்பு எமக்கு கற்றுத்தந்த ஆன்மிக, பண்பாட்டு அம்சங்கள் ரமழான் அல்லாத காலத்திலும் எமது வாழ்வியல் அம்சங்களில் பின்பற்றப்படவும் பிரிவினை, அராஜகங்கள், அமைதியற்ற சூழ்நிலைகள் என்பனவற்றை தவிர்த்திடவும் பெருநாளின் சந்தோஷங்களை ஏனைய சமூக மக்களோடும் பகிர்ந்து கொண்டிடவும் தேசிய ஒற்றுமை, சகவாழ்வு, பொருளாதார சுபிட்சம் என்பன மேலோங்கிடவும் பழீல் பவுண்டேசன் பிரார்த்திக்கிறது.

## சமாதானம், நல்லிணக்கம் ஏற்ப அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் முஸ்லீம்கள் அனைவருக்கும் எனது பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன் ஈத் முபாரக் என கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மிராசாஹிப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, ரமழான் மாதம் முழுவதும் பசித்திருந்து, விழித்திருந்து, நல்லமல்கள் பல புரிந்து இன்று நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இந்த மகிழ்ச்சிகரமான நன்நாளில் ரமழான் கற்றுத்தந்த பாடங்களை நமது வாழ்நாளில் தொடர்ந்து கடை பிடித்து நடக்க உறுதி கொள்வோம்.

பிற மனிதர்களின் பசியை, பட்டினியை, துயரைப் புரிந்து கொள்கின்ற வாய்ப்பை வழங்கும் ஒரு மாபெரும் ஔடதமாக நோன்பு விளங்குகின்றது. நோன்பு நோற்பதன் மூலமாக இனிய குணம், உளத் தூய்மை ஏழைகளின் துயரை உணரும் தன்மை மனிதநேயம் போன்ற பல்வேறு நற்பண்புகளை ஒரு மனிதன் அடைந்து கொள்கின்றான். மேலும் எமது நாடு எதிர் கொண்டுள்ள பொருளாதார பின்னடைவு மிக விரைவில் நீங்கிட இந்நன்நாளில் இறைவனிடம் இரு கரமேந்தி பிராத்திப்போம். முஸ்லீம்களாகிய நாம் பிற மத சகோதர இன மக்களுக்கு முன் மாதிரியாக திகழ்வதோடு நாடு எதிர் பார்க்கின்ற நிம்மதி, சமாதானம், நல்லிணக்கத்தை அடைந்து கொள்வதற்கு முஸ்லீம்களாகிய நாம் அற்பணிப்புடன் செயற்பட இத்திரு நாளில் திடசங்கற்பம் பூணுவோம்.



# கிழக்கின் குரல்



## இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனுக்கு உயிர் அச்சுறுத்தல்

### மட்டு. மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

கடந்த 25 ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக பிள்ளையாரடி பிரதான வீதி பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது இராஜாங்க அமைச்சரின் பெயருக்கும் அவரது அமைச்சு பதவிக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் வார்த்தை பிரயோகங்களை உபயோகிக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாமல் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் (29) திகதி மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இளைஞர் மற்றும் விளையாட்டுதுறை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அவர் இதன்போது மேலும் கருத்து தெரிவிக்கையில்,..

கடந்த 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் அமைச்சரை தொடர்புபடுத்தி உண்மைக்கு புறம்பான செய்திகளை கூறி அமைச்சு பதவி குறித்து பதாகைகள் மூலம் காட்சிப்படுத்தி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை தனக்கு உள ரீதியான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும்,

அதுமட்டுமல்லாது நீதிமன்றில் ஒரு வழக்கு இடம்பெறும்போது உண்மைக்குப் புறம்பான விடயங்களை இவர்கள் திரிவுபடுத்தி வெளியிட்டு வருவதனால் இவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்காக எழுத்து மூல ஆவணங்களை மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் இதன்போது தெரிவித்திருந்தார்.

## தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மேதின கூட்டம்



பெரியபோரதீவு தினகரன் நிருபர்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணத்திற்கான மேதின நிகழ்வு மட்டக்களப்பில் மாநகர மேயர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வானது அரசடி சந்தியில் இருந்து ஆரம்பமாகி கல்லடி மீனிசை பூங்கா வளாகத்தில் நிறைவுற்றது. நிகழ்வில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரன்.இரா.சாணக்கியன்.

அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா.பா.அரியநேந்திரன். சி.யோகேஸ்வரன்.ஞா.சிறிநேசன். கோடீஸ்வரன்.மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள்.

பிரதேசசபை தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் தொழில் சங்க பிரதிநிதிகள் கட்சி ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கட்டாக்காலி மாடுகளால் விபத்துச் சம்பவங்கள் அதிகரிப்பு

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

கல்முனை பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வீதியில் பயணிப்போர் விபத்துக்களுக்குள்ளாகிவருகின்றனர். கல்முனை மாநகர சபை இவ் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை இல்லாதொழிப்பதற்கு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அண்மைக்காலமாக கல்முனை நகர் பகுதியிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் கட்டாக்காலி மாடுகள் அங்கும் இங்குமாக நடமாடிவருகின்றது. வீதியின் நடுவில் படுத்துறங்குவதும், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நிற்பதுமாக மாடுகள் அலைவதனால் வாகனங்களில் பயணிப்போர் மிகுந்த அசௌகரியங்களுக்குள்ளாகிவருவதுடன், விபத்துக்களுக்கும் உள்ளாகிவருகின்றனர். அத்துடன் பாதையோரங்களில் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், முதியோர்கள் இவ் கட்டாக்காலி மாடுகளால் ஆபத்துக்களையும் சந்தித்து வருகின்றனர்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் ஸ்தலத்தில் பலி

### ஒருவர் படுகாயம்

மாளிகைக்காடு குறூப் நிருபர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனங்காடு பிரதேசத்தில் ஞாயிறு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் ஸ்தலத்தில் பலியானதுடன் , ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி விபத்தில் வினாயகபுரத்தைச் சேர்ந்த இருவர் பலியானதுடன் , பனங்காடு பிரதேசத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் எதிரே இருந்த தூண் ஒன்றில் மோதியே இவ் விபத்து இடம்பெறுள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

### அக்கரைப்பற்றில்

## சர்வதேசப்பிறை அடிப்படையில் இடம்பெற்ற பெருநாள் தொழுகை





அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

சர்வதேசப்பிறை அடிப்படையில் புனித நோன்புப் பெருநாள் தொழுகை அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதான திறந்த வெளியில் நேற்று திங்கட்கிழமை (02) காலை 6.30மணிக்கு இடம்பெற்றது. அக்கரைப்பற்று அஹ்லுஸ் ஸூன்னா ஜூம்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பெருநாள் தொழுகை மற்றும் பேருரையை அஷ்ஷேக் எம்.ஐ.அன்ஸார் (தப்லீகி) நிகழ்த்தியதோடு, இதில் பெருந்திரளான ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டனர்.

குடும்ப உறவுகளுக்கிடையிலான நல்லுறவும், இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, சாந்தி சமாதானம், பிறருக்கு உதவுதல், வறுமையில் இருப்பவர்களை கண்டு முடியுமானவரை உதவுதல், தாய் தந்தையினரை அரவணைத்து நடத்தல் என்பது பற்றி இப்பேருரையில் வலியுறுத்தப்பட்டது.

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தின விழா



காரைதீவு குறூப் நிருபர்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் இணைந்து நடாத்திய நாவுக்கரசு நாயனார் குருபூசை தின விழாவானது திருக்கோவில், விநாயகபுரம், திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் ஞாயிறு காலை 9.00 மணிக்கு இடம்பெற்றது. இந்நிகழ்வு சிவ ஸ்ரீ நீ.அங்குச நாதகுருக்கள் திரு முன்னிலையில் இடம்பெற்றது. கண.இராஜரெத்தினம் பணிப்பாளர் திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

## வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரனின் கன்னி கவிதை நூல் வெளியீட்டு விழா

காரைதீவு குறூப் நிருபர்

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரனின் “ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள்” கவிதை நூல் வெளியீடு சனிக்கிழமை (30) மட்டக்களப்பு பிள்ளையாரடி தமிழ்ச் சங்க கலையரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு தமிழ்ச்சங்க தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு



முன்னிலை அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத்தலைவர் பேராசிரியர் செ. யோகராசா கலந்து சிறப்பித்தார்.



“வீட்டுக்கு நல்ல பிள்ளை, சமுதாயத்திற்கு நல்லமனிதன், நாட்டுக்கு நல்ல பிரஜை”' எனும் தொனிப்பொருளில் இஸ்லாமிய விழுமியங்களுக்கமைவாக அறிவு, ஆளுமை, திறன் அபிவிருத்தி போன்ற துறைகளில் பதின்ம வயதினரை வலுவூட்டும் நிகழ்வில் சிறப்பாக பயிற்சிபெற்ற மாணவர் மாணவியர்களுக்கு சான்றிதழ், விருது வழங்கும் நிகழ்வு ஒன்று (27) அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது,... (படங்கள்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

## சாய்ந்தமருதில் இரவில் வீசும் துர்நாற்றம்

### வெளிவராத உண்மைகள்







சாய்ந்தமருதில் சில நாட்களாக பிந்திய மாலை பொழுது முதல் அதிகாலை நேரம் வரை பலத்த துர்நாற்றம் வீசிவருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் கருத்து தெரிவித்த சாய்ந்தமருது ஜும்மா பெரியபள்ளிவாசல் நிர்வாகிகள்,

பிரதேச வாசிகள் இந்த துர்நாற்றம் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் விலங்கறுமனையிலிருந்து வருவதாகவும், மாட்டின் என்புகள் மற்றும் மாட்டின் தோலை தீயிட்டு அழிப்பதனால் வரும் துர்நாற்றம் என்றும் தெரிவித்ததுடன் இந்த துர்நாற்றம் காரணமாக குடியிருப்பு பிரதேசங்களில் நாங்கள் பல சங்கடங்களை அனுபவிப்பதாகவும் இது தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு அறிவித்தும் பயனில்லை என்றும் சுகாதார அதிகாரிகள், கல்முனை மாநகர சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய குறித்த விலங்கறுமனைக்கு திடீரென களவிஜயம் மேற்கொண்டுபார்வையிட்டபோது இந்த விலங்கறுமனையில் மாடுகளை அறுக்கும் இடம் சுத்தமாக இருந்தது டன் உப்பு மற்றும் இரசாயன பதார்த்தங்களை கொண்டு மூன்று மாதமளவில் சேர்க்கப்பட்ட தோலை பதப்படுத்தி வைத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்த விடயம் தொடர்பில் கல்முனை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் கூறியதாவது,...

கல்முனை மாநகர சபை நிர்வாகத்தினால் செய்யவேண்டிய இந்த விலங்கறுமனையை வளப்பற்றாக்குறை மற்றும் பல காரணங்களினால் தனியார் ஒருவர் செய்துவருகிறார். குறித்த துர்நாற்ற விவகாரம் தொடர்பில் நானறிந்துள்ளேன்.

துரதிஷ்டவசமாக எழுத்துமூல முறைப்பாடுகள் என்னுடைய கைக்கு இதுவரை கிட்டவில்லை. கல்முனை முதல்வரின் பூரண ஒத்துழைப்பும், இந்த பிரச்சினைகளை தீர்க்க கூடிய வளங்களும் கிடைத்தால் நிரந்தர தீர்வை வழங்கி இந்த பிரச்சினையை தீர்க்க தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

கல்முனை மாநகர முதல்வர்சட்டத்தரணி ஏ.எம். றக்கீப், கல்முனை மாநகரசபை உறுப்பினர்கள், சுகாதாரத்துறை அதிகாரிகள் தலையிட்டு இந்த பிரச்சினைக்கு தீர்வை வழங்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.




# இராகலையில் பிரதேச செயலகத்தை அமைக்குமாறு கோரிக்கை




வலப்பனை தேர்தல் தொகுதியில் புதி தாக உருவாக்கப்பட்டுள்ள மேலதி க பிரதேச செயலகத்தை இராக லை நகருக்கு மாற்றி தர உடன டி நடவடிக்கை எடுக்குமாறு தோ ட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமாருக்கு வலப்பனை பிரதேச சபை உறுப்பினர் பெருமாள் சண்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலப்பனை தேர்தல் தொகுதியில் மேலதிக பிரதேச செயலகம் ஒன்று தேவையாகவுள்ளது. இதை இராகலை நகரில் அமைக்க வேண்டுமென கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்கள் இராகலை நகரில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இருப்பினும் வலப்பனை பிரதேசம் நில்தண்டாஹின பகுதியில் வலப்பனை தேர்தல் தொகுதிக்கான பிரதேச செயலகம் இன்று இயங்குகிறது.

இப்பிரதேச செயலகத்தின் சேவைகளை பெற்றுக்கொள்ள இராகலை, உடப்புஸலாவை, ஹைபொரஸ்ட், பிரதேச தோட்டப் பகுதி மக்கள் உள்ளிட்ட கிராம புற மக்கள் பயண அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதனை கருத்திற் கொண்டு கடந்த அரசாங்கத்தில் நுவரெலியா மாவட்டத்திற்கு மேலதிக பிரதேச செயலகங்களை வழங்கவும்,அதில் வலப்பனை தொகுதிக்கு வழங்கும் பிரதேச செயலகத்தை இராகலையை மையமாக கொண்டு அமைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டு வந்தது.

இருப்பினும் வலப்பனையில் பழைய பிரதேச சபை கட்டடத்தை மீள் புனரமைப்பு செய்து அதில் மேலதிக பிரதேச செயலக காரியாலயமாக இது இரகசியமாக திறக்கப்பட்டுள்ளது.

இதன் பின்புலத்தில் வலப்பனை பிரதேச பெரும்பான்மை அரசியல்வாதிகள் செயற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் வலப்பனையில் இரண்டு பிரதேச செயலகங்கள் சொற்ப தூரங்களில் அடுத்தடுத்து திறக்கப்பட்டுள்ளமை இராகலை பிரதேச மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியாகும்.

எனவே இது தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலாளர் உள்ளிட்ட வலப்பனை பிரதேச சபை தவிசாளர் மற்றும் அதிகாரிகளின் கவனத்திற்கும், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மத்திய மாகாண ஆளுநரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆனால் மேலதிக பிரதேச செயலகத்தை இராகலை நகரில் அமைக்க வேண்டும் என்ற எமது கோரிக்கையை கண்டுகொள்ளாது தற்போது வலப்பனையில் இச்செயலகத்தை திறந்துள்ளனர்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பில் உண்மை தன்மையையும் மக்களின் கோரிக்கையையும் ஏற்று தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் தாங்கள் உரிய தீர்வினை பெற்று தருவதுடன் இராகலை பிரதேச மக்கள் நலனில் அக்கறை கொண்டு மேலதிக பிரதேச செயலகத்தை இராகலை நகரில் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெருமாள் சண்முகம் தனது வேண்டுகோள் முன்வைத்துள்ளார்.

ஆ.ரமேஸ்



வீட்டு வேலை பணிப்பெண்கள் சங்கத்தின் மேதின ஊர்வலம் ஹற்றனில் இடம்பெற்றது.
படம்: கினிகத்தேனை தினகரன் நிருபர்

# தெங்கு, கித்துள் பாரம்பரிய உற்பத்தி துறை வீழ்ச்சி

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பாரம்பரிய தென்னை கித்துள் மரங்கள் மூலம் தயாரிக்கப்படும் கித்துள் பாணி, கருப்பட்டி வகைகள் மற்றும் சாராய உற்பத்திகள் அருகி வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது. இந்நிலைமையினால் இத்தொழிற்துறை எதிர்காலத்தில் இல்லாமல் போகும் கவலைக்குரிய நிலைமை உருவாகி வருவதாக இத்தொழிலில் ஈடுபட்டு வரும் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இலங்கையில் புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படாத பழைய பாரம்பரிய நடைமுறையிலுள்ள ஒரே தொழிற்துறை இதுவாகும் என தெரிவிக்கும் இவர்கள் ஏனைய மதுபான உற்பத்தித்துறைகளுக்கு மூலப்பொருளாக விளங்கும் தமது உற்பத்தி முயற்சிகளுக்கு வழங்கும் ஒத்துழைப்பு தமக்கும் கிடைத்தால் இத்துறையை வினை திறனுள்ளதாக மாற்றியமைக்க முடியும் என இவர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

# பண்டாரவளையில் வெளிநாட்டு நிதியுதவியில் பல்நோக்கு கட்டடம், ஓய்வு விடுதி நிர்மாணிப்பு

**ஹாலிஎல விசேட நிருபர்**

பண்டாரவளை கினிகம பிரதேசத்தில் பல்நோக்கு கட்டடம் மற்றும் விடுமுறை விடுதி என்பன நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

வெளிநாட்டு நிதியொதுக்கீட்டின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தி உதவித்திட்டத்தின் மூலம் இவை நிர்மாணிக்கப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பண்டாரவளை நகரபிதா ஜனக நிஷாந்த ரத்நாயக்க தலைமையில் இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த அவர்,

நம் நாட்டுக்கான வெளிநாட்டு நாணயம் அத்தியாவசியமான இக்காலத்தில் பிராந்திய அபிவிருத்தி உதவித் திட்டத்தின் ஊடாக இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் வேலைத்திட்டத்தில் பண்டாரவளை மாநகர சபைக்கு வழங்கும் மற்றுமொரு மானியமாக இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக பண்டாரவளை நகரபிதா ஜனக நிஷாந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

" பண்டாரவளை தேர்தல் பிரிவில் கினிகம பிரதேசத்தை மையப்படுத்தி இந்த பல்நோக்கு கட்டிடம் மற்றும் விடுமுறை விடுதியை நிர்மாணிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இலங்கையில் தற்போது நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடியில் இவ்வாறு பெறப்படும் வெளிநாட்டு நாணயத்தின் பெரும்பகுதி அபிவிருத்தி நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

ஏனென்றால், அப் பணம் கடன் அல்ல, திருப்பிச் செலுத்தப்படாத நன்கொடை. எவ்வாறாயினும், இப் பணத்தைப் பயன்படுத்திக் கூடிய விரைவில் கட்டுமானப் பணிகளை முடித்து அதன் மூலம் அப் பகுதிக்கு நன்மை செய்வதே எங்கள் நோக்கம். எனவே, இதன் கட்டுமானப்பணிகள் விரைவில் முடியும் வரை தொடர்ந்து கண்காணிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பண்டாரவளை மாநகர சபையின் பிரதி மேயர், மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# கந்தப்பளையில் டெங்கு பரவும் அபாயம்

**பூண்டுலோயா நிருபர்**

நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட கந்தப்பளை தேயிலை மலை தோட்டத்தில் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தாமையால், டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தோட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தோட்ட மக்கள் தெரிவிக்கையில்,

கடந்த பத்து வருடத்திற்கு மேலா குப்பைகளை முறையாக அப்புறப்படுத்தாமையினாலும் தோட்ட நிர்வாகம் கண்டுகொள்ளாமல் இருப்பதனாலும் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தோட்ட நிர்வாகங்கள் குப்பைகளை அப்புறப்படுத்த சிலரை நியமித்து முறையாக பராமரித்து வந்தார்கள். ஆனால் தற்போது முறையாக பராமரிக்க தோட்ட நிர்வாகம் முன்வராமையால் குப்பை குழிகள் நிரம்பி வழிகின்றன.

இதற்கு அருகாமையில் வீடுகள் காணப்படுகின்றமையினால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதுடன், துர்நாற்றமும் வீசுவதாக தெரிவிக்கின்றனர். எனவே தோட்ட நிர்வாகம் நோய்கள் பரவ முன் விரைந்து, இதற்கான தீர்வை பெற்றுத்தருமாறு கந்தபளை தேயிலை மலை தோட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மேதின நிகழ்வுகள்



இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி, நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையை கருத்திற் கொண்டு தொழிலாளர் தின நிகழ்வினை மேதின பிரார்த்தனை நிகழ்வாக மாப்பாகலை பெருந்தோட்டப் பிரிவு முன்றலில் நடாத்தியது.

மே தினப் பிரார்த்தனை நிகழ்விற்கு இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாம் ஆகிய சர்வ மதத்தவர்களும், பெருந்தோட்ட மக்களும், சமூக நலன் விரும்பிகளும், ஊடகத் துறையினரும் கலந்துகொண்டிருந்தனர். உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொல்லப்பட்டவர்கள், பொருளாதார நெருக்கடி காரணமாக கியூ வரிசைகளில் நின்று மரணமடைந்தவர்கள், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு மரணமடைந்தவர்கள் உள்ளிட்டவர்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் இதன்போது இடம்பெற்றன.

இந் நிகழ்வுகள் அனைத்தும், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி நிதிச் செயலாளர் இராஜநாயகம் சலோபராஜா தலைமையில் நடைபெற்றது.

# இந்திய அரசாங்கம் வழங்கும் உதவிகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

எமது மக்களின் பல்வேறு தேவைகளை முன்னிலைப்படுத்தி பொதுஜன பெரமுனவுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே ஆதரவு வழங்கினோம். ஆனால் எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி தவறிவிட்டார். அதனாலேயே அரசாங்கத்திலிருந்து வெளியேறும் முடிவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எடுத்ததாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான கணபதி கனகராஜ் தெரிவித்தார்.

கொட்டகலையில் நடைபெற்ற மே தின நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் மனப்பான்மையில் சிறுபான்மை மக்கள் இருக்கவில்லை. அவருக்கு கிடைத்த சில லட்சம் தமிழ் வாக்குகள் கூட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவினால் கிடைத்ததாகும். இந்த நாட்டின் சிறுபான்மை இனங்கள் முற்று முழுதாக நிராகரித்த போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மூலம் கிடைத்த சிறுபான்மை மக்களின் ஆதரவை வைத்து எமது மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப ஜனாதிபதி தவறிவிட்டார். நாங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து இருந்தாலும் அவற்றில் முக்கியமான சிலவற்றை கூட நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் இழுத்தடிப்புக்களை மேற்கொண்டு வந்திருக்கிறது. இன்று நாங்கள் எடுத்திருக்கின்ற தீர்மானம் மக்களின் பக்கம் நின்று எடுத்த தீர்மானமாகும்.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பொருத்தவரையில் எவரையும் சார்ந்து நின்று அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முயற்சிக்காமல் எமது மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் அமைப்பாக இருக்க வேண்டும் என்பதிலேயே அதிக நாட்டம் செலுத்துகின்றது. ஜனாதிபதி அழைத்திருந்த சர்வகட்சி மாநாட்டை புறக்கணித்தோம். அதற்குப் பிறகு ஜனாதிபதியுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் எமது நிலைப்பாட்டை தெட்டத்தெளிவாக ஜீவன் தொண்டமான் தெரிவித்திருந்தார். எமது குறைந்த பட்சத் கோரிக்கையையும் தெளிவுபடுத்தியிருந்தார். அவற்றில் சிலவற்றை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டிருந்தார்.

இருந்தாலும் இது கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் போன்றதொரு நிலையாகும். எமது கோரிக்கைகளில் ஒன்றான மத்திய மாகாண உதவி ஆசிரியர் நியமனம் நீண்ட கால தாமதத்துக்குப் பின் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தோடு இரண்டரை வருடங்கள் பயணித்திருக்கிறோம். எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் மலையகத்துக்கான பல்கலைக்கழகம், மற்றும் நுவரெலியா மாவட்டத்துக்கான பிரதேச செயலகங்கள் என்பனவற்றையாவது எஞ்சி இருக்கின்ற காலத்தில் நிறைவேற்றி மலையக மக்களிடமிருந்து நாம் பெற்றுக் கொடுத்த ஆதரவுக்கு ஜனாதிபதி மதிப்பளித்திருக்க வேண்டும்.

கல்வி சுகாதாரம் வாழ்க்கைத் தர அபிவிருத்தி என்பனவற்றுக்கு தேவையான ஆலோசனைகள் வழிகாட்டல்கள் என்பனவற்றுக்கு இந்திய அரசாங்கம் வழங்கும் உதவிகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை எமக்கு உதவுவார் என்ற எதிர்பார்ப்பு என்னிடம் இருக்கிறது. மொத்தத்தில் நாங்கள் உங்களிடம் இருந்து எதிர்பார்ப்பது இந்தியா இலங்கையில் இந்திய வம்சாவளியினரின் உணர்வுகளோடு ஒன்றிணைந்து இருக்கிறது தைரியத்தை எமக்குத் தாருங்கள் அது இந்த நாட்டிலே எமது ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு அடித்தளமாக அமையும் என்றார்.





மே தினத்தை முன்னிட்டு நேற்று மாலை கம்பளை இரட்டைபாதை நகரத்தில் பெருந்தோட்டத்திலுள்ள கல்வி கற்ற இளைஞர் யுவதிகள் ஒன்றிணைந்து " சுரண்டாதே சுரண்டாதே தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டாதே" இருளிலிருக்கும் மலையக கல்விக்கு வெளிச்சம் கிடைப்பது எப்போது"" மலையக மக்களின் அடிப்படை சம்பளத்தை உயர்த்த வேண்டும்" என பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டம் நடத்தினர்.
படம்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# ஆணொருவரின் சடலம் மீட்பு

**தலவாக்கலை குறூப் நிருபர்**



தலவாக்கலை கிறேட் வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தில் லயன் தொடர் குடியிருப்பொன்றின் பின்னால் இருந்த 9 அடி ஆழமான கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் (2) மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். வேலுராஜரட்ணம் வயது (50) இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். முதலாம் திகதி இரவு வெளியே சென்றவர் வீடு திரும்பாத நிலையில் வீட்டார் அவரை தேடியுள்ளனர்.

இந்நிலையில் வீட்டுக்கு பின்னால் இருந்த 9 அடி ஆழமான கிணற்றிலிருந்து நேற்று காலை அயலவர்களால் சடலமாக மீட்கப்பட்டார். சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் மரண பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

CHINT சீன வர்த்தக நாமம்

# சின்ட் பவர் சொலுசனுக்கு இடைக்காலத் தடையுத்தரவு

சீன வர்த்தக நாமமான 'CHINT'ஐப் பயன்படுத்தி மின் உபகரணங்களை உற்பத்தி, விநியோகம் மற்றும் விற்பனை செய்வதற்கு கொள்ளுப்பிட்டியை தளமாகக் கொண்ட சின்ட் பவர் சொலுசன் நிறுவனத்திற்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்.

சீனாவின் சின்ட் குரூப் கார்ப்பரேஷன் மற்றும் CHINT Electric Company ஆகியவை தாக்கல் செய்த வழக்கை பரிசீலித்த வர்த்தக மேல் நீதிமன்றம் இந்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

CHINT மின்சார உபகரணங்கள் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு Chint Power Solutions Pvt. Ltd, Galle Road, Colombo 3 மூலம் உள்நாட்டில் விநியோகிக்கப்படுகிறது. சிண்ட் பவர் சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் அதன் தலைவரும் நிர்வாக இயக்குநருமான சிவபாதம் ராகுலன் ஆகியோர் இந்த வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர். பிரதிவாதிகளுக்கு ஜூன் மாதம் 16ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த Chint Power Solutions (Pvt) Ltd ஆனது, உலகப் புகழ்பெற்ற சீன வர்த்தக நாமமான 'CHINT' மின் உபகரணத்தின் மொத்த விநியோகஸ்தராகச் செயற்பட்டதாகவும், பிரதிவாதி நிறுவனம் தேவையற்ற இலாபம் பெறுவதற்காக நிறுவனத்தின் வர்த்தக முத்திரையைப் போன்ற மின் உபகரணங்களை விநியோகிப்பதாகவும் பிரதிவாதி குற்றம் சாட்டியுள்ளார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மனோஜ் பண்டார, இதற்கு தடை விதிக்குமாறு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

'CHINT POWER' வர்த்தக முத்திரையானது இலங்கையின் தேசிய அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தின் பிரிவுகள் 09 மற்றும் 11 இன் கீழ், முறைப்பாடு செய்த CHINT குழும கூட்டுத்தாபனத்தின் அனுமதி மற்றும் அனுமதியின்றி இரகசியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

வாதிகளின் 'CHINT' வர்த்தக முத்திரை இலங்கையில் பதிவு செய்யப்படாததாலும், குற்றஞ்சாட்டப்பட்ட பிரதிவாதியின் பதிவை இரத்து செய்யாமல் பதிவு செய்ய முடியாததாலும் நியாயமற்ற போட்டியின் கீழ் பிரவாதிகள் வர்த்தக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

# திண்மக்கழிவு முகாமைத்துவம்; விசேட கலந்துரையாடல்

**புத்தளம் தினகரன் நிருபர்**

திண்மக்கழிவு முகாமைத்துவம் சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வாக புத்தளம் நகர சபையால் விரைவில் முன்னெடுக்கப்படவிருக்கின்ற குப்பை கூளங்களைப் பிரித்தெடுக்கும் வேலைத்திட்டம் சம்பந்தமான தெளிவூட்டல் கருத்தரங்கு (27) நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் தலைமையில் சர்வமத குருமார்களுடன் நகரசபை காரியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது நகரபிதா திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாட்டில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் சம்பந்தமான விடயங்களை தெளிவுபடுத்தினார்.

இதன்போது மதகுருமார்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் கலந்துரையாடப்பட்டன.


திகதி 01.05.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4749
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,769,400.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.17,124,623.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 5 4 7 0 9 5

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1241
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,453,800.00
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,143,887.60
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 3 9 6 5 5 3

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0058
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,357,540.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,127,000.40
இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 06 07 13 37

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 779
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,032,140.00
வெற்றி இலக்கினம் J வெற்றி இலக்கங்கள் 02 47 56 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,556,426.40

கோடி 24+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1097
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,454,820.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 250,120,806.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
C 19 01 34 42 56

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01






சுயாதீன தொலைக்காட்சி சேவையில் 35 வருடமாக தொடர் நாடகமான 'கோப்பி கடே'நாடகத்தின் 35 நாடக கலைஞர்களுக்கு நிலையத்தின் முன்னாள் பணிப்பாளரும், டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் 5000/: ரூபாய் வீதம் 175,000 வழங்கி வைத்த போது,..

# பெரியநீலாவணையில் பெருநாள் பொதி



**பெரியநீலாவணை விசேட நிருபர்**

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பெரியநீலாவணை தமிழ் முஸ்லிம் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பெருநாள் உணவுப் பொதிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் (01) நடைபெற்றது.

ஏ.ஆர்.எம். மன்சூர் பவுண்டேஷனின் உதவித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வை பெரியநீலாவணை சமூக அபிவிருத்திக்கான ஒன்றியம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்வில் ஏ. ஆர். எம். மன்சூர் பவுண்டேஷன் ஸ்தாபகரும் அவுஸ்திரேலியா முஸ்லிம் கவுன்ஸிலின் செயலாளருமான சட்டத்தரணி திருமதி மர்யம் மன்சூர் நளீமுடீன், அவருடைய கணவர் நளீமுடீன் சிஹாப்டீன், கல்முனை வடக்கு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.டெலினா, பெரியநீலாவணை சமூக அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் நிர்வாக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து பெருநாள் வாழ்வாதார உதவிகள் அவசியப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கி வைத்தனர்.


සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை சேவைக்கருமபீடங்களில் 2021 ஒக்டோபர் 31ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2022 மே 13ம் திகதி மு.ப. 9.30க்கு நடைபெறும்.

| கிளை/ சேவைக்கருமபீடம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி-கொட்டுகொடல்ல, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை , யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே. மாத்தளை மற்றும் தம்புன்னை | 2021 ஒக்டோபர் 31ம் திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், குருணாகலை நகரக்கிளை, இல. 36, நீர்க்கொழும்பு வீதி, குருணாகலை |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

பதிவு இலக்கம்: PB 917PQ

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08


## கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2022 - 2023

### பிரதேச செயலாளர் பிரிவு - புத்தளம்

2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01ம் திகதி முதல் 2023ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் திகதி வரையுள்ள காலத்திற்கான கள்ளுத்தவறணை குத்தகை மீள் விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் 2022.05.24ம் திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

***இலக்கம்*** : 01

***பிரிவு*** : புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு

***கிராமம்*** : சேனைக்குடியிருப்பு

***தவறணை திறந்து வைக்கப்பட்டிருக்கும் நேரங்கள்*** : காலை 10.00 முதல் பி.ப. 2.00 மணி வரை பி.ப. 5.00 முதல் இரவு 9.00 மணி வரை

***தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும்*** : 2022.05.24 மு.ப. 10.30 மணி வரை

***கேள்விப்பத்திர வைப்புப் பணம் :*** ரூபா 1,000.00

02. மேலதிக தகவலுக்காக 2022.05.06 திகதிய வர்த்தமானி அறிவித்தலை பார்க்கவும்.

**பிரதேச செயலகம், புத்தளம். 2022.04.18**

**எஸ்.ஏ.வை.ஆர். ஜயதிலக பிரதேச செயலாளர், புத்தளம்.**

## கொழும்பு மாநகர சபை

### கொழும்பு மாநகர சபையின் மூலம் 2021.9.17 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி இல.: 2245/30 இல் பிரசுரிக்கப்பட்டது

(1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற தரப்படுத்தப்பட்ட துணைவிதிச்சட்டம்) 1989.01.20 ஆம் திகதியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி இல. 541/17துணைவிதிச் சட்டத்தின் பகுதி V இன் பிரகாரமான கேள்வி அறிவித்தல்

## கேள்விகள்/ விலைமனுக்களின் மூடும் திகதியின் நீடிப்பு

2022.04.08 ஆம் திகதியன்று டெயிலி நியுஸ், தினகரன் மற்றும் தினமின ஆகிய புதினப்பத்திரிகைகளில் பின்வரும் சேவை/ வேலைகளின் வழங்கலுக்காக பிரசுரிக்கப்பட்ட நீடிக்கப்பட்ட மூடும் திகதியான 2022.04.25 ஆம் திகதி தொடர்பானது.

| தொடர் இல. | கேள்வி இலக்கம் | விளக்கம் |
|---|---|---|
| 01. | ME/ME/ML/38/2022 | Public Private Partnership project on Advertising and Maintenance of 250 Bill Boards in the City of Colombo |
| 02. | ME/ME/ML/39/2022 | Public Private Partnership project on Advertising and Maintenance of Bus Shelters in the City of Colombo – Phase I |

மூடும் திகதியானது 2022.05.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதென விலைமனுதாரர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இதற்கமைவாக, விலைமனு/கேள்வி ஆவணமானது 2022.05.10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் வழங்கப்படும்.

**ரொஷானி திசாநாயக்க - சட்டத்தரணி,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

### நீர்கொழும்பு மாநகர சபை

## கேள்வி அறிவித்தல்

நீர்கொழும்பு மாநகர சபையினால் கீழ்க்காணும் குத்தகைகளை 2022.07.01 முதல் 02 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட இரு பிரதிகளுடனான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | குத்தகை | குறைந்த பட்ச கேள்வித் தொகை (ரு) | மீளளிக்கப் படும் வைப்புத் தொகை (ரு) | கேள்வி விண்ணப் பக் கட்டணம் (ரு) |
|---|---|---|---|---|
| 01 | ஏத்துகால கடற்கரைப்பூங்கா வாகன நிறுத்துமிட கட்டணம் அறவிடல் மற்றும் மலசலகூட அமைப்பு பராமரிப்பு | 1,346,400/- | 140,000/- | 3000/- |
| 02 | காமச்சோடை ஞாயிறு சந்தை | 9,023,040/- | 900,000/- | 3000/- |
| 03 | காமச்சோடை புதன் சந்தை | 5,612,700/- | 560,000/- | 3000/- |

**கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல்**
2022.05.03 முதல் 2022.05.17 ஆம் திகதி பி.ப.2.30 வரை நீர்கொழும்பு மாநகர சபை கணக்காளர் பிரிவில்

**கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைதல்**
2022.05.18ஆம் திகதி மு.ப.10.00

**அந்நேரத்தின் பின்பு சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்**
**கேள்விகள் திறத்தல்** - 2022.05.18 மு.ப.10.30 இற்கு

**நிபந்தனைகள்**

01. சகல கேள்விகளும் அவை வரி செலுத்தப்படும் தினம் முதல் ஒரு வருட காலத்திற்கு சட்ட ரீதியாக செல்லுபடியாகும் முதலாம் வருடத்திற்காக செலுத்தப்படும் கேள்வித் தொகைக்கும் 5% அதிகரிப்புடன் இரண்டாம் ஆண்டிற்கு குறித்த கேள்வி கட்டணமாக அறவிடப்படும்.
02. விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவது மாதிரிப்பத்திர கட்டணம் மற்றும் வைப்புத்தொகையை செலுத்தியதன் பின்னராகும்.
03. விண்ணப்பத்துடன் விநியோகிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்
04. கேள்விதாரரால் சபைக்குச் சொந்தமான சந்தைகளுக்கு கேள்விகளை சமர்ப்பிக்கும்போது கேள்வித்தொகையின் 06 மாத தொகைக்கு சமமான மற்றும் செல்லுபடியாகும் காலம் ஒரு வருடமான, மாநகர ஆணையாளரின் பெயருக்கு அரச அங்கீகாரம் பெற்ற வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட வங்கிப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. ஏனைய சபை சொத்துக்களுக்காக கேள்விப் பெறுமதி ரூ.800,000/- மேல் கேள்விகளை சமர்ப்பிக்கும்போது கேள்வித் தொகையில் 12 மாத தொகைக்கு சமமான மற்றும் செல்லுபடியாகும் காலம் ஒரு வருடமான, மாநகர ஆணையாளரின் பெயருக்கு அரச அங்கீகாரம் பெற்ற வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட வங்கிப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
06. கேள்விதாரருக்கு குறித்த துறையில் அனுபவம் இருப்பின், அது பற்றிய ஏற்கக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
07. சித்திகரமான கேள்விதாரரால் சபைக்கு சொந்தமான சந்தைகளுக்கு 03 மாத தொகையுடன் சம்பந்தப்பட்ட காசு வைப்பு ஒன்றையும், ஏனைய சொத்துக்களுக்கு 06 மாத தொகைக்கு குறித்த காசு வைப்பு ஒன்றையும், ஒரு வாரத்திற்குள் சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
08. விலைமனுக்களை சமர்ப்பிக்க முடிவது இலங்கை பிரஜைகளுக்கு மட்டுமே
09. உங்களால் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது மாதிரிப் பத்திரங்களை சரியாகப் பூர்த்தி செய்து வைப்பு பற்றுச்சீட்டை மூலப்பிரதியை இணைத்து மூலப்பிரதி , நகல்பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் மற்றும் மூலப்பிரதி அல்லது நகல் பிரதியெனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், கண்டி மாநகர சபை, நீர்கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் குறித்த தினம், குறித்த நேரத்திற்கு கிடைக்குமாறு அனுப்புதல் அல்லது நேரில் மாநகர ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களை மாநகர கணக்காளர் (031-2222275) மூலம் அறியலாம்.
10. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்து மூல அனுமதியுடையவருக்கு சமுகமளிக்கலாம்.
11. இக்கேள்வி பற்றிய இறுதித்தீர்மானம் சபைக்கு உரியது.

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**நீர்கொழும்பு**

**2022.04.29ஆம் திகதி**
**நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில்**

## 'மோட்டோ ஜிபி' ஸ்பெயின் கிராண்ட் பிரிக்ஸ்:

# பிரான்செஸ்கோ பெக்னய சம்பியன்!



மோ ட்டோ ஜி பி பந்தயத்தின் ஸ்பெயின் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில், டுகார்டி அணியின் பிரான்செஸ்கோ பெக்னய சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இளசுகளின் விருப்ப விளையாட்டாக இரசிக்கப்படும் மோட்டோ ஜிபி பந்தயம் நடப்பு ஆண்டு 21 சுற்றுகளாக பல்வேறு நாடுகளில் நடைபெறுகின்றது. அந்த வகையில் ஆண்டின் ஆறாவது சுற்றான ஸ்பெயின் கிராண்ட் பிரிக்ஸ், நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) ஜெரீஸ் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 110.6 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை நோக்கி, 25 வீரர்கள் மோட்டார் சைக்கிள்களில் சீறிபாய்ந்தனர்.இதில், டுகார்டி அணியின் பிரான்செஸ்கோ பெக்னய, பந்தய தூரத்தை 41 நிமிடங்கள், 00.554 வினாடிகளில் கடந்து முதலிடத்தை பிடித்தார். அத்தோடு முதலிடத்திற்கான 25 புள்ளிகளையும் அவர் பெற்றுக் கொண்டார்.

இதையடுத்து, யமஹா அணியின் ஃபேபியோ குவார்டராரோ, 0.285 செக்கன்கள் பின்னிலையில் பந்தய தூரத்தை கடந்து இரண்டாவது இடத்தை பிடித்ததோடு, அதற்கான 20 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார்.

இவரையடுத்து, அப்ரில்லா அணியின் அலிக்ஸ் எஸ்பர்காரோ, 10.977 செக்கன்கள் பின்னிலையில் பந்தய தூரத்தை கடந்து மூன்றாவது இடத்தை பிடித்தார். அதற்கான 16 புள்ளிகளையும் அவர் பெற்றுக் கொண்டார்.

இதுவரை நடந்து முடிந்துள்ள ஆறு சுற்றுப் போட்டிகளின் அடிப்படையில், யமஹா அணியின் ஃபேபியோ குவார்டராரோ ஒரு சம்பியன் பட்டத்துடன் 89 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

அப்ரில்லா அணியின் அலிக்ஸ் எஸ்பர்காரோ ஒரு சம்பியன் பட்டத்துடன் 82 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், டுகார்டி அணியின் எனே பாஸ்டியானினி இரண்டு சம்பியன் பட்டங்களுடன் 69 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

ஏழாவது சுற்றான பிரான்ஸ் கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 15ஆம் திகதி புக்கர்டி சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

## அக்கரைப்பற்றில் உள்ளக கால்பந்தாட்ட அரங்கு

**அக்கரைப்பற்று வடக்கு நிருபர்**

இளைஞர்கள் மத்தியில் உள்ளக விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் அக்கரைப்பற்று மாநகர சபையின் நிதியொதுக்கீட்டில், அக்கரைப்பற்றில் உள்ளக கால்பந்தாட்ட அரங்கிற்கான அடிக்கல் நடப்பட்டு ஆரம்ப கட்ட வேலைகள் இடம்பெறுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா மற்றும் மாநகர முதல்வர் ஏ.அஹமட் ஸகி ஆகியோர் இணைந்து அண்மையில் இதற்கான அடிக்கல்லை நட்டி வைத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :
வாக்களித்தவர் பெயர் :
முகவரி :
மொபைல் இல. :

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 07-05-2022
இல. 06

நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170#
அழைத்து அல்லது SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
Non-Stop ஜொலி
SLTMOBITEL

# சிட்னியில் "ஒஸ்காரின்" சித்திரை கலாசார விளையாட்டு விழா




'ஒஸ்கார் "அமைப்பின் 2022ம் ஆண்டுக்கான சித்திரை கலாசார விளையாட்டுவிழாவும் ஒன்றுகூடலும் கடந்த 5ஆண்டுகளுக்குப்பிற்பாடு சிட்னி நகரில் parramatta park ல் இவ்வாரம் கோலாகலமாக நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவில் வதியும் காரைதீவு மக்களது அமைப்பான "ஒஸ்கார்"(AusKar) அமைப்பின் தலைவர் வீ.விவேகானந்தமூர்த்தி தலைமையில் இவ்வாண்டு அந்நிகழ்வுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.

கலாசார நிகழ்வுகளில் வரிசையில் மிட்டாய் பை ஓட்டம், பலூன் காலில் கட்டி உடைத்தல், சாக்கு ஓட்டம், தேசிக்காய் ஓட்டம், பணிஸ் உண்ணல், முட்டி உடைத்தல், சங்கீத கதிரை, கயிறிழுத்தல் முதலான சித்திரை புத்தாண்டை சிறப்பிக்கும் வகையிலான நிகழ்வுகளும் இனிதே நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளின் இடையில், Auskar Cricket Carnival 2022 என பெயரிடப்பட்டு Auskar power Hitters( Working committee team) vs Auskar Family Stars (Family members team)இடையிலான 8 overs மட்டுப்படுத்தப்பட்ட கண்காட்சி மென் பந்து கிரிக்கெட் போட்டியொன்றும் சுவாரஸ்யமாக இடம்பெற்றது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

இதன்போது ஒஸ்கார் அறிமுகம் செய்த புதிய TShirt (Baggy Green) ஐ Auskar Family Stars அணியும், நிர்வாக உறுப்பினர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ( (White) TShirt ஐ Auskar Power Hitters அணியும் அணிந்து போட்டியில் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும். இந்த போட்டியின் சாம்பியன் மகுடத்தை Auskar power Hitters அணி சுவீகரித்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், ஒஸ்கார் குடும்ப உறவுகள் நலன்விரும்பிகள் மற்றும் நண்பர்கள் என பலரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர். அனைவருக்கும் ஒஸ்கார் நிர்வாக குழாம் இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறது என" ஒஸ்கார் "செயலாளர் அ.மகேந்திரன் தெரிவித்தார்.

# இலங்கைக்கு எதிராக பலமான அணியை அறிவித்துள்ள ஆஸி

எதிர்வரும் ஜுன் மாதம், இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, மூவகைப் போட்டிகளும் கொண்ட கிரிக்கெட் தொடர்களில் ஆடவுள்ள நிலையில் இந்த சுற்றுப்பயணத்தில் பங்கெடுக்கும் தமது அணிகளை அறிவித்திருக்கின்றது.

அவுஸ்திரேலிய அணியின் இலங்கை சுற்றுப் பயணம் ஜுன் மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகி, ஜுலை மாதம் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில், இந்த சுற்றுப் பயணத்தில் 3 போட்டிகள் கொண்ட ரி 20 தொடர், 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் என்பன அடங்குகின்றன.

இந்த சுற்றுப் பயணத்தின் போது நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில், பேட் கம்மின்ஸ் தலைமையில் அறிவிக்கப்பட்டிருக்கும் 16 பேர் கொண்ட அவுஸ்திரேலிய டெஸ்ட் குழாம் இலங்கை வீரர்களை எதிர்கொள்ளவிருக்கின்றது.

ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பிற்காக நடைபெறவுள்ள இந்த டெஸ்ட் தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஆரம்பத் துடுப்பாட்டவீரரான மார்கஸ் ஹர்ரிஸிற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதேநேரம் வேகப்பந்துவீச்சாளரான ஜை ரிட்சர்ஸனிற்கும் டெஸ்ட் அணியில் ஓய்வு வழங்கப்பட்டிருக்கின்றது.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான ரி 20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஆடாது போயிருந்த முன்னணி வீரர்களான டேவிட் வோர்னர், ஜோஸ் ஹேசல்வூட், மிச்சல் ஸ்டார்க், ஸ்டீவ் ஸ்மித், மெதிவ் வேட் மற்றும் கிளன் மெக்ஸ்வெல் ஆகியோருக்கு இலங்கை அணிக்கு எதிராக நடைபெறவுள்ள ரி 20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

அவுஸ்திரேலிய டெஸ்ட் அணித்தலைவரான பெட் கம்மின்ஸிற்கு இலங்கை தொடரின் போது நடைபெறவுள்ள ரி 20 போட்டிகளில் ஓய்வு வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அதேவேளை, சுழல்பந்துவீச்சாளரான அடம் ஷம்பா தனது முதல் குழந்தையினை எதிர்பார்த்திருப்பதன் காரணமாக இலங்கை



சுற்றுப் பயணத்தில் ஆடும் வாய்ப்பை முழுமையாக இழந்திருக்கின்றார்.

இதேவேளை பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தின் போது தன்னுடைய முதலாவது சர்வதேச சதத்தினைப் பதிவு செய்த துடுப்பாட்டவீரர் மெக்டெர்மோட், கவுண்டி போட்டிகளில் ஆடிவரும் பந்துவீச்சு சகலதுறைவீரர் மைக்கல் நெஸர் ஆகியோருக்கும் இலங்கை சுற்றுப் பயணத்தில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் உள்ளடக்கப்படாது போன ஜை ரிட்சர்ட்ஸன், அவுஸ்திரேலிய ரி 20 அணியில் இணைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மறுமுனையில் இந்த சுற்றுப் பயணத்தின் போது, அவுஸ்திரேலிய ஏ அணியும் இலங்கை வரவிருப்பதோடு அவ்வணி ஹம்பந்தோட்டையில் நடைபெறவுள்ள நான்கு நாட்கள் கொண்ட 2 போட்டிகளிலும், 2 ஒருநாள் போட்டிகளிலும் பங்கெடுக்கவிருக்கின்றமை குறிப்பிடதக்கது.

அவுஸ்திரேலிய ரி 20 அணி – ஆரோன் பின்ச் (தலைவர்), ஷோன் எப்போட், அஷ்டன் ஏகார், ஜோஸ் ஹேசல்வூட், ஜோஸ் இங்கிலீஷ், மிச்சல் மார்ஸ், கிளன் மெக்ஸ்வெல், ஜை ரிச்சர்ட்ஸன், கேன் ரிச்சர்ட்ஸன், ஸ்டீவ் ஸ்மித், மிச்சல் ஸ்டார்க், மார்கஸ் ஸ்டொய்னிஸ், மிச்சல் ஸ்வப்சன், டேவிட் வோர்னர், மெதிவ் வேட்

அவுஸ்திரேலிய ஒருநாள் அணி – ஆரோன் பின்ச் (தலைவர்), அஷ்டன் ஏகார், அலெக்ஸ் கெரி, பேட் கம்மின்ஸ், கெமரோன் கீரின், ஜோஸ் ஹேசல்வூட், ட்ராவிஸ் ஹெட், மார்னஸ் லபச்சேனே, மிச்சல் மார்ஷ், கிளன் மெக்ஸ்வெல், ஸ்டீவ் ஸ்மித், மிச்சல் ஸ்டார்க், மார்கஸ் ஸ்டொய்னிஸ், மிச்சல் ஸ்வப்சன், டேவிட் வோர்னர்

அவுஸ்திரேலிய டெஸ்ட் அணி – பேட் கம்மின்ஸ் (தலைவர்), அஷ்டன் ஏகார், ஸ்கொட் போலன்ட், அலெக்ஸ் கெரி, கெமரோன் கீரின், ஜோஸ் ஹேசல்வூட், ட்ராவிஸ் ஹெட், ஜோஸ் இங்கிலீஷ், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபச்சேனே, நதன் லயன், மிச்சல் மார்ஷ், ஸ்டீவ் ஸ்மித், மிச்சல் ஸ்டார்க், மிச்சல் ஸ்வப்சன், டேவிட் வோர்னர்

அவுஸ்திரேலிய ஏ அணி – ஷோன் எப்போட், ஸ்கொட் போலன்ட், பீட் ஹன்ஸ்கொம்ப், ஆரோன் ஹார்டி, மார்கஸ் ஹர்ரிஸ், ட்ராவிஸ் ஹெட், ஹென்ரி ஹன்ட், ஜோஸ் இங்கிலீஷ், மெதிவ் குஹ்னமென், நிக் மெடின்சன், டோட் மேர்பி, ஜோஸ் பிலிப்பே, மேட் ரென்சாவ், ஜை ரிச்சர்ட்ஸன், தன்வீர் சங்கா, மார்க் ஸ்க்கேட்டே.

### சுற்றுத்தொடர் அட்டவணை

**ரி 20 தொடர்**
ஜூன் 7 – முதல் போட்டி – கொழும்பு
ஜூன் 8 – இரண்டாவது போட்டி – கொழும்பு
ஜூன் 11 – மூன்றாவது போட்டி – கண்டி

**ஒருநாள் தொடர்**
ஜூன் 14 – முதல் போட்டி – கண்டி
ஜூன் 16 – இரண்டாவது போட்டி – கண்டி
ஜூன் 19 – மூன்றாவது போட்டி – கொழும்பு
ஜூன் 21 – நான்காவது போட்டி – கொழும்பு
ஜூன் 24 – ஐந்தாவது போட்டி – கொழும்பு

**டெஸ்ட் தொடர்**
ஜூன் 29–ஜூலை 03 – முதல் போட்டி – காலி
ஜூலை 08–12 – இரண்டாவது போட்டி – காலி

**அவுஸ்திரேலிய ஏ அணியின் போட்டிகள்**
ஜூன் 8 – முதல் ஒருநாள் போட்டி – கொழும்பு
ஜூன் 10 – இரண்டாவது ஒருநாள் போட்டி – கொழும்பு
ஜூன் 14–17 – முதலாவது நான்கு நாட்கள் கொண்ட முதல்தரப் போட்டி – ஹம்பாந்தோட்டை
ஜூன் 21–24 – இரண்டாவது நான்கு நாட்கள் கொண்ட முதல்தரப் போட்டி – ஹம்பாந்தோட்டை

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 3ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.